# ஆடல் பாடல்

நாட
271

★

நான்கு அங்கங்களில்
ஒரு நாடகம்

★

கொடுமுடி ராஜகோபாலன்

# ஆடல் பாடல்

(நான்கு அங்கங்களில் ஒரு நாடகம்)

—: நாடகாசிரியர் :—

கொடுமுடி ராஜகோபாலன்

★

—: பிரசுரிப்பாளர் :—

நேஷனல் ரிஃபரன்ஸ் சென்டர்
திருவல்லிக்கேணி : : சென்னை-5.

Rights Reserved] [Price Re. 1/4.

முதல் பதிப்பு : ஆகஸ்டு '52

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 260
நன்கொடை எண்: 260

தமிழ் நாடகக் கலைக்குத் தனது எழுத்தாலும், ஜீவனுள்ள நடிப்பாலும் பெருந் தொண்டாற்றிய ராவ் பகதூர் **P. சம்பந்த முதலியாருக்கு** இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

City Printers, Madras-5.

# முன்னுரை

கடமையால் உரிமை பிறக்கிறது; உரிமையால் கடமை உண்டாகிறது. இந்த இரண்டும் பற்றியே இந்த நாடகத்தை வாசகர்களுக்கு நான் அறிமுகம் செய்துவைக்கிறேன்.

கொடுமுடி ராஜகோபாலன் என் நீண்டகால நண்பர். இதன் கையெழுத்துப் பிரதியை ஒன்றிரண்டு வருஷங்களுக்குமுன் என்னிடம் காட்டினார். அப்போதே ரஸித்தேன். இப்போது சில திருத்தங்கள் செய்து, சுவை மிகும்படி புதுப்பித்திருக்கிறார்.

நாடகங்களை வெறும் கதைப் போக்கைக்கொண்டு மட்டும் மதிப்பிட முடியாது; சம்பாஷணை, நடை, பாத்திரசித்திரம் இவைகளைக்கொண்டுங்கூட மதிப்பிடக்கூடாது.

ஏற்ற மேடை வேண்டும்; திறமையான நடிகர் வேண்டும்; அநுகுணமான சூழ்நிலை வேண்டும்—இந்த அங்கங்களோடு, நாடகங்களை நடிக்கச்சொல்லிப் பார்க்கவேண்டும். அப்போதுதான் அவைகளின் முழுச்சுவையையும் நாம் அநுபவிக்க இயலும்.

சொல்லப்போனால், நடித்துப் பார்க்காத நாடகத்தைப்பற்றி, நாடகக்கலையை நன்கு பயின்றவர்கள்கூட முடிவான தீர்ப்புச் சொல்ல முடியாது.

நண்பர் எழுதியிருப்பது ஒரு லட்சியத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு உருக்கொடுத்த நாடகம். இந்திய அரசியல் விடுதலைக்காகப் பேசியும், இயக்கத்தில் சேர்ந்து சிறை சென்றும், பண்பட்ட உள்ளமுடைய அவர் கண்ட 'கற்பனை உலகம்' இந்த நாடகத்தில் உறைகிறது.

நாடகக் கலைஞர்கள் என்ன நினைப்பார்களோ, எனக்குத் தெரியாது. இந்த நாடகத்தில் சில கட்டங்களை நடித்தால், மயிர்க்கூச்சல் எடுக்கும் என்று நான் நிச்சயமாய் நினைக்கிறேன். மற்றும் சில கட்டங்களில், நமக்குக் குதூகலமான சிரிப்பு வரும். வேறு சில கட்டங்களில், நம் உள்ளம் குழைந்துவிடும்.

காந்தி யுகத்தில் பிறந்து, அதில் வசியமான ஒருவர் எழுதிய ஒரு நாடகம் இது. இதில் துஷ்டநிக்ரக சிஷ்ட பரிபாலனத்தைப் பார்க்க முடியுமா? துஷ்டரும் நன்மையடைகிறார்கள். பிரத்யட்ச வாழ்க்கையின் விபரீதங்களை அப்படியே பிரதிபலிக்கும் கடுஞ் சோகம் இதில் இல்லை. நம் புராதன ஐதீகத்தைப் பின்பற்றி, சுபமான முடிவை இது அடைகிறது.

அங்கங்கே சம்பாஷணையில் அழகான கருத்துக்கள் நிறைந்திருக்கின்றன.

இந்த நாடகத்தை வெகு சீக்கிரத்தில் தகுந்த கலைஞர்கள் நடிக்க வேண்டும்; அதை நான் பார்க்கவேண்டும். இதுவே என் ஆசை.

தி. ஜ. ர.

# முகவுரை

தமிழ் நாடகக் கலையுலகில் புதுவேகம் தோன்றியிருக்கும் வேளையில் நான் என்னுடைய 'முதல் முயற்சி'யான இந்த நாடகத்தை வெளியிட்டிருக்கிறேன். நாடகக் கலையில் எனக்குள்ள தீவிர பற்றுதலின் விளைவே இந்த நாடக மலர்ச்சி. **''எந்த நாடகத்திலும் மக்களுக்கு ஒரு நேரான 'செய்தி' இருக்கவேண்டும்; இந்தச் செய்தியும் வாழ்வின் இன்ப—துன்ப உணர்ச்சிகளின் மத்தியிலேயே கம்பீரமாக ஒலிக்க வேண்டும்''** என்று காலஞ் சென்ற பேராசிரியர் **பெர்னார்டு ஷா,** மிக அழகாக நாடக லட்சியம்பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட திருஷ்டியில்தான் நான் இந்த நாடகத்தை எழுதியிருக்கிறேன். இதில் நான் எவ்வளவு தூரம் வெற்றி-தோல்வியடைந்திருக்கிறேன் என்பதற்கு, வாசகர்களும், நடிகர்களும், நாடகாசிரியர்களும், விமர்ச்கர்களுமே தீர்ப்புக் கூறவேண்டும்.

சினிமா பாணியில்லாத, ஜீவனுள்ள முறையில், சென்ற வருஷம் சென்னைக்கு விஜயம் செய்த **பிரிட்டிஷ் நாடக கோஷ்டியினர் அமரன் ஷேக்ஸ்பியரின்** நாடகங்களை நடித்துக் காண்பித்தார்கள். அதைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இன்று, நாடகமேடையில் நடிப்பவர்கள், சினிமா நடிகர்கள்போல குறைந்த அளவில் பேசி, சினிமா ஒளி-வர்ண ஜாலங்களின் மத்தியில் மின்னல் வேகத்தில் தோன்றி-மறைவது போன்ற நுண்கலையைப் பின்பற்றியே நடிக்க ஆசைப்படுகிறார்கள். மனிதனுடைய எல்லாவித பாவங்களையும் எல்லாக் கோணங்களின் வழியாகவும் இயற்கையான-பிரத்தியட்சமான போக்கில் தெரியப்படுத்தும் ஒரு காலக்கண்ணாடியே நாடகமேடை. எனவே, நடிப்பின் மூலமும், சம்பாஷணை மூலமும், காலம்-பாத்திரத்திற்கேற்ற உடைகள் மூலமும், **பூரணமாகப்** பல காட்சிகளைச் சித்தரித்துக்காட்டவே நாடக மேடை, சினிமாவென்ற நவீனக் கலைக்கு முற்றிலும் வேறாக, இருக்கிறது என்பதை நாம் அனைவருமே உணரவேண்டிய காலமிது. அப்படிப்பட்ட உணர்வினில்தான் நமது நாடகக் கலை வளமான பாதையில் முன்னேற வேண்டுமென்பது என் ஆசை.

இந்த நாடகம் **'ஞானோதயம்'** என்ற தலைப்பில், திருச்சியிலிருந்து வெளிவரும் **''சிவாஜி''** என்ற வாரப் பத்திரிகையி
தொடர்ச்சியாகப் பிரசுரிக்கப்பட்டது. அதன் தொகுப்பே இந்
புத்தக வடிவ நாடகம். புத்தக ரூபத்தில் இந்த நாடகம் வெளி
அனுமதிதந்த எனது நண்பரும், **''சிவாஜி''** ஆசிரியருமான
**திருலோக சீதாராமன்** அவர்களுக்கும், இதை அச்சிட்டு உத
**''சிடி பிரிண்டர்ஸ்''** உரிமையாளர் ஸ்ரீ **V. T. கோபாலன்**
களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறே

சென்னை,
22-8-1952.

**கொடுமுடி ராஜகோபால**

# ஆடல் பாடல்

---

## நான்கு அங்கங்களில் ஒரு நாடகம்

### நாடக பாத்திரங்கள்

| | |
|---|---|
| கிருஷ்ண தேவராஜன் | —உதயபுரி அரசர் |
| சந்திர சேனன் | —அரசரை ஆட்டுவிக்கும் ஒரு யதேச்சாதிகாரி |
| பிரபாகரர் | —பிரதம மந்திரி |
| அசோகன் | —ஒரு பாடகன் |
| முரளிதரன் | —அசோகனின் சீடன் |
| ரஞ்சித், ராகுலன், சேகர் | —முரட்டு மனிதர்கள் |
| விமலன் | —சந்திரசேனனின் கையாள் |
| கரு[illegible]ளன் | —சந்திரசேனனின் மைத்துனன் |
| வாஸந்தி | —நாட்டியக்காரி |
| பூர்ணிமா | —வாஸந்தியின் சிநேகிதை |
| மஞ்சரி | —வாஸந்தியின் தாய். (தாசி) |
| மாலதி | —சந்திரசேனனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண். |

(சந்நியாசி, வியாபாரி, நடிகர், சிறையதிகாரி, கொலையாளிகள், கவிராயர்கள், பாடகர்கள், வேலையாட்கள், குதிரை வீரர்கள் முதலியோர்)

# ஆடல் பாடல்

---

[நான்கு அங்கங்களில் ஒரு நாடகம்]

## அங்கம் 1 ] காட்சி 1 ]

[அசோகனின் குடிசை. மலர் நிறைந்த குளிமையான சோலையின் நடுவே ஆசிரமம் போல அந்தக் குடிசை அமைந்துள்ளது. காலை மந்த மாருதத்தின் ஸ்பரிசத்தால் குடிசைமீது படர்ந்திருந்த மல்லிகைக் கொடிகள் துவண்டு வளைந்திருந்தன.

மான்தோல் ஆசனமொன்றில் அசோகன் உட்கார்ந்து கொண்டு பாடிக்கொண்டிருக்கிறான்.

**ராகம் :—சிந்துபைரவி அல்லது நாத நாமக்கிரியை.**

1 கலைஞன் என் போன் யாரெனக்கேளீர்
  கடவுளின் தூதனாய் கண்ணெதிர் நிற்பான்
கொலை வழி நினையாக் குல மகனெனினும்
  கொடுமையைக் கண்டிடக் கொதித்திடும்வனுளம்
2 எழுத்திலு மிசையிலும் எண்ணத்தை நாட்டி
  எழிலுடைச் சிலையினில் ஏகத்தைக்காட்டி
தழுவிடு மன்புடன் அழிந்திடும் உலகினைத்
  தட்டியே யெழுப்பிடும் சக்தியே கொண்டவன்
3 அழகிய மலரிலும் ஆழக் கடலிலும்
  அனந்தனைக் காட்டிடும் அற்புதம் புரிவான்.
இளகிய நெஞ்சுடன் எளியவர் பக்கம்
  இருந்திடு முறுதியை என்றுமே காப்பான்
4 பொய்யே புகலான் புகழே விரும்பான்
  மெய்யான சேவையில் தெய்வம் காண்பான்
தாயினின் பரிவுடன் தரணியிலிருந்திடும்
  தத்துவம் கண்டிடும் சத்தியக் கலைஞன் !

அவன் எதிரில் தம்புரா சுருதி போட்டுக்கொண்டு முரளி உட்கார்ந்திருக்கிறான். இன்னும் சிலரும் உட்கார்ந்திருக்கிறார்கள். வீணையும், மிருதங்கமும் ஒரு மூலையிலிருக்கின்றன.

வாயிலில் கட்டப்பட்டிருந்த மான்குட்டி அசோகனின் பாட்டில் மெய் மறந்து நிற்கிறது.]

**அசோகன்** :—(பாடுவதை நிறுத்திவிட்டு)...முரளி !... (வீணையைச் சுட்டிக்காட்டி)...நீ அந்த வீணையின் நாதத்திலிருந்து உதிக்கும் கலையின் உபதேசத்தைத் தெரிந்து கொண்டாயா ?

முரளி :—குருஜி !... என் பக்கமிருக்கும் மிருதங்கத்தையே நான் கவனித்துக்கொண்டிருந்தேன்.

அசோகன் :—உனக்குக் கவனம் போதாது...நான் பாடிய பாட்டின் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டும்...... கலைஞன் கடவுளின் பிரதிநிதி; பூமியில் சிருஷ்டித் திறனை உண்டாக்கவே கடவுள் கலைஞனை அனுப்பியிருக்கிறார். இந்தப் பேருண்மையை எனது கலை இன்று எனக்குச் சொல்லிற்று !...

முரளி :—(கலவரத்துடன்)........சுவாமி ! ......ஒருக்கால் தங்களுக்கு........ஏதாவது உடம்புக் கோளாறோ ?

அசோகன் :—(சிரிக்கிறான்)......(சாவதானமாக)......இல்லை முரளி !.......வீண்பீதி கொள்ளாதே. நான் கலைஞனு, என்பது பற்றி நீ சந்தேகப்படாதே. உலகின் மறுமலர்ச்சிக்காக எவன் சேவை செய்கிறானே அவனே கலைஞன். தேவாம்சத்தின் உயர்ந்த ஆராதனையே கலையாகும்; கடவுள் தன்மையின் சீரிய சாதனையே கலையாகும்,

முரளி :—அப்படியானால் கோயில்களில் பூசை செய்யும் அர்ச்சகர்களும், மதகுருக்களும் சிறந்த கலைஞர்கள்தானே !

அசோகன் :—ஒருக்காலுமில்லை !........

முரளி :—கடவுளுக்குப் போட்டியாக நன்றிகேட்ட மனிதன் கல்-மண்-மர 'சுவாமி'களை ஏன் சிருஷ்டித்திருக்கிறான் ? .....'கடவுளின் பிரதிநிதி' என்ற பெயரால் யதேச்சாதிகார அரசர்களையும் அவன் ஏன் உண்டாக்க வேண்டும் ?........

அசோகன் :—முரளி !...அழகிய ரூபங்களும் கலைதான் !........ ஆனால், குருட்டு பக்தர்கள், கலைஞன் அமைத்த உரு வார்த்தத்தைப் புரிந்துகொள்ளத் தவறி 'விடுகிறார்கள் ......அவர்கள் தேவலம் உருவத்தைக் கும்பிட்டு விழுகிறார்களேயொழிய அதன் தத்துவத்தை அனுபவிப்பதில்லை..........யதேச்சாதிகார அரசர்கள் கடவுளின் விரோதிகளே !......

முரளி :—குருஜி !......உலகையே வசப்படுத்தும்சக்தி எந்தக் கலையில் இருக்கிறது ?

அசோகன் :—இசைக்கலையே சிறந்த வசீகரணக்கலையாகும்.

முரளி :—அப்படியானால் இசை பாடுகிறவர்கள் எல்லாம் நாத இன்பத்தை அனுபவிக்கிறார்களா ?......

அசோகன் :—'தெய்வீக' அம்சமில்லாதவர்கள் இன்ப நாத வெளியில் பரவசமாகி விடமுடியாது.

முரளி :—குருஜீ !......பாடகனின் 'தெய்வீக' அம்சம் என்ருல் என்ன ?

அசோகன் :—முரளி ! கேட்போரைப் பரவசம் அடையச் செய்வதே இசைவாணனின் 'தெய்வீக' அம்சம் !

முரளி :—இந்த அம்சம் இசைக்கு ஒரு இலக்கணமா என்ன ?

அசோகன் ;—முரளி ! இந்த அம்சமே இசையின் தனியழகு. ஆனல், மக்களின் மனதைக் குளிரச்செய்யும் கீதமே இன்பகீதம்........மேலும், மக்கள் இன்பமாக இருந்து மடியவேண்டும் ; துன்பத்தில் சாதல் கூடாது. இது தான் சங்கீத ரகஸ்யம் !

முரளி: —ஜனங்கள் துன்பத்தில் சாதல் கூடாது... இது உண்மைதான். குருஜீ! இது அரசாங்கத்திற்கும் பொருந்தக் கூடியதுதானே !...பொதுவாக அரசர்களே கடவுளின் சத்துருக்கள் என்றீர்களே !...இந்த அரசர் சந்திரசேனனின் கைப்பொம்மையாகிவிட்டார். அவனுடைய அட்டகாசமோ பயங்கரமாகிவருகிறது. அவனுடைய திரை மறைவான லீலைகளை அம்பலத்திற்குக் கொண்டு வர—இந்த அரசை மாற்ற நாதியில்லையா ?...மக்களுக்காகப் பாடும் தாங்கள் மக்களுடைய வேதனையைப் போக்க ஏன் தயங்குகிறீர்கள் ?.........

அசோகன் ;—முரளி !........நீ கேட்பது சரியே!.......... ஆத்திரப் படாதே!......மன்னவன் என்ருரு மனிதனில்லை என்பது உறுதியாகப் போகிறது......மக்களுக்காகவே ஆள்பவன் என்பதும் உறுதியாகப் போகிறது.. அந்தக் காலத்தை துரிதப்படுத்தவே இந்த அரசனும், இவனை ஆட்டுவிக்கும் சந்திரசேனனும் இவ்வளவு பயங்கரமான 'தர்பார்' நடத்துகிருர்கள்......ஆவேசப் படாதே!.......சந்தர்ப்பம் வரும்போது நானே இவர்களை எதிர்த்து நிற்பேன். உன்னத லட்சியத்திற்காக மன வலிமைகொண்டு போராடுபவரை. மிருகபலம் முடிவாக ஜெயித்துவிடமுடியாது !......பொறுமையாயிரு ......

அரசாங்கம் என்பது ஒரு வீணை ; அதன்மீது மேவும் விரலே ஆள்பவன். விரல் இங்கிதமாக, சரளமாக இணைந்து வீணையை மீட்டாவிட்டால், வீணையினின்று எழும் நாதம் இனிமையாக இருக்கமுடியாது. அது போல, ஆளுவோர் மக்களுடன் இரண்டறக் கலந்து சேவை செய்யாவிட்டால், நாட்டில் மக்கள் பயமின்றி,

(முரளி, வெளியே கட்டப்பட்டிருந்த மான்குட்டியை அவிழ்த்துக் கொண்டு தூரத்தில் இருந்த ஏரிக்கரைக்குப் போகிருன்)

[அசோகன் மீண்டும் பாடுகிருன்]

ராகம்:—கமாஸ்

**பல்லவி**

வாழ்வை வையாதே—மனிதா
வாழவிரும்பிடு: வாழ்ந்து களித்திடு!
(வாழ்வை),

**அ. பல்லவி**

ஆழ்ந்திடு முளத்துட னணைத்திடு அதனை
சூழ்ந்திடும் இருளினை ஓட்டிடு நிதமும்
(வாழ்வை).

**சரணம்**

தாழ் வினைப்புகுத்திடும் தாக்குதல் அனைத்தையும்
தளரா தெதிர்த்துமே தாங்கிடு அறத்தை!
பாழ்படு முலகினைப் பாலித்தருளும்
பரமமே நிலவிடும் பதந்தரும் சத்திய
(வாழ்வை).

**(ஏரிக்கரையில்)**

விமலன்:—(வந்துகொண்டே) டேய்! என்னடா! உன் குரு அரசாங்கத்தை எதிர்த்து ஒரு பெரிய பிரசங்கம் செய்தானே!...நீங்கள் என்ன மன்னருக்கு எதிராகச் சதி செய்கிறீர்களோ?...

முரளி:—பாட்டின் அலைகள் கடல் அலைகளைக்காட்டிலும் சுதந்திரமானது! அது எழுப்பும் ஆவேச உணர்ச்சி அகங்காரத்தை அமுக்கிவிடவல்லது!...... என் குருநாதரின் சக்தியை உம்மைப் போன்றவர்கள் அறியமாட்டார்கள்!

விமலன்;—நீயுங்கூட ஒரு அதிகப் பிரசங்கியாகிவிட்டாய்!... உங்களை யெல்லாம் வைக்கிற இடத்தில் வைக்க வேண்டும்!

முரளி ;—(கோபத்துடன்)...வாயை மூடிக்கொண்டு போமய்யா!...

விமலன்;—ஓஹோ...பரதேசிப் பாணர்களாகிய உங்களின் கொட்டத்தை முதலில் ஒடுக்கியாகவேண்டும் இல்லாவிட்டால் உங்கள் 'வியாதி' நாட்டிலெங்கும் பரவிவிடும்!

(போகிருன்)

முரளி;—(தனக்குள்)...பாவம்! அரண்மனைக்கடாஅவன்! தலை கால் தெரியாமல் துள்ளுகிருன். சரிந்துவிழும் சுவர்மீது உட்கார்ந்திருக்கிருன்!

(போகிருன்)

★ ★

## காட்சி 2

(மன்னவன் கிருஷ்ண தேவராஜனின் ராஜசபை. விசாலமான அழகிய தர்பார் மண்டபத்தில் அரசர் தங்கச் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிருர்.)

சந்திரசேனன் மிடுக்காக அரசருக்கு இடது புறம் கீழே உட்கார்ந்திருக்கிருன். மற்ற மந்திரிகள், பிரபுக்கள் தங்கள் தங்கள் ஆசனங்களில் வீற்றிருக்கிருர்கள்.

வாஸந்தி, தனது ஜாஜ்வல்யமான அழகுடன் மண்டபத்தின் நடுவே நடனமாடுகிருள். அவளது நடனத்தேர்ச்சி அரசரையும், சபையோரையும் பிரமிக்க செய்கிறது.

சந்திரசேனன் அவளது அழகைப் பருகிக் கொண்டு போதையில் ஆழ்ந்திருப்பவன் போலக் காண்கிருன்.)

அரசர்:—வாஸந்தி! உன் நடனத்தை நிறுத்திவிடு! உன் நடனம் பிரபஞ்சத்தையே ஆகர்ஷிக்கும் தன்மையுடையது. நீயே நடனராணி. இந்த ரத்னஹாரத்தைப் பெற்றுக் கொள்! (வாஸந்தி வணக்கத்துடன் அரசனுடைய பரிசை ஏற்றுக் கொள்ளுகிருள்)

சந்திரசேனன்;-(வாஸந்தியிடம்) ஆம்! நீயே பூலோக நடனராணி!.

விமலன்;—ஆம்! ஆம்! சர்வலோக நடன ராணி!

வாஸ்ந்தி;—(வெட்கத்துடன்) அன்பு மிகுதியால் என்னை எல்லோரும் புகழ்கிருர்கள்!

சந்திர:—அன்பு—அழகு—ஆசை மிகுதியால் உன்னைப் புகழாதவர் 'தோன்றலில் தோன்ருமை நன்று'!

விமலன்;—'பெண்ணின் அழகைப் புகழாத பேயான மனிதனின் கண்ணைப் பிடுங்கிக் கடலில் எறிந்துவிடு' என்பது பொன்மொழியன்ருே!

அரசர்;—பெண் தெய்வங்களைப் போற்றினுல்தான் எந்த அரசும் கீர்த்தியுடன் விளங்கமுடியும்! (பிரபாகரரைப் பார்த்து) இது விஷயத்தில் உமது அபிப்பிராயமென்ன?

பிரபாகரர்:—அரசே! பெண்களைக் கேவலம் காம உணர்ச்சியுடன் பார்க்கக் கூடாது, அன்பு—அடக்கம்—தியாகம் இவைகளின் உறைவிடமே பெண்மையாகும்!

சந்திர:—அரசே! முதுமையின் காரணமாக பிரபாகரர் ரஸிகத் தன்மையையே இழந்துவிட்டார்!

விமலன்:—(தனக்குள்) கிணற்றுத் தவளை! கிழட்டு முண்டம்! பழம் பஞ்சாங்கம்!

வாஸந்தி:—(அங்கிருக்கச் சகியாதவளாய்) அரசே! எனக்கு நேரமாகி விட்டது! போய்வர விடையளியுங்கள்!

சந்திர:—அதற்குள் சூரியன் அஸ்தமனமாய் விடலாமா?

விமலன்:—அதுவும் சூரியனே அஸ்தமனமாகாத இந்த நாட்டில்,

வாஸந்தி — (சாவதானமாக) சபையோரே! நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்.

(வாஸந்தி போகிறாள், அவளைத் தொடர்ந்து பிரபாகரரும் போகிறார்)

அரசர்:—சபை கலையலாமே!

சந்திர:—(எழுந்து) சபையோரே! நீங்கள் போகலாம் ராஜாங்க விஷயமாய் அரசருடன் நான் ரகசிய ஆலோசனை நடத்தவேணடும்...நீங்கள் போகலாம்!

(மற்றவர்கள் போகிறார்கள்)

அரசர்.:— எல்லாம் சரிவர நடக்கிறதா? சந்திரசேனரே! சட்டத்தைப் பாதுகாக்கும் சர்வ அதிகாரமும் உம்மிடம் இருக்கும்போது, எனக்கென்ன கவலை?

சந்திர:—அரசே! மரண தண்டனை கொடுக்கும் அதிகாரமும் என்னிடமிருந்தால்,

அரசர்:—இதோ! அதையும் உமக்களித்து விட்டேன்!

விமலன்:—ராஜத்துரோகிகள் நடமாட ஆரம்பித்துவிட்ட இந்தக் காலத்தில் மரண தண்டனை விதிக்கும் அதிகாரமும் சந்திரசேனனிடம் இருந்தேயாகவெண்டும்.

அரசர்:—(ஆச்சர்யத்துடன்) எனக்கெதிராக ராஜத்துரோகிகளும் கிளம்பிவிட்டார்களா?

சந்திர :—ஒரு ஆண்டிப்பயல் ஆச்ரமம் கட்டிக்கொண்டு வசிக்கிறான். அவன் சதா ராஜாவுக்கு விரோதமாகப் பாடிக்கொண்டிருக்கிறான். அவனை ஜனங்கள் கும்பிடுகிறார்கள் !...

விமலன் .—ஆனால், அவன் பாட்டு என்னவோ மோகனகீதம் தான் !...இருந்தாலும் அவன் நமது அரசுக்கு ஒரு பெரிய அபாயமே !...

அரசர் :—அந்தக்குயிலை அடைத்துப் போட்டு விட்டால்,...

சந்திர :—...(யோசனை செய்த வண்ணம்)...அதை ஜாக்கிரதையாகச் செய்யவேண்டும்!

அரசர் :— அவனை இங்கு வந்து பாடச்சொல்லி, பிறகு ரகசியமாகச் சிறையில் தள்ளி விட்டால் போதுமே!

விமலன் :—அரசரின் யோசனையே சிறந்தது. அதன்படி செய்தால், எவருக்கும் சந்தேகம் பிறக்காது.

அரசர் ;—சந்திரசேனரே! நீரே அவனிடம் சென்று எமது ஆக்ஞையைத் தெரிவியுங்கள். வர மறுத்தால் அவனைக் கைது செய்து அழைத்து வாருங்கள்!

விமலன் .— (சந்தோஷத்துடன்) கொட்டுவோமே—கொம்மாளம் கொட்டுவோமே—ஆண்டிகளின் கொட்டம் ஒடுங்கியது என்று கொட்டுவோமே...

(அரசர் போகிறார்)

சந்திர ;—விமலா! உனது வீரமே எனக்குப் பலம்.

விமலன் :—'விமலனின் வீரம்' வேண்டி நின்றோர் பின்னர் வேறொன்றும் கொள்வாரோ!

(போகிறார்கள்)

## அங்கம்-1] [காட்சி-3

(தாசி மஞ்சரியின் அலங்காரமான இல்லம். வாஸந்தியின் அறை. மரகதம் பதித்த ஒரு ஸ்படிக ஆஸனத்தில் வாஸந்தி உட்கார்ந்திருக்கிறாள். இரவு. சந்திர ஒளி ஜன்னல் வழியாக அவள் மீது வீசுகிறது. அதனால் அவள் அதிக சோபையுடன் ஜொலிக்கிறாள்.)

(அவளுடைய சிநேகிதையான பூர்ணிமா அவளருகே உட்கார்ந்து கொண்டு மௌனமாக வானவெளியைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.)

வாஸந்தி : (பூர்ணிமாவின் கைகளைப் பற்றிக்கொண்டு)... சமாசாரம் தெரியுமா பூர்ணிமா?

பூர்ணிமா : என்ன விஷயம்? என்னிடம் நீ ஒன்றையும் சொல்லவில்லையே!

வாஸந்தி : நமது அரசர்,

பூர்ணிமா : (ஆச்சரியத்துடன்) ஆம்! அவருக்கென்ன நிகழ்ந்தது?

வாஸந்தி : (மலர்ச்சியுடன்) அரச சபையில் நான் இன்று நடனமாடினேன். எனக்கு அரசர் ரத்ன ஹாரமொன்றைப் பரிசாக அளித்தார்.

பூர்ணிமா : நீயே பாக்கியவதி!

வாஸந்தி : அதிருக்கட்டும்! என்னை 'ராணி', 'ரத்தினம்' என்றெல்லாம் புகழ்ந்தார்கள்! அப்படியென்றால் இந்த ரத்தினத்தின் மகிமை என்ன? இதனால் எனக்கு என்ன கௌரவம்? நீ என்ன நினைக்கிறாய்? பொறு! பொறு! எனக்கே தெரியும்!

பூர்ணிமா ; வாஸந்தி ! சிறியதொரு கல்லில் அதி சௌந்தர்யத்தை, கலையைப் புகுத்தி வைத்திருப்பதைத்தான் ரத்தினம் என்று அழைப்பது !

வாஸந்தி : அழகை விவரிக்கக் கூடாத வார்த்தையும் இருக்கிறதா, பூர்ணிமா ?

பூர்ணிமா : விலை மதிக்க முடியாத வஸ்து எதுவோ அது தான் அழகு ! வார்த்தைகளைக் கொண்டு விவரிக்கக் கூடாத வஸ்து எதுவோ அதுதான் கலை !

வாஸந்தி : பூர்ணிமா ! பிரகருதியின் கர்ப்பத்திலும், சமுத்திரத்தின் ஆழத்திலும் பொதிந்து கிடக்கும் ரத்தினங்களை எப்படி மதிப்பிட முடியும் ? மனிதர்களால் கண்டு கொள்ளக்கூடாத இந்த இடங்களில் உள்ள ரத்தினங்களின் மதிப்பு என்ன ?

பூர்ணிமா : ஒன்றுமில்லை.

வாஸந்தி : அப்படியானால், அவைகளுக்குப் பெருமை— அழகு, குணம், தரம் முதலியவைகளைப் பொறுத்து ஏற்படுகிறதில்லை. ஆனால், அவைகளுக்கு பிறர் கொடுக்கும் மதிப்பால் தான் ஏற்படுகிறது. பிரகிருதி இவைகளைச் சிருஷ்டிப்பதால் மட்டும் இவை ரத்தினங்களாகி விடவில்லை. உலகத்தினரின் கண்ணில் மதிப்புப் பெறுவதினாலேயே இவை ரத்தினங்களாகி விடுகின்றன. இல்லையா, பூர்ணிமா ! அதுபோல, எனது அழகு, எனது கலை-இவைகள் தாமாகவே மதிப்புடையவைகள் அல்ல. இவைகளுக்கு அரசனின் தயைதான் பெருமையை அளிக்கின்றது ! பிறர் கண்டு பாராட்டுவதினாலேயே கலையின் மதிப்பு நிர்ணயமாகிறது !

பூர்ணிமா : இதுதான் உலக இயல்பு !

வாஸந்தி : அதிருக்கட்டும் ! உலகம் ரத்தினத்தின் அழகைத் தேடுகிறது; மிக ஆழத்திலிருந்து ரத்தினமும் தன் மதிப்பை நிலைநாட்டிக்கொள்ள மனிதரை நாடி மேலே வருகிறது. ஆனால், இந்த ரத்தினத்திற்கு மட்டும் இந்த 'பிகுவு' ஆகாது !

பூர்ணிமா : 'பிகுவு' தானே வாழ்க்கையின் லட்சணம் ! வாஸந்தி ! (இந்த சமயத்தில் சந்திரசேனன் வருகிறான். மஞ்சரியும் கூட வருகிறாள்):

வாஸந்தி : (எழுந்து)...வாருங்கள் !

(சந்திரசேனன் உட்கார்ந்து கொண்டு வாஸந்தியின் அழகைக் கடைக் கண்ணால் பார்க்கிறான்).

மஞ்சரி : (வாஸந்தியிடம்) குமாரி ! அரச சபையில் உன்னை அறிமுகப் படுத்தி. உனக்குப் பெருமை தேடிக் கொடுத்தவர் இவர்தான் !

சந்திர : (புன்முறுவலுடன்) வாஸந்தி ! உனக்கு சர்வ மங்களமும் உண்டாகட்டும் !

வாஸந்தி : (அழகு ஜொலிக்கும் முகமலர்ச்சியுடன்) சந்திர சேனரே ! கேவலம், வாழ்க்கையின் வறட்டு இன்பத்தை விட, ஆத்ம சௌந்தரியம் உயர்ந்ததல்லவா ? ஒவ்வொரு ஆத்மாவுக்கும் வாழ்க்கை உண்டு ; ஆனால். வாழ்க்கை பூராவிலும் ஆத்ம சௌந்தரியம் இருப்பதில்லையே ! ஆத்ம பக்குவம் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் வாழ்க்கையின் இச்சைகளில் இல்லை. ஆத்ம சக்தி எப்படிப்பட்டது என்பது தெரியுமா ?

சந்திர : தேவீ ! நீங்கள் ஆத்மாவை வாழ்க்கையிலிருந்து ஏன் வேறு படுத்திப் பார்க்கிறீர்கள் ? வாழ்க்கையென்ற புதர்களடங்கிய வனத்திடையேதான், ஆத்மாவாகிய மரம் முளைத்து, வளர்ந்து, மலர்களையும், கனிகளையும் அளிக்கிறது; வனமாகிய வாழ்க்கையை விட, தன்னை, உயர்த்திக் கொள்ளவா ஆத்மா மலர்ந்து விரிகிறது ? இல்லை ! அந்த மரத்தின் மலர்களும், கனிகளும் தொலை தூரம் சென்று பயன்படுகின்றன. இங்கே தான் வாழ்க்கைக்கும் ஆத்மாவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. மேலும், ஆத்மாவாகிய மலருக்கு, வனமாகிய வாழ்க்கையே பிராணாதாரமாக இருக்கிறது. அந்த மலருக்குக்காரணம் வேர்தானே !...

வாஸந்தி : அதற்காக மலர், தனது அழகு, மணம் பூராவையும் தனது மூலகாரணமான வேருக்குத் தத்தம் செய்து விடுவதா ?

சந்திர : தேவீ ! இயற்கையானது மலரை வெளியிலும், வேரை மண்ணுக்கடியிலும் சிருஷ்டித்து மாற்ற முடியாத பிணைப்பை உண்டாக்கி விட்டது !

வாஸந்தி : (கம்பீரமாக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு) அதென்ன மாற்ற முடியாத பிணைப்பு ? அப்படி இருக்கவே முடியாது.

சந்திர:—அப்படியா?...சரி!...இருக்கட்டும். எனக்கு நேரமாகிறது. நான் சென்று வருகிறேன். (சந்திரசேனன் போகிறான். போகும்போதுங்கூட அவன் வாஸந்தியின் அழகைக் கடைக்கண்ணால் பார்க்கத் தவறவில்லை.)

பூர்ணிமா:—வாஸந்தி! இந்தஆள் உன்னை அப்படியே விழுங்கி விடுபவன் போலல்லவா பார்த்தான்!...

மஞ்சரி:— உஸ்!...பூர்ணிமா அவரைப்பற்றி ஒன்றும்பேசாதே

அவர் அரசருக்கு அந்தரங்கமானவர். அவருடைய தயவு நமக்கு நிறைய வேண்டும்!...

(மஞ்சரி போகிருள்)

வாஸந்தி:—(சிறிது நேரம் யோசனை செய்து விட்டு) பூர்ணிமா! நான் ஏன் இந்த அரசருக்கு முன்பு ஆடவேண்டும்?...ஆட மறுத்து விட்டால்,...

பூர்ணிமா:—உன்னுல் கூடாத ஒன்றைப்பற்றி நீ ஏன் பேசுகிருய்?

வாஸந்தி:—அந்த சக்தி எனக்கும் ஏன் ஏற்படக்கூடாது?

பூர்ணிமா:—பிறகு,...!

வாஸந்தி:—(நிதானமாக)...பிறகு என்ன?...அழகாகிய கலசத்தில் கலையாகிய மதுவை எடுத்துக்கொண்டு, விற்பதற்காக, பல பேர்களின் தயவைநாடி, பலருடைய கண்களின் முன்பு, நான் இனி நிற்கப்போகிறேன். இன்று உலகம் என்னை ரத்தினமாக்கி விலைக்கு வாங்கி விட்டது என் அழகை ரஸிக்க—என்னை நாடி அரசர் உட்பட பலர் என்னைச் சுற்றிவர ஆரம்பித்து விடுவார்கள்!... பூர்ணிமா! உலகம் எதுவரை எல்லைப பெருமையாகவும், உயர்வாகவும் நினைக்கிறதோ, அதுவரைதான் எனக்குப் புகழும் மதிப்பும்!...ஆம்! நான் விலைக்கு வாங்கப்பட்டு விட்டேன்!...

பூர்ணிமா:—(ஆச்சரியத்துடன்)...நீ என்ன ஆவேசம் கொண்டு விட்டாயா, வாஸந்தி?...

வாஸந்தி:—பூர்ணிமா!...நீ கலவரப்படாதே!...ஆடத்தானே பிறந்தேன்!...வா, போகலாம்!

(போகிருர்கள்)

## அங்கம் 1 ] [காட்சி 4

[அசோகனின் குடிசை. வழக்கம்போல அவன் பாடிக்கொண்டிருக்கிருன்.

### பல்லவி

ராகம் :—மோகனம்

மனிதனுக் கித்தனை மயக்கந்தானுகுமோ
மகத்துவச் சக்தியை மறந்திட்டுத் திரிந்திடும்

(மனித)

### அ. பல்லவி

தனிப்பெரு மருளுடன் தாயகந் தாங்கிடும்
தற்பரமானவர் தாத்பர்யம் புரியாத

(மனித)

சரணம்

பருவம் பருவமாய் பலபல வண்ணமாய்
புவன முழுதுமே யொளிர்ந்து பரவிடும்
உருவாகிடு மெல்லாப் பொருளாகிடுமவன்
உறவினை வெறுத்துமே ஒதுங்கியே ஓடிடும்

(மனித)

முரளி அப்பாட்டின் இனிமையில் மூழ்கியவனாய் உட்கார்ந்திருக்கிறான்]

அசோகன் :—(பாட்டை நிறுத்திவிட்டு)...முரளி!...என் தாயார் வந்திருந்தாள்!...உனக்குத் தெரியாதா?...

முரளி :—குருஜீ! நான் அப்போது இங்கு இல்லை!...அவர்கள் என்ன சொன்னார்கள்?...

அசோகன் :—என்னை வீட்டிற்கு வந்து விடும்படி வருந்தியழைத்தாள்'!...பாவம்!... பிள்ளைப்பாசம் அவளை இங்கே தள்ளுகிறது; ஆனால் என் லட்சியம், என்னை, எல்லாவித சுகங்களையும் வெறுத்து விடும்படி தூண்டுகிறது!...அவளுக்கு நான் தெய்வம்! எனக்கோ சத்தியமே தெய்வம்!...அது போகட்டும்!...ஏற்கனவே சொன்னது போல, எனக்கும் இந்த அரசருக்கும் நேருக்கு நேராக போராட்டம் ஆரம்பித்து விட்டது!...

முரளி :—(ஆச்சரியத்துடன்)...அது என்ன குருஜீ?...

அசோகன் :—முரளி;...நான் ராஜ சபைக்கு உடனே வந்து பாடவேண்டுமென்று அந்த அரசர் எனக்கு ஸ்ரீமுகம் அனுப்பியிருந்தார்...ஆனால் நான் போகவில்லை;...

முரளி :— பிறகு,...

அசோகன் :—பிறகு என்ன நடக்கப் போகிறது என்று சொல்லவும் வேண்டுமா?...அரசரை ஆட்டுவிக்கும் சந்திரசேனன் என்பவர் என்னைப் பயமுறுத்தி வற்புறுத்துவதற்காக இங்கு வரப்போகிறாராம்!... வரட்டும் நான் பேயாட்டத்தைப் பார்க்க விரும்புகிறேன்...

(அப்போது சந்திரசேனனே, விமலன் பின்தொடர அங்கு வருகிறான்)

அசோகன் :—(சந்திரசேனனைக் கண்டதும்) வாருங்கள்!... அமருங்கள்!... நீங்கள்! இந்த எளியவன் குடிசைக்கு வந்த காரணம் என்னவோ?...

சந்திர :—(உட்கார்ந்து கொண்டு)...தங்களிடம் அரசருடைய உத்திரவைக் கொடுக்க வந்துள்ளேன்.

அசோகன்:—(ஆச்சரியத்துடன்)...அரசருடைய உத்திரவா?-எனக்கா?...அது என்ன...

விமலன் :—(தனக்குள்),..ஆண்டிக் குறும்பைப் பார்!...

சந்திர :—தாங்கள் இன்று முதல் ராஜசபைக்கு வந்து பாடியாக வேண்டும்.

அசோகன் :—(சிரிக்கிறுன்)...ராஜசபைக்கு வந்து பாடியாக வேண்டும்!...என்ன, நானு?...

சந்திர :—(கண்டிப்பாக) ஆமாம்!...இதோ உத்திரவு...

(சந்திரசேனன் உத்திரவை அசோகனிடம் கொடுக்கிறுன்)

அசோகன் :—(உத்திரவை வாங்கிப்படித்து விட்டு)...என்ன? தங்கள் அரசர் என்னை நிர்ப்பந்தப்படுத்த விரும்புகிருரா?

சந்திர :—ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?...உமது கலையை அரசர் கௌரவிக்க விரும்புகிருர்.

அசோகன் :—இல்லை யில்லை! என்னை அடிமைப் படுத்த உமது அரசர் தீர்மானித்து விட்டார்...சந்திரசேனன் அவர்களே! என்னை எவரும் அடிமைப் படுத்தி விடமுடியாது என்று உமது அரசரிடம் சொல்லிவிடுங்கள்.

விமலன் :—(தனக்குள்)...அரசாணையை மீற இவன் சுதந்திரம் கேட்கிறுன்!......

சந்திர :—(சிறிது கோபத்துடன்) எமது அரசர் உமக்கும் அரசர் தான் என்பதை உணர்ந்து பேசுங்கள்.

அசோகன் :—(நிதானமாக)...ஐயா! ஆத்திரப்படாதீர்கள். எனக்கு அரசர் கடவுள்தான்! நான் ஒரு சுதந்திரக் குரல்!...

சந்திர :—ராஜ விஸ்வாசமே உண்மையான சுதந்திரம்!......

அசோகன் :...ஐயா! அகங்காரத்துடன் அடிமைப்படுத்த நினைக்கும் அரசர்களை நான் மதிப்பதில்லை. விஸ்வா சத்தை எவரும் நிர்ப்பந்தத்தால் பெறவே முடியாது!...

சந்திர :—அசோகரே! அரசர்களைப் போற்றிப் பாடாத ஒரு பாடகனுக்குச் சீரிய லட்சியமிருக்கவே முடியாது!...

அசோகன் :—சந்திரசேனரே! நான் என் ஜீவ லட்சியத்திற் காகவே கீதம் பாடுகிறேன். என்னுடைய கலை ஆதிக்க வெறியர்களின் கேளிக்கைப் பொருளல்ல. எனது கலையைத் தரிசிக்க ராஜசபைதான் இங்கு வரவேண்டுமே யொழிய, நான் உமது அரசரின் காலடியில் வந்து விழ மாட்டேன்.

விமலன் :—(தனக்குள்)...பரதேசிப் பயல்களுக்கு லட்சியம்!...

சந்திர :—அசோகரே! தங்களுடைய பதில் எனக்கு ஆத்திரத்தை மூட்டுகிறதே!

விமலன் :—கோபத்தில் துள்ளிக் குதிக்கத் தோன்றுகிறது!...

முரளி :—(ஆத்திரத்துடன்)பற்களை உடைத்துக்கொண்டு விடாதீர்கள்!

அசோகன்:—முரளி!...நீ சாந்தமாயிரு!......சந்திரசேனரே! ......உமது கோபத்திற்கோ அல்லது உமது அரசருடைய கோபத்திற்கோ நான் கவலைப் படவில்லை!......

சந்திர :—(அதிகாரத்துடன்).........தாங்கள் இன்று ராஜ சபைக்கு வந்து பாடியே ஆகவேண்டும்!......அரசருடைய உத்திரவை நான் நிறைவேற்றியாகவேண்டும்.

விமலன் :—......சட்டம் சட்டந்தான்!......

முரளி :—சட்டம் ஒரு கழுதை; அதை உதைத்துத் தள்ள எங்களுக்குத் தெரியும் !......

அசோகன் :—முரளி......நீ பேசாதிருக்க வேண்டும்........... சந்திரசேனரே!......நான் அங்கு ஏன் வரவேண்டும் ? நான் என்ன குற்றவாளியா ?

சந்திர :—ராஜ சபைக்குப் போகிறவர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்று நீங்கள் சொல்லுகிறீர்களா ?

அசோகன் :—(உறுதியான குரலில்) சம்பந்தமில்லாதவர்கள் வேற்றிடத்துக்குப் போவதும் குற்றமேயாகும் !...

சந்திர :—உமக்கு ராஜசபையின் அதிகாரத்தைப் புரிய வைக்க வேண்டியது தான் என் அடுத்த வேலை!...

அசோகன் :—பேய்க்கூத்து எப்படியிருக்கும் என்பதை நான் நன்றாகப்புரிந்து கொண்டிருக்கிறேன்!...

சந்திர:—(கோபமாக)...அபபடியானால் நீங்கள் அரசருடைய விரோதி!...அப்படித்தானே!...

அசோகன்:—(கம்பீரமாக)...அப்படித்தான்!...ரத்த வெறியர்கள், இரும்புக் கரங் கொண்டவர்கள், நெருப்புக்கண் கொண்டவர்கள், பொய்யைத் தொழுது அடிமை செய்பவர்கள், இவர்களுக்கு நான் விரோதிதான்! இதில், சந்தேகமேயில்லை!...

முரளி:—(தன்னை மறந்தவனாய்)...இதில் சந்தேகமேயில்லை!..

விமலன்:—(தனக்குள்)...கடவுளின் வாரிசு ராஜா! ராஜாவுக்கு விரோதி இவர்கள்!—எனவே, கடவுளுடைய விரோதிகள் இவர்கள்!...இவர்களை ஒழிக்க, கடவுள் விமலனையும், வீரத்தையும் படைத்திருக்கிறார்!...

சந்திர ;—(உரக்க)...நீர் பெரிய ராஜத்துரோகி!...நான் அரசாணையை நிறைவேற்றித் தீரவேண்டும்!...

அசோகன்:—(அமைதியாக) நீர் உமது கடமையைச் செய்யும்!

முரளி:—(படபடப்புடன்)...நான் உயிரோடிருக்கும் வரை....

அசோகன்:—முரளி! பதருதேயப்பா!...

சந்திர:...அசோகரே! நான் உம்மைக் கைது செய்கிறேன்!

அசோகன்:—இதோ! நான் கைதியாகச் சித்தமாயிருக்கிறேன்.

சந்திர:—அசோகரே! உம்முடைய பிடிவாதத்தின் விளைவு என்னவாகும் என்று நீர் உணர்ந்து கொண்டீரா?...

அசோகன் :—(சாந்தமாக)...எப்போதும் பலன் ஒன்றே யாகும்!...சத்தியமே முடிவில் வெற்றியடையும்.

சந்திர :— சத்தியம் என்றே வெற்றி பெறப் போகிறதாம்! அதற்குள் நடக்கப்போகிற,......

அசோகன் :—என்ன நடந்தாலும், எவ்வளவு யுகங்கள் கடந்தாலும் எனக்குக்கவலையில்லை. சத்தியத்தின் வெற்றிக்கு முன்பு சாவையும் நான் பொருட்படுத்தவில்லை.

(சந்திரசேனன் அசோகனுடன் புறப்படுகிறான். அசோகனைத் தழுவிக்கொண்டு முரளி கண்ணீர் விடுகிறான்)...

அசோகன் :—(சற்று நின்று)...கண்ணீர் விடவா என்னிடம் நீ கற்றுக்கொண்டாய்? என்னுடைய கலை எனக்கு எந்த உத்திரவைக் கொடுத்ததோ, அதையே நான் செய்கிறேன். நிர்மாண சக்தி கொண்ட கலைஞன் கடவுளின் பிரதிநிதியா அல்லது நாசகாரஅரசன் கடவுளின் பிரதிநிதியா என்பதை நான் கடவுளிடமிருந்தே தெரிந்து கொள்ள விரும்புகிறேன்! நீயும் பாடிக்கொண்டே அடிமைப்படுத்துவோரை எதிர்த்து நில்!...

விமலன் :—(நடந்துகொண்டே) கடவுளை நேரில் கண்டவன் போலப் பேசுகிறானே!

(போகிறார்கள்)

முரளி :—(தனக்குள்)...மக்கள் வடிவிலிருக்கும் கடவுள் தான் இந்தப் பேய்களின் மண்டையில் அடிக்க வேண்டும்!...

## அங்கம்-1.] [காட்சி-5

## (அரசரின் தர்பார் மண்டபம்)

(அரசர், பிரபாகர் முதலியோர் வீற்றிருக்கிறார்கள்.)

(வாஸந்தியும் மஞ்சரியும் வருகிறார்கள். இருவரும் அரசரை நமஸ்கரித்துவிட்டு ஆசனங்களில் அமர்ந்து கொள்ளுகிறார்கள்.)

அரசர் :—வாஸந்தி!...நடனமாடலாமே!...

வாஸந்தி :—(புன்னகையுடன்)...அரசே! தங்களின் ஆக்ஞைப் படியே!

(வாஸந்தி மண்டபத்தின் நடுவே பளிங்கு வட்டத்தில் நின்று ஆட ஆரம்பிக்கிறாள். மஞ்சரி பதம் பாடுகிறாள்).

ராகம்—தோடி

பல்லவி

ஆனந்த நடன மாடுவோம்—எங்கும்
ஆண்டவன் புகழ் பாடு வோம்

(ஆனந்த)

அ. பல்லவி

நானில மேவிடும் நாயகன வனிடம்
நாயகி யன்புடன் நல்லிசை பாடியே

(ஆனந்த)

சரணம்

பாட்டினில் நிலைத்திடும் பக்தியாம் காதலின்
பரவசக் களிப்பினுல் பரவிடுமி ன்பந்தான்
காட்டிடு மொளியினிற் கலந்திடும் சக்தியின்
கலகல நகையுடன் கம்பீரப் பொற்புடன்

(ஆனந்த)

(சந்திரசேனன் படபடப்புடன் பிரவேசிக்கிருன். அவனைத் தொடர்ந்து விமலனும் வருகிருன். சந்திரசேனனின் ஆர்ப்பாட்டமான பிரவேசம் ராஜசபையையே கலவரத்தில் ஆழ்த்தி விடுகிறது.

வாஸந்தி பிரமிப் படைந்தவளாய் நடனமாடுவதை நிறுத்தி விடுகிருள்.)

அரசர்:—என்ன இது சந்திரசேனரே?...(வாஸந்தியிடம்)... உன் நடனத்தை சற்று நிறுத்து!...

சந்திர:—அரசே!...

அரசர்:—அசோகன் வந்து விட்டானு?...

சந்திர:—உம்!...

அரசர்;—சபையோரே!...இனி நாம் அசோகனின் கீதத்தைக் கேட்கப் போகிருேம்!...

சந்திர:—இல்லை அரசே!...

அரசர்:—(திடுக்கிட்டவராய்)........என்ன?.........அசோகன் வரவில்லையா?...

சந்திர:—அந்தக் கலகக்காரன் வந்திருக்கிருன். அவன் தங்களை மதிக்கவில்லை. இங்கு பாட மறுத்துவிட்டான்.

அரசர்:—(கோபத்துடன்)...உமது அதிகாரங்கூட அவனிடம் செல்லவில்லையா?...

சந்திர:—உம்!...

(வாஸந்தி இதைக் கேட்டுத் திடுக்கிட்டு விடுகிருள்)

அரசர்:—(கோபத்துடன்)......மறுத்துவிட்டானு?......இதன் அர்த்தம்?...

(காவலாளிகள் அசோகனைக் கூட்டி வந்து சபை நடுவே நிறுத்துகிருர்கள். புயலுக்கும்புரளாதஅஞ்சாநெஞ்சத்துடன்

அசோகன் தலை நிமிர்ந்து நிற்கிறான்.)

அரசர்.—(அசோகனிடம்)...அசோகனே! என்ன இது?

அசோகன்:—(அமைதியாக) இதுதான் சத்தியப்பாதை!...கலைஞனின் லட்சியம்!...

அரசர்:—(ஆத்திரத்துடன்)...எமக்கு முன்பு பாடுவது என்பது இழிவானதா?...

அசோகன்:—கலைக்கே இழிவானது!...

(வாஸந்தி இதைக் கேட்டதும் பிரமித்து விடுகிறாள். சபையில் நிசப்தம் நிலவுகிறது. அசோகனின் கம்பீர அழகையே கண்கொட்டாமல் வாஸந்தி பார்க்கிறாள்.)

அரசர்:—(கோபத்துடன்)...யாருடன் பேசுகிறாய் என்பது உனக்குப் புரிகிறதா?...

அசோகன்:—(உறுதியான குரலில்)...சுதந்திரமான கலைஞனை தன் அகங்காரத்திற்குப் பணியவைக்க நினைக்கும் உம்மிடந்தான் பேசுகிறேன்.

அரசர்:—(கண்கள் சிவக்க, மீசை துடிக்க)...லளித கலையை கௌரவிப்பவன் கர்வியா அல்லது நீ கர்வியா?...

அசோகன்:—போஷிப்பதின் பெயரால் நீங்கள் என்னை அடிமைப் படுத்த நினைக்கிறீர்கள்...மேலும், உமது மக்களை அழ வைத்துக்கொண்டே கேளிக்கை அனுபவிக்கவும் எண்ணுகிறீர்கள். இவ்வளவுதான்!...

(இதைக் கேட்ட வாஸந்தியின் முகபாவம் ஆச்சரியத்தால் மாறுகிறது. அவள் அசோகனின் பேச்சைக் கூர்ந்து கவனிக்கிறாள்).

அரசர்:—அசோகா!...ராஜ சதஸில் பாடுவது என்பது கேவலமா?...

அசோகன்:—இது சதஸா?...இல்லை யில்லை...மக்களை வதைக்கும் வெறியர்களின் களமல்லவா இது!...

சந்திர:—(மிக ஆத்திரத்துடன்)...களத்தை ரணகளமாக்கி விடுவோம்!...

அசோகன்:—(அமைதியாக)...கைகளில் நெருப்புப் பந்தங்களுடன் மரணக்கூத்து ஆடுவதுதானே உமது வேலை!...

சந்திர:—நிறுத்துங்கள்!...நீர் பாடப்போகிறீரா, இல்லையா?... இங்கே பாடுவதை,.........

அசோகன்:—இங்கே பாடுவது, கேவலம் விற்பனையாகும்!...

அரசர்:—(ஆத்திரத்துடன்)...விற்பனையா?...

அசோகன்:—ஆம்!...மக்களின் ஜீவ லட்சியத்திற்காகவும். சாந்திக்காகவுமேயுள்ள சங்கீதத்தை, ஒரு சில ஆதிக்க

வெறியர்களின் கேளிக்கைக்கு உட்படுத்தினால், அது கேவலம் விற்பனையேதான்!...

அரசர்:—(ரௌத்ராகாரத்துடன்)... நீ பேசும் லட்சியம்-சாந்தி யெல்லாம் அரசாணைக்கு முன்னால் என்னவாகும் தெரியுமா?...(வாஸந்தியின் முகம் பயத்தால் விகாரமடைகிறது. அவள் உடல் முழுவதும் ஓரேயடியாக வியர்த்து விடுகிறது. அவள் பிரமித்தவளாய் உட்கார்ந்திருக்கிறாள்).

அசோகன்:—(நிதானமாக) கடவுள் மண்ணைப் பொன்னாக்குகிறார்! அரசனோ பொன்னை மண்ணாக்குகிறான்! இதுதான் அரசாணை!...கர்வத்தின் சீற்றம்!...

அரசர்:—உயிரைப் பற்றிய கவலை உனக்கில்லையா?...

அசோகன்:—(கம்பீரமாக)...ஆம்!...உயிரை யளித்தவன் உயிரை எடுத்துக்கொண்டு போகட்டுமே. அதற்காக கவலைப்படுவது சிருஷ்டிக் கர்த்தாவை அவமானப்படுத்துவதாகும்!...

அரசர்:—(உரக்க)......அசோகா!......நீ விளையாடுகிறாய்?

அசோகன்:—வாழ்க்கையே ஒரு விளையாட்டுத்தானே!

அரசர்:—(அதிகாரத்துடன்)...நீ ராஜ கட்டளையை நிறைவேற்றியாகவேண்டும், தெரியுமா?......

அசேகன்:—எனக்கு கடவுளின் கட்டளைதான் பெரிது!......

அரசர்:—(ஆக்ரோஷத்துடன்).........கடவுள் அரச ரூபத்தில் இருக்கிறார்!......

அசோகன்:—அரச ரூபத்தில் உள்ள 'கடவுளை' நான் ஏற்றுக் கொள்வதில்லை!......

அரசர்;—(உரக்க) இதன் முடிவு.......

அசோகன்:—அதற்காகக் கவலைப்பட வேண்டியவர் நீரேயாகும்!

அரசர்;—(எழுந்து, பூமியில் பலமாக உதைந்து) அப்படியானால்,..........

பிரபாகரர்;—அரசே! யோசியுங்கள்!......

சந்திர:—ராஜத்துரோகத்திற்கு மன்னிப்பேயில்லை!......

விமலன்:—மரண தண்டனைதான் சரியான தீர்ப்பு. மதாசாரங்கூட இதையே வற்புறுத்துகிறது.

அரசர்:—(பற்களைக் கடித்துக்கொண்டு)......மன்னிப்பு!......யாருக்கு?......யார் கொடுப்பது?......

அசோகன்:— (முகமலர்ச்சியுடன்) ......பயமுறுத்தலுக்குப் பணிவது கோழைத்தனமாகும். உமது மிருக பலம் எனது உடலைச் சிதைக்குமேயொழிய என் ஆத்ம சக்தியை அது எந்நாளும் பணியவைக்க முடியாது!......வெறியாட்டம் ஆடவும், கேளிக்கை யனுபவிக்கவுமே உங்களுக்கு மதம் உதவி செய்கிறது போலும்!......

அரசர்:—அசோகா!......உனக்கேற்ற...உன் கர்வத்திற்கேற்ற தண்டனையைப் பெறுவாய்............(சந்திரசேனனிடம்)......உமக்களித்த அதிகாரத்தை இவன் மீது பூரணமாக ஏவிவிடவும்!......

(அரசர் கோபமாகப் போகிறார்)

பிரபாகரர்:—(தனிமையில்) ......கொலைபாதகம்......கடவுள் தான் இவர்களைக் காப்பாற்றவேண்டும்............சிலர் பாவச் செயல்களால் பதவி பெற்று உயர்வடைகிறார்கள்; சிலர் நன்னடத்தையால் வீழ்ச்சியடைகிறார்கள்; சிலர் தீச்செயல்களைத் தங்கு தடையின்றி செய்தபோதிலும் அவர்கள் ஒருவருக்கும் பதில் சொல்ல நேரிடுவதில்லை; மற்றும் சிலரோ, ஒரு குற்றமும் செய்யாதிருக்கும்போது தண்டிக்கப்படுகிறார்கள்!......ஐயோ!...இந்த அரசுக்கு என்ன அபாயம் நிகழப் போகிறதோ!......அரசரோ சந்திரசேனனின் அடிமையாகிவிட்டார்!.........சந்திரசேனனுக்கோ விமலன் எஜமானன்!...அடடா!......இந்தத் தற்குறிகளின் தர்பாரில் நீதி எப்படியிருக்கமுடியும்!.........அந்தோ! அசோகன் போன்ற உத்தமர்களுக்கு இந்த அரசாட்சியில் மரண தண்டனை விதிக்கும் அதிகாரத்தையும் அரசரிடமிருந்து சந்திரசேனன் எடுத்துக்கொண்டுவிட்டான்! தேளுக்கு அதிகாரம் கிடைத்துவிட்டது!.........நான் ஏன் இன்னும் உயிருடனிருக்கிறேன்!......அணு அணுவாக நான், இந்த அநீதிகளைக் கண்டுகொண்டே, சாகவேண்டியதுதானோ!......கடவுளே!...எல்லோரையும் காப்பாற்றுங்கள்!......... (போகிறார்)

**அங்கம்-1.] [காட்சி-6**

*[தாஸி மஞ்சரியின் வீடு. இரவு. வாஸந்தி தனது அறையில் தனிமையில் உட்கார்ந்த வண்ணம் யோசனையில் ஆழ்ந்திருக்கிறாள். பூர்ணிமா வருகிறாள்]*

பூர்ணிமா :—வாஸந்தி ! நீ ஏன் இன்னும் தூங்காமலிருக்கிறாய் ? என்ன ஆழ்ந்த யோசனை ?

வாஸந்தி :—(மெதுவான குரலில்)......தூங்குவதற்காகவே இரவு வருகிறதா? பூர்ணிமா ?

பூர்ணிமா :—வாஸந்தி !......நீ கவலைப்பட்டுக் கொண்டிருக்கிருய் !...ராஜசபையில் நடந்ததைப்பற்றி நீ ஏன் கவலைப் படவேண்டும்?

வாஸந்தி :—(அரசர் பரிசாக அளித்த ரத்தின ஹாரத்தை எடுத்து, பூர்ணிமாமீது வீசிவிட்டு)...இதோ! இந்த மாலைக்காக நான் என்னை விற்றுக்கொண்டேன் !...நான் ஆண்டவனுக்கு முன்னுல் ஆடப்பிறந்தேன் ! இந்தத் துச்சமான அரசனுக்கு முன்னுல் அல்ல !...

(வாஸந்தி பாடுகிருள்)

ராகம் :—சுருட்டி

**பல்லவி**

ஆதியின் முன்பு ஆடப்பிறந்தேனம்மா
அறிந்தென்னைச் சும்மா விடம்மா

(ஆதியின்)

**அ. பல்லவி.**

சோதி வெளியினிற் சுயம்புவாய் நின்றிடும்
சுவர்ண மயமான சுந்தர நித்திய

(ஆதியின்)

**சரணம்**

ஆணவ மோகத்தி லாதிக்க மாடிடும்
அதிகார வெறியரை மதிப்பேனே நானினி
மானத்தை விட்டுமே மன்னவன் முன்பு நான்
ஆடமாட்டேனம்மா : பாடமாட்டேனம்மா !

(ஆதியின்)

பூர்ணிமா :—(கலவரத்துடன்) என்ன சொல்லுகிருய் ?

வாஸந்தி :—(படபடவென்று)...உண்மைக் கலைஞன் தனது கலையையே தனது ஜீவ லட்சியமாகக் கொண்டுவிட்டான்! அதனுல், அவன் சிறைக்குப்போக நேர்ந்தது; அவனுக்கு மரண தண்டனை அளித்தாலும் அளிப்பார்கள்! ...அவன் தன்னைத் தேவர்களுடன் சேர்ப்பித்துக் கொள்ளச் சித்தமாய் விட்டான் !...

பூர்ணிமா :—நீ பேசுவது புரிய வில்லையே, வாஸந்தி!...

(மஞ்சரி வருகிருள்)

மஞ்சரி:—(வாஸந்தியின் முகத்தைத் தழுவிக்கொண்டு)... கண்ணே ! வாஸந்தி ! நீ ஏன் ஆத்திர மடைகிருய் ? ராஜசபை உனக்களித்த மரியாதையில் ஒரு குறைவு மில்லையே !...அந்த முரட்டுப்பாடகனின் கதியைப்பற்றி நீ ஏன் கவலைப்பட வேண்டும்?...அவன் எப்படியும் தொலையட்டும்...கர்வம் பிடித்தவன் ! அரசனைப் பழிப்பவன்!...

வாஸந்தி :—(தாயைப்பார்த்துக்கோபத்துடன்)...அம்மா!...நீ உளராதே. உன் வயதும், பழக்கமும் உன் அறிவையே தின்று விட்டன!......கலா சிரேஷ்டரான அசோகரைப் பற்றித் தாறுமாருகப் பேசாதே!...

மஞ்சரி :—குழந்தாய்! அரசருக்காகவே நாம் வாழவேண்டும்; நமது அழகு, கலை எல்லாம் அரசருக்காகவே பிறந்திருக்கின்றன!......இதை மதிக்காதவனை 'சிரேஷ்டன்' என்று ஒருக்காலும் அழைக்கக்கூடாது.

வாஸந்தி :—(ஆத்திரத்துடன்)......நமது அழகு, திறமை—இவையெல்லாம் அரசரின் ஆடம்பரத்திற்காகச் சிருஷ்டிக்கப்பட்ட ஏகபோகப் பொருள்களா?...அப்படியா நீ சொல்லுகிருய்?...

மஞ்சரி ;—பெண்ணே! அதற்காகவே நாம் ஜனனம் எடுத்துள்ளோம்!...

வாஸந்தி :—(தலையை ஆட்டிக்கொண்டு)...அம்மா! மானத்துடன் வாழ நாம் ஜனனம் எடுக்கவில்லையா?...

மஞ்சரி :—கோபமாகப் பேசாதே; உரக்கப்பேசாதே...நாம் அரசருடைய சொந்த உடைமைதான்!...

வாஸந்தி :—(எழுந்து நின்று கொண்டு, உரக்க)...அம்மா!... கர்வத்தினுடைய போகப்பொருள்களா நாம்?...இல்லையில்லை! இதை என்னல் சகிக்கவே முடியாது. குயிலைப் பிடித்துவைத்துக் களியாட்டமாடும் அரசன்,......கலைஞனின் சுதந்திரத்தை அடக்கி, அவனைத் தன் இஷ்டப்படி ஆடவைத்து, அனுபவிக்கத் துடிக்கும் அகங்காரங் கொண்ட அரசன்,...என் போன்றவர்களின் அழகு, சரீரம்—இவற்றைத் தன்னிஷ்டப்படி ஆளநினைக்கும் பிணந்தின்னும் கழுகுபோன்ற சந்திரசேனனுக்கு ஒத்து ஊதும் மானங்கெட்ட அரசன்!...இவர்களின் கர்வத்தைப் பொசுக்கவேண்டும்!...(கண்களில் நீர் பெருக)... அசோகர் என்ன குற்றம் செய்தார்? தன் சுதந்திரப் பாதையிலேயே போக நினைத்தாரே, அது குற்றமா? ராஜத்துரோகமா?......குற்றமற்றவருக்கு மரண தண்டனை!...என்னம்மா நீதி இது?...

மஞ்சரி :—(பயந்தவளாய்)...வாஸந்தி! நமது பரம்பரைப் பழக்கத்தை மறந்தல்லவா நீ பிதற்றுகிருய்!...

வாஸந்தி :—(ஆத்திரத்துடன்)......அம்மா! உன் அடிமைப் பரம்பரையைக் கொளுத்தவேண்டும்! நீ அந்தப் பள்ளத்திலேயே புழுப்போலே உழன்றுபோ!...நானே ஒரு கலைவாணி! என் நடனமும், அசோகரின் கீதமுமே என்

சாம்ராஜ்யம்!......அவரை விடுவிக்கவேண்டும்; அவர் காலடியில் வாழவேண்டும்; இல்லையேல், நானும் அவர் காட்டிய பாதையில் சென்று மாளவேண்டும்; அந்த வாழ்வே,—அந்தப் பாதையில் மரணம் நேர்ந்தால் அந்த மரணமே எனக்கு ஸ்வர்க்க இன்பம்!...

மஞ்சரி:—(கோபத்துடன்)...நீ எப்படியும் தொலைந்துபோ... அந்த மாயப்பாடகன் உன்னை மயக்கி விட்டான்போலிருக்கிறது. (ஆயாசத்துடன்) அரசருடைய கோபம் நமது வீட்டையும் கொளுத்திவிடப்போகிறது! அவ்வளவுதான்!... (போகிறாள்)

[வாஸந்தியின் மனநிலையை உணர்ந்த பூர்ணிமாவும் மௌனமாக எழுந்து போகிறாள், வாஸந்தியோ, தனிமையில், தூக்கமின்றி படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிறாள்.]

## அங்கம் 2] [காட்சி 1

[அசோகனுடைய குடிசை. முன்பிருக்த களை இப்போது அங்கே காணப்படவில்லை. காலை. முரளி ஒரு மூலையில் மாட்டப்பட்டிருந்த தன் குருநாதரின் வீணையைப் பார்த்துக் கண்ணீர் விடுகிறான்,]

முரளி:—(வீணையைப் பார்த்த வண்ணம், தனிமையில்) ஏ! வீணையே!...........உன் துரதிர்ஷ்டமே துரதிர்ஷ்டம்! உன்னைத் தடவிக்கொடுத்து நெஞ்சையள்ளும் நாதத்தை எழுப்பும் அசோகரின் மிருதுவான கையை இழந்து விட்டு ஒரு மூலையில் ஓய்ந்து கிடக்கிறாய்!......மனிதன்!... தன்னுடைய அழிவுத் திறனைக்கொண்டே தன்பலத்தை நிர்ணயிக்க ஆரம்பித்துவிட்டான், இன்றைய மனிதன்!...............துவேஷக்கனலை அள்ளி வீசுவதுதான் அவனுடைய இன்றைய மதம்!............ தனக்குக் கட்டுப்படாதவர்களை ஒழித்து விடுவது தான் அவனுடைய இன்றையச் சட்டம்!............ நாகரீகத்தின் பேரால் அனுசாரந்தான் அவனுடைய இன்றைய ஒழுக்கம்! உற்பத்திசெய்யாமல்உண்டு களித்திட விரும்புவதுதான் அவனுடைய இன்றைய நாகரீகம்! கோரப்படுகொலைகளைச் சித்தரிக்கும் படங்களைக் கண்டு களிப்பதுதான் அவனுடைய இன்றைய கலை!...நீதி, கடமை, தேசபக்தி—இவைகளுக்கெல்லாம் விபரீத அர்த்தங் கற்பிப்பதுதான் இன்றைய மனிதனின் அரசியல்!...இதை மாற்றவேண்டும்!...கொடுமை! ராட்

சத மனிதன் ஆட்சிப் பீடத்திலிருந்துகொண்டு மமதை யுடன் ஆடுகிருன்! அவனை ஆட்டுவிக்கும் பூசாரியோ— மனித சமூக விரோதியான சந்திரசேனனே, மக்கள் ரத்தத்தில் விளையாடுகிருன்!.........அசோகனுக்கு மரண தண்டனை கொடுக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது! .........இது பொய்யாயிருக்க முடியாது! ரத்த வெறி கொண்டலையும் சந்திரசேனன் எதுவும் செய்யத் துணிந் தவனே!...சத்தியப்பாதையில் கடவுளின் கட்டளைப்படி நடப்பவருக்கு இங்கே மரண தண்டனை!......நான் ஏன் பேசிக்கொண்டிருக்கவேண்டும்?...''தீமையை எதிர்த்து நில் அல்லது மடிந்துபோ''—இதுவல்லவா என் குருநாத ரின் பொன் மொழி !......

(வாஸந்தியும், பூர்ணிமாவும் வருகிருர்கள்)

[வாஸந்தி குடிசையைச் சுற்றிமுற்றிப் பார்க்கிருள். முரளி இவர் களைக் கண்டதும் பேசாமலிருக்கிருன்.]

[மான்குட்டியோ வாஸந்தியைக் கண்டதும் அவள் அருகே துள்ளி யோடி வருகிறது. அதை அவள் முத்தமிட்டுத் தடவிக் கொடுக்கிருள். அதுவும் அவள் பக்கம் படுத்துக் கொள்ளுகிறது]

வாஸந்தி :—(முரளியை நமஸ்கரித்துவிட்டு)...ஐயா ! எங்க ளைக் கண்டதும் நீங்கள் ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள் ?

முரளி :—அம்மணி ! உங்களை எனக்கு அதிகம் தெரியாது.

வாஸந்தி :—நீங்கள் தானே அசோகரின் சீடர் ? தங்களு டைய பெயர்தானே முரளீதரர் ?...

முரளி :—ஆம் !......

வாஸந்தி :—அசோகரின் சீடராகிய தங்களுக்கு அன்னியரிட மும் அன்பும், மரியாதையும் இருக்கவேண்டாமா ?

முரளி :—(வெட்கத்துடன்)...மன்னிக்கவேண்டும்!... தேவி! எனது துக்கத்தில் எனக்கு ஒன்றுமே புரிய வில்லை !

வாஸந்தி :—'துக்கத்திலும் உரக்கச் சிரிக்கவேண்டும்' என் பது தானே அசோகரின் வழி !...

முரளி :—அம்மணீ!............தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும்!...அதிருக்கட்டும்......அசோகரிடத்தில் நீங் கள் அளவு கடந்த பிரேமை கொண்டிருப்பதாக நான் நினைக்கிறேன்.

வாஸந்தி :—ஆம் ! தாஸிகுலப் பெண்ணுயினும், நான் சிரேஷ்டரான அசோகரையே எனது ஆதர்ச புருஷராக வரித்துக் கொண்டுவிட்டேன்,

முரளி :—(சந்தேகத்துடன்)......அரச சபையின் ஆதரவைப் பெற்றுள்ள தாங்களா?......

வாஸந்தி :—என்னைப்பற்றி நீர் சந்தேகம் கொள்ளுகிறீர்கள்! ...என் உள்ளத்தைச் சந்தேகிக்க வேண்டாம்! முரளீ தரரே!......அசோகரைக் கண்டதிலிருந்து, அவரது வீர மொழிகளைக் கேட்டதிலிருந்து நான் புத்துயிர் பெற்றவளாக மாறிவிட்டேன்; அவரைத் தண்டித்துவிட்ட இந்தக் கொடுங்கோன்மைக்கு எதிராக நின்று போராடும் துணிவையும் பெற்றுவிட்டேன்; பயமின்றி வாழும் உரிமையை ஸ்தாபிப்பதே கலைஞனின் லட்சியம் என்பதைக் கண்டு கொண்டேன்!......

முரளி :—அம்மணீ! இந்த அரசையே ஆட்டிவைக்கும் ராட்சஸ பலமுள்ள சந்திரசேனனுக்கு முன்னால்,......

வாஸந்தி :—எதிர்த்து நின்றாகவேண்டும். பலாத்காரத்திற்குப் பணிவதென்றால், அசோகரையே நாம் மறந்துவிட வேண்டியதுதான்......மக்களையும் மன்னவனையும் ஆட்டி வைக்கும் பலாத்காரசர்வாதிகார சக்தியும், ஆண்டவன் பேரால் அநீதியை எதிர்க்கும் ஆத்ம சக்தியும் போராடியே தீரவேண்டும். இதுதானே அசோகருடைய செய்தி......இன்று பயந்து நடு நடுங்கிக் கொண்டிருக்கும் மக்கள், அநீதியை எதிர்க்க நாம் உறுதியுடன் கிளம்பி விட்டால், நம்முடனேதான் நிச்சயம் சேருவார்கள்...... மனித சமுதாயத்தின் சரித்திரத்தில் இம்மாதிரியான தர்ம யுத்தங்கள் எவ்வளவோ நடந்திருக்கவில்லையா?...

முரளி :—அம்மணீ!......உங்கள் உணர்ச்சியைக் கண்டு நான் பிரமித்துவிட்டேன். அசோகரின் விடுதலைக்காக மக்கள் துடி துடித்துக்கொண்டிருப்பது எனக்குத் தெரியும். மக்களின் மௌன சக்தி கடலின் சக்தியைப் போன்றது. கடலுக்கு மேலே மிதக்கும் கப்பலின் நிலையில் தான் இந்த அரசனும் அவன் கூட்டமும் இருக்கிறார்கள். கடலின் கொந்தளிப்பை யொத்தது மக்களின் எழுச்சி!... தேவீ! நான் இனி இங்கிருக்கவே மாட்டேன். என்னைத் தேடிவரும் வேலையில் நீங்கள் ஈடுபடாமல், அசோகருடைய விடுதலைக்காக, சமாதான முறையில் அரசரையும் சந்திரசேனனையும் அணுகி முயற்சி செய்து பாருங்கள். அந்தப் பிரபாகரரையும பேட்டி காணுங்கள்......நான் சாகத்துணிந்தவன். இந்தக் கூட்டத்தை ஒடுக்க மக்களைத் திரட்டிப் புரட்சியும் செய்கிறேன். என்னிடம் தகவல் தெரிவிக்க நம்பிக்கையானவரை அடிக்கடி நான் குறிப்பிடும் இடத்திற்கு அனுப்பிவையுங்கள். உளவர்த

ளின் நடமாட்டம் அதிகரித்துவிட்டது. ஜாக்கிரதையாக் இருங்கள். போய்வாருங்கள்.

வாஸந்தி :—முரளீதரரே!...உமது இருப்பிடத்தைப் பற்றி எனக்கு அடிக்கடி தகவல் கொடுத்துக் கொண்டிருங்கள். நான் இதோ (பூர்ணிமாவைத் தொட்டு) என் சிநேகிதியை உம்மிடம் அனுப்புவேன்......எப்படியும் அசோகர் விடுதலை ஆகவேண்டும்; இந்த ஆட்சி வெறிக் கூட்டம் அடியோடு வீழ்ந்திட வேண்டும்.

(எழுந்து போகிறார்கள்)

முரளி:—(தனிமையில்)...இவள் வெறும்பெண்ணல்ல; பெண் தெய்வம் தான்...சேற்றிலே முளைத்த செந்தாமரை...

**அங்கம் 2 ]** **[காட்சி 2**

[சந்திரசேனனுடைய மாளிகை. காலை. சந்திரசேனனும் விமலனும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

நான்கு வீரர்கள், இரு பாடகர்களையும், இரு கவிராயர்களையும் இழுத்துவந்து சந்திரசேனன் முன்பாக நிறுத்துகிறார்கள்.]

சந்திர:—விமலா!......அந்த நாடோடிப் பயலை—முரளியை—உங்களால் பிடிக்கமுடியவில்லையே!...

விமலன்:—இதோ!...இந்தக் கவிராயன்களைம், கூத்தாடிகளையும் உதைத்துக்கேளுங்கள்!...அவனுக்கும் இவர்களுக்கும் நிச்சயமாய் தொடர்பிருக்கும்!......

சந்திர:—ஏ! கவிராயர்களே!......பாடகர்களே!.........குரங்குகளே!......கோட்டான்களே!......நீங்கள் அசோகனின் கட்சியா?......என் கட்சியா?.

முதல் கவிராயர்:—(நடுங்கிக்கொண்டு)...பிரபுவே!...நான் பிரபுக்கள் மீதுதான் கவி பாடுவேன்!......என் கவிதை,......

சந்திர:—ஆம், ஆம்!...உன் கவிதை 'கூ கூ' சப்தந்தான்!...

இரண்டாவது கவிராயர்:—நான் இலக்கிய ஆராய்ச்சியாளன்! ......அதற்காக நான் எப்போதும் அரசருடைய ஆதரவை நாடுகிறவன்!......

சந்திர:—யாருக்கு நீ சேவை செய்கிறாய்?......

இரண்டாவது கவிராயர்:—இலக்கிய சேவை செய்கிறேன்!...

சந்திர:—(உரக்க)......யாருக்கு சேவை?......சந்திரசேனனுக்கு என்று சொல், குரங்கே!......

(சவுக்கால் அடிக்கிறான்)...

இரண்டாவது கவிராயர்;—(அழுதுகொண்டு)......சந்திரசேனனுக்கு ஜே!!

சந்திர—(முதல் கவிராயரைப் பார்த்து)........ஏ! முண்டாசு வீரரே!...நீ எந்தப் பக்கம்?......

முதல் கவிராயர்:—நான் பழங்காலக் கவிதைகளைபற்றி ஆராய்ச்சி செய்பவன்!......

சந்திர:—நிறுத்து கோட்டானே!...என்னைப்பற்றி உன்னுடைய இன்றையே ஆராய்ச்சி என்ன?

முதல் கவிராயர்:—வெற்றி யெட்டுத் திக்கும் கொட்டும் முரசமே நீங்கள்!......

சந்திர:—(சவுக்கால் ஒரு அடி கொடுத்துவிடடு) ......உயிருள்ள என்னைப் பார்த்து முரசம் என்கிருயே! என்ன கொழுப்பு!......

விமலன்:—சந்திரசேனரே!......இவர்களை நம்பவேமுடியாது. கவிராயர்கள், பாடகர்கள், எழுத்தாளர்கள் எல்லோருமே பயங்கரமானவர்கள்! சிலேடையாகக் கவிதை புனைந்து, ஆவேசமாகப் பாட்டுப்பாடி, வீரமாக எழுதி நாட்டில் கலகத்தை உண்டுபண்ணி விடுவார்கள் இவர்கள்!......

முதல் கவிராயர்:—ஐயனே!...என்னை அடிக்காதீர்கள்!...சர்வ வல்லமையுள்ள தங்களுடைய பேரொலிக்கே முரசத்தை உவமையாக ஒப்பிட்டேன்......நீங்கள் மட்டும் அவதாரம் எடுத்திருக்காவிட்டால், இந்த நாடு எவ்வளவு துன்பத்தை அனுபவித்திருக்குமோ!......தூங்கிக் கிடந்த சட்டங்களைத் தட்டியெழுப்பி நாட்டிலெங்கும் அமைதியை நிலை நாட்டி விட்டீர்கள். நீரே ஜனரக்ஷகர்!.........அரசருக்கும் வழிகாட்டும் ஜோதி!

சந்திர:—(தலையை ஆட்டிக்கொண்டே)...அப்படிச் சொல்லு! ...அப்படியே கவிபாடு!...ஏ! பாடகர்களே!...என் கீர்த்தியைப்பற்றிப் பாடுகிறீர்களா?...

இரண்டு பாடகர்களும்:—(சேர்ந்து) தங்கள் புகழைப் பாடத்தானே நாங்கள் பிறந்துள்ளோம்!...

சந்திர:—பாடுங்கள்!...என்னைச் சுற்றிச் சுற்றி ஆடுங்கள்!...

விமலன்:—இவர்களை நம்பாதீர்கள்!...அடிக்குப் பயந்து கொண்டு இப்படி அலறுகிருர்கள்!...இலக்கியப் புரட்டர்கள்-நையாண்டிப் பாடகர்கள்-இவர்கள்!...இவர்களை வெளியே விடக்கூடாது!—இச்சகம் பேசும் இந்த நாய்களைச் சிறையில் தள்ளி யடைத்துவிடவேண்டும்!...இவர்களின் குரலை-எழுத்தை-வெளியுலகம் கேட்கக்கூடாது!.

சந்திர:—விமலா!...சபாஷ்!...இவர்களை சிறையில் அடைத்து விடு...(அவர்களைப் பார்த்து)...மகாராஜன் ஜெயிலுக்குப்

போங்கப்பா!...அங்கேயுள்ள சுவர்களைப்பற்றிக்கவிபாடு கள்!...மரத்தைப்பார்த்துப்பாட்டுப் பாடுங்கள்!. (உரக்க) ...போய் விடுங்கள்!......உங்களுடைய கவித்வ சாதனைக்குத் தகுந்த இடம் சிறைதான்!...
(காவலாளிகள், கவிராயர்களையும், பாடகர்களையும் அடித்துக்கொண்டே இழுத்துச் செல்லுகிறார்கள்)...

விமலன்:—அப்பா! சனியன்கள் தொலைந்தன!...

சந்திர:—விமலா!...எப்படி என் அதிகாரம்?...அரசனுக்கும் அரசன் நான்தானே!...

விமலன்:—(அலட்சியமாய்)...அரசனுக்கு என்ன தெரியும்?.... அதிருக்கட்டும்! நமது லீலைகளுக்கும், ஆர்பாட்டத்திற்கும் இந்த அதிகாரந்தான் மூலபலம்!...இதை மேலும் மேலும் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்!...

சந்திர:—அரசனையே ஒழித்து விடவேண்டுமென்கிறாயே!...

விமலன்:—இல்லை!—அரசருக்கு எந்தவித அதிகாரமும் இருக்கக்கூடாது!...

சந்திர:—அவரைத்தான் ஒரு தினுசாய் மூலையில் உட்கார வைத்து விட்டோமே!...

விமலன்:—அரசருடைய இரக்க சுபாவம் நமக்கு சிலசமயம் தடையாயிருக்கிறதே!...

சந்திர:—அவர் போக்கில் போவது போல நடித்து, அவருடைய செல்வாக்கை ஒழிக்க வேண்டியதுதான் நமது தந்திரமான வேலை! விமலா! அசோகனைச் சிறையில் மரியாதையாக நடத்த வேண்டுமென்று அரசர் சொன்னார்!... நானும் அதற்குச் சம்மதித்தேன்!...காரணம் தெரியுமா? ...அவனோ சாகப் போகிறவன்!...அவன் சாகவேண்டுமென்பதுதானே நம் ஆசை!...அவனுடைய மரண தண்டனை நிறைவேற்றப் படும்வரை, அவனைச் சிறையில் மரியாதையாக நடத்துவதால் நமக்கு என்ன நஷ்டம்... அரசரும் என் மீது சந்தேகப்பட மாட்டார்!...

விமலன்;—நீங்களும் விட்டுக்கொடுக்கிறீர்கள்!......

சந்திர:—விட்டுக்கொடுத்துத்தான் வேட்டையாடவேண்டும்!.

விமலா:—வாசந்தியின் முத்தந்தான் பாக்கி!......

விமலன்:—விமலனின் வீரம் இருக்கையில், அதற்கும் நீங்கள் கவலைப்படவேண்டாம்!...

சந்திர:—நான் வாழ்க்கையில் கரைபடாதவன் என்று அரசர் நம்பிக்கொண்டிருக்கிறார்!.....,

**விமலன்:**—பாவம்!...நுனிப் புல் மேயும் 'பிரகஸ்பதி'...... இருந்தாலும், அவருடைய இந்த எண்ணமும் நமக்கு ஒரு பாதுகாப்புத்தானே!......

**சந்திர:**—(ஆடிக்கொண்டே)......ஆடுகிறேன்! பாடுகிறேன்!...

**ராகம்:—காபி**

**பல்லவி**

ஆடிடுவேன்—நான்—ஆடிடுவேன்
அனைவரையு மினி யாட்டிடுவேன்
(ஆடி)

**அ. பல்லவி**

நாட்டினில் மக்களை வீதிகளில்
நாளெல்லாம் விரட்டி வாட்டிடுவேன்
(ஆடி)

**சரணம்**

ஆளப்பிறந்திட்ட அரசனிருந்தென்ன?
அவனுங்கூட என் பொம்மை யன்றோ!
காலமெல்லாம் நான் கோலாகாலமாய்
கன்னியரைச் சுற்றி ஆடிடுவேன்,
(ஆடி)

எல்லோரையும் ஆட்டிவைக்கிறேன்......வா!...விமலா... போகலாம்!...கோலாகல மாடப்போகலாம்!......

**விமலன்:**—ஆடுவோமே—பள்ளு—பாடுவோமே!...

(போகிறார்கள்)

## அங்கம் 2] [காட்சி 3

[அழகிய ராஜ வீதியின் முகப்பில் ஒரு பூங்காவனம். மாலை நேரத்தின் மந்தஹாசப் பொழுது. புல் தரையின் மீது பலர் உட்கார்ந்திருக்கிறார்கள். சில நாகரீக மனிதர்கள் தீவிரமான வாதப் பிரதிவாதத்தில் மூழ்கியிருக்கிறார்கள். சில சோம்பேரிகள் சீட்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மூலையில் ஒரு பௌராணீகர் சத்கதா காலக்ஷேபம் செய்து கொண்டிருக்கிறார். அவரைச் சுற்றிச்சிலர் உட்கார்ந்திருக்கிறார்கள்.

மற்றொரு பக்கம் ஒரு சந்நியாசி, ஒரு வியாபாரி, ஒரு நடிகர் மூவரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

**நடிகர்** ;—நண்பர்களே! நமது நாட்டின் இன்றைய நிலைமையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? வெடிக்கும் தருவாயிலுள்ள எரிமலை மீது நாம் உட்கார்ந்திருப்பது போன்ற உணர்ச்சி உங்களுக்கும் ஏற்படவில்லையா?... இந்த ஆட்சியில் கொடுமையும், அழுகையுமே அதிகரித்து விட்டன!...

**வியாபாரி**:—(அலட்சியமாக)...நமது நடிகர் இந்த ஆட்சியில் எதையோ கண்டு விட்டு மிரளுகிறாரே!...

நடிகர் ;—(வியாபாரியிடம்)...ஐயா! பணப்பிரபுவே!...மிரளு வது மாட்டின் சுபாவமய்யா!...பலாத்கார அதிகாரமும், நசுக்கும் சட்டமும் மக்களைத் துயரத்திற்குள்ளாக்கி விட வில்லை யென்று சொல்லுகிறீர்?...பணம் திரட்டும் தாகம் உமது கண்களை மறைத்து விட்டதோ!...

சந்நியாசி :—ஓய் நடிகரே! நீர் சொல்வதை நான் அப்படியே ஆமோதிக்கிறேன் நீர் நிலைமையைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்! சாந்த மூர்த்தியான அசோகனை அரசன் என்று தண்டித்தானே அன்றே இந்தஅரசாங்கத் தின் தார்மீக அடிப்படையே தகர்ந்து விட்டது!...மேலும் மேலும் கூத்தடிக்கும் சந்திரசேனனின் அமுலோ அர சாங்கத்திற்கும் மக்களுக்கும் இடையே ஆழமான பள் ளத்தை வெட்டி விட்டிருக்கிறது!...அயோக்கியர்களின் கொள்ளையால் ஏழைகள் அழுகிறார்கள்; காம வெறியர் களின் களியாட்டத்தால் ஸ்திரீகள் கதிகலங்கி நடுங்கு கிறார்கள்; மக்கள் கொதித்து நிற்கின்றனர்; புரட்சி யின் காற்று வேகமாக வீசுகிறது; எங்கினும் கலகம் செய்யும் போக்கே தென்படுகிறது.

வியாபாரி :—நண்பர்களே!......நீங்கள் இருவருமே தப்பிதம் செய்கிறீர்கள்...வெறும் பேச்சு கவைக்கு உதவுமா?... (மூன்று முரட்டு மனிதர்கள் அங்கே வருகிறார்கள்)

ரஞ்சித் :—டேய்! ராகுல்!...(சந்நியாசியைச் சுட்டிக்காட்டி) அந்தச் சாமியாரு ஒசரமா, நான் ஒசரமா?...

ராகுலன் :—அவரு பக்கம் போயி, அவருக்குச்சமனா நில்டா!

சேகர் :—(வியாபாரியைச் சுட்டிக்காட்டி) அந்தத் தொந்தி மனுஷனும் நானும் சோடிடா!...(சிரிக்கிறான்)

சந்நியாசி ;—அன்பர்களே!......நீங்கள் எல்லாம் இந்த ஊர் தானே!...(இதைக்கேட்டு அம்மூவரும் உரக்கச் சிரிக்கி றார்கள்)

ரஞ்சித் :—(தலையை ஆட்டிக்கொண்டு)...ஆமாங்கோ!...

ராகுலன் :—(தனிமையில்) இந்தச் சாமியாரு ரொம்ப ரொம்ப எளக்கணமாப் பேசுறாரே!...

சந்நியாசி :—நீங்கள் எல்லோரும் சுகமாக இருக்கிறீர்களா?

சேகர் :—(வருத்தத்துடன்)...எங்களுக்கு சொகம் ஏதுங்க? சாமி...எங்களை கவனிப்பாரு யாருங்க இருக்கா? இப் பத்தான் நம்ம ஊரிலே உம்முன்னு செயிலுங்கோ!... பேசக்கூடாதுங்கோ! ஏளையுங்கோ!...

ரஞ்சித் :—(மெதுவாக)...ஆளுத்தூக்கி ராசா எங்களையும் தூக்கிப் புடுவாறு!...

நடிகர் ;—(ஆத்திரத்துடன்)...அந்த ராஜாவை நாம் தூக்கி விட்டால்,...

சேகர் :—நாங்களெல்லாம் ஏழைங்கோ!

சந்நியாசி :—அதிகாரம் இனிமேல் உங்களுக்குத் தானப்பா, வரப்போகிறது !...

ராகுலன் :—அப்படித்தானுங்க ரொம்பப் பேரு சொல்றுங்கோ...........ஆனா நாங்க மட்டும் கஸ்டந்தான் படறோங்கோ ! எவங்களுக்கும் ஏழைகதான் தொக்கு!...எங்க மேலே சவாரி செய்கிறாங்கோ!...

(கருணாளனைக் கட்டி இழுத்துக்கொண்டு இரண்டு வீரர்கள் அவ்வழியே வருகிறார்கள்,)

கருணாளன் :—(வருத்தமுடன்)...என்னை ஏன் இவ்வாறு எல்லோருடைய கண் முன்னும் அலைக்கழிக்கிறீர்கள் ?...

வீரர்களில் ஒருவன் :—சந்திரசேனனின் ஆக்ஞை இது !...

கருணாளன் :—அதிகாரம் இவ்விதமெல்லாம் செய்யும் போலும்!...

சந்நியாசி :—(அவனை அணுகி)...நீ என்ன கொலை செய்தாயா?

கருணாளன் :—இல்லை!...

சந்நியாசி :—பின் ?...திருடினாயா ?

கருணாளன் .—இல்லை !...

சந்நியாசி :—(ஆச்சரியத்துடன்)...நிரபராதியா?...

வீரர்களில் ஒருவன் :—இவன் சந்திரசேனப் பிரபுவைத் தூஷித்தான்!...

கருணாளன் :—புதிதாக வந்திருக்கும் சந்திரசேனனின் தர்பார் இது!...

சந்நியாசி :—சந்திரசேனனை ஏன் தூஷித்தாய் ?...

கருணாளன் :—என் சகோதரியை அவருக்கு மணம் செய்வதென நிச்சயிக்கப்பட்டது. அவரும் அவள் ஆலிங்கனத்தில் எவ்வளவோ தடவை இருந்திருக்கிறார். ஆனால், நான் அவளுக்கு ஸ்ரீதனம் கொடுக்கவில்லை யென்று என் சகோதரியை அவர் மணம் செய்து கொள்ளாமல் ஏமாற்றி விட்டார். இந்தக் குற்றத்திற்காக அவரை யார் தண்டிக்க முடியும் ?...அவருடைய ஸ்தானமும், அதிகாரமும் அவருடைய குற்றத்தை மறைத்து விட்டன! இதை நான் பகிரங்கமாகச் சொன்னதற்காகத் தான் எனக்கு இந்த தண்டனை!...

சந்நியாசி :—அரசரிடம் முறையிடுவதுதானே!...

கருணாளன் :—அரசரோ சந்திரசேனனின் கைப்பொம்மையா யிற்றே!...

வீரர்களில் ஒருவன் :—சீசீ! வாயைமூடு!...நாயே!...உன்னை இப்படி அலைக்கழித்தும் உனக்குப் புத்திவரவில்லையா?... உதைமேல் உதைதான் உனக்குச் சரியான பாடம்!...

(கருணாளனை உதைத்துக்கொண்டே போகிறார்கள்.)

[முரளியும், பூர்ணிமாவும் மற்றொரு புறமிருந்து வருகிறார்கள்.]

சந்நியாசி :—(அவர்களை நமஸ்காரம் செய்துகொண்டே)... வாருங்கள்! இதுதான் நல்ல சமயம். இங்கே, ஆவேசமாகப் பிரசங்கம் செய்யுங்கள். அரசனின் ஆட்சியில் அதிருப்தி கொண்ட அநேகர் இங்கு கூடியிருக்கிறார்கள். கலகத் தீயை மூட்டிவிட இதுவே நல்ல வேளை!...நல்ல பலனுமுண்டு!...

(முரளி சரேலென்று ஓடி சுற்றுப்புரச் சுவர்மீது ஏறி நின்று கொள்ளுகிறான். பிறகு மடமடவென்று பேச ஆரம்பித்து விடுகிறான்.)...

(முரளி பின்வருமாறு பேசுகிறான்)

'சகோதர, சகோதரிகளே! நீங்கள் எல்லோரும் நிம்மதியாக பயமின்றி, சுகமாக வாழவில்லை என்பதை உணர்ந்திருக்கிறீர்கள், இதற்குக் காரணம் இந்த யதேச்சாதிகார ஆட்சிதான். சந்திரசேனன் ஆடும் பேயாட்டம் சகிக்க முடியாத அளவுக்கு உச்சநிலைக்கு வந்துவிட்டது. இவன் தன் இச்சைப்படி நடக்காதவர்களைக் கொலை செய்கிறான். இவனுடைய ஆட்களோ மக்களைச் சூறையாடுகிறார்கள். தன்னைப் புகழ்ந்து பாடாத, தன் பேரில் கவிதை புனையாத, பாடகர்களையும், கவிஞர்களையும் சிறைக்கனுப்பி விடுகிறான். உத்தமர் அசோகரையும் சிறையில் தள்ளியடைத்து விட்டான். அவருக்கு மரண தண்டனை கொடுத்திருக்கிறான். இந்தக்கொலை பாதக ஆட்சியை மாற்றியாகவேண்டும். இது நமது மாபெரும் கடமையாகும். அப்போதுதான் இந்த நாட்டில் சாந்தியும், சுபிட்சமும் நிலவும்.'

(அச்சமயம் ஊதல் சப்தம் உரக்கக் கேட்கிறது. குதிரை வீரர்கள் வேகமாக வருகிறார்கள். அதே சமயம், மின்னல் வேகத்தில் பூர்ணிமாவைஇழுத்துக்கொண்டு முரளிகூட்டத்தினிடையே புகுந்து மறைந்து போய் விடுகிறான். முரளியின் கூட்டாளிகளும் மறைந்து விடுகிறார்கள். கூட்டத்தினர் சிதறி இங்கு மங்கும் ஓடுகிறார்கள். சிறிது நேரம் ஒரே அமளி! பிறகு நிசப்தம்)—...

(முரளியும், பூர்ணிமாவும் மெதுவாக வேறு பாதையில் போய்க் கொண்டிருக்கிறார்கள், இருட்டி விட்டதால், இவர்களை எவரும் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.)

பூர்ணிமா:—அதிருக்கட்டும்!...நாம் ஏன் மறைந்து கொண்டோம்?...நம்மை பயங்கொள்ளிகள் என்று பிறர் நினைக்கமாட்டார்களா?...

முரளி:—பூர்ணிமா!...இதற்கு அப்படியல்ல அர்த்தம்! நாம் அகப்பட்டுக் கொண்டு விடாமல், திடீர் திடீரென மக்களிடையே தோன்றிப் புரட்சிக்கனலை மூட்டிவிட்டு, மின்னல் வேகத்தில் மறைந்து, பின்னணியில் இருந்து கொண்டு மக்களுக்கு உத்சாகம் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும.

பூர்ணிமா :—அப்பா! என்ன சாகஸம் !...அதிருக்கட்டும்!... வாஸந்தியின் கதி என்னவாயிற்றோ!...பாவம்! அசோகரிடத்தில் அவளுக்கு ஆழ்ந்த காதல்!...

முரளி:—அவளைப் பார்க்க இது நேரமில்லை. அவள் சும்மா இருக்க மாட்டாள். அசோகரின் விடுதலைக்காக அவள் ஏதாவது செய்து கொண்டு தானிருப்பாள்!...அசோகரிடமிருந்து தானே அவள் ஒளி பெற்றிருக்கிறாள்!...

பூர்ணிமா:—(வெட்கத்துடன்)...உங்களிடமிருந்து......

முரளி:—(பூர்ணிமாவின் கைகளைப் பற்றிக்கொண்டு)...நீ என்னிடமிருந்து ஒளி பெறுகிறாய்!...

(இருவரும் போகிறார்கள்)
(சாலையின் மற்றொருபக்கம்)

ரஞ்சித்:—(பெருமூச்சு வாங்கிக் கொண்டு)...அப்பாடா!...நல்ல வேளையடா!...நம்ப மண்டை பொளச்சுது!...

ராகுலன்:—நீ ஒரு பயங்காளிடா!...அந்த பயபுள்ளை என்னாப் பேச்சு பேசினான்...ஆமாண்டா!...
இந்தக் கெட்ட ராசாங்கத்தைத் தொலைச்சுப்போட இந்த மாதிரி மனுசன் வேணுண்டா!...

சேகர்:—(தலையை ஆட்டிக் கொண்டு)...உதைப்பானுக்கு வெளுப்பான் சாதி வண்ணாண்டா!...டே!...நாம்பளும் அவுங்க பக்கந்தாண்டா!

(போகிறார்கள்)

அங்கம் 2] [காட்சி 2

[அரசருடைய மாளிகை. இரவு. சந்திரசேனன் அரசருடன் பேசிக் கொண்டிருக்கிறான். விமலனும் கூட இருக்கிறான்.]

அரசர்:—சந்திரசேனரே! நகரெங்கும் என்ன அமளி?

சந்திர:—பிரமாதமாக ஒன்றுமில்லை!...ஆனால், மதத்தையே அழித்துவிடவேண்டுமென்றுசிலநாஸ்திகர்கள்சதி செய்கிறார்கள்!...

விமலன்:—மகாராஜா!...தங்களுடைய கண்டிப்பின்மையாலே தான் இந்த நாஸ்திகர்கள் எல்லாம் தலையெடுத்திருக்கிறார்கள்...மதம் ஒழிய வேண்டுமாம்!...இதெல்லாம் அந்த அசோகன் செய்த பிரசாரத்தின் எதிரொலிதான்!... அவனை அடைத்ததும் அவனுடைய சீடர்கள் இப்போது கிளம்பி விட்டார்கள்!...அது மட்டுமா!...நமது கடவுள்கள் எல்லாம் கல்-மண்-மர சுவாமிகளாம்; ஆசார அனுஷ்டானங்கள் எல்லாம் பொய்யான சடங்குகளாம்!...இப்படிப் பேசுகிறார்கள் அந்த அசோகனின் சீடர்கள்!...இந்தப் பிரசாரகர்களை ஒழித்துக் கட்டாவிட்டால் நாட்டில் சத்தியமே அழிந்து விடும்!...

அரசர்:—பிறகு,...

சந்திர:—பிறகு என்ன?...இதை ஒடுக்கக் கடுமையான சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

அரசர்:—சந்திரசேனரே!. சுயேச்சை, நியாயத்தை அலட்சியம் செய்துவிட நாம் அனுமதிக்க முடியாது!...ராஜாங்க மரியாதையைக் குலைத்துவிடும் எவரையும் வளர விடமுடியாது!...உமது உசிதப்படியே எல்லாவற்றையும் செய்யும். உமதுநேர்மையிலும், கண்டிப்பிலும்நான்நம்பிக்கை வைத்திருக்கிறேன்!...

விமலன்:—அரசே!...உமது பிரதிநிதியாகிய சந்திரசேனரிடம் மக்களுக்கும் நம்பிக்கையிருக்கிறது. ஆனால், அதைக் கெடுத்து, ராஜ்யாதிகாரத்தைக் கைப்பற்ற ஒரு சிறு கூட்டம் கிளம்பியிருக்கிறது,

அரசர்:—முளையிலேயே அதைக் கிள்ளியெறிய வேண்டும்!...

(பிரபாகர் வருகிறார்)

[சந்திரசேனனுக்கு அவரைப் பார்த்ததும் ஆத்திரம் ஏற்படுகிறது, ஆனால் அவன்அதை வெளிக்காட்டிக்கொள்ளவில்லை]

அரசர்:—வாருங்கள், பிரபாகரரே!...விசேஷம் ஏதாவதுண்டா?...

பிரபா:—அரசே!...நாட்டில் எங்கும் பயங்கரமான கலக உணர்ச்சி அதிகரித்திருக்கிறது.

விமலன்:—கலகக்காரர்களின் சார்பாக நீங்கள் தூது வந்திருக்கிறீர்களோ?...

பிரபா:—(விமலனைப் பார்த்து)...விமலரே! நான் அரசரிடம் பேசுகிறேன்!...(அரசரிடம்)...அரசே!...வெள்ளம் வரும் முன்பு நாம் அணை போட்டு விடவேண்டும்!...

சந்திர:—சட்டந்தானிருக்கிறதே!......பலமான அ ர சா ங் க இயந்திரம் எந்தக் கலகத்தையும் நசுக்கிவிடும்!...

பிரபா:—மக்களுடைய கோபத்திற்கு அடிப்படையான காரணமிருக்கிறது. அதை மதித்து அதற்குப் பரிகாரம் செய்யவேண்டும். அரசாங்கம், எப்போதும், ராணுவத்தையே நம்பியிருக்க முடியாது.........சந்திரசேனரே!......நிரபராதிகளைத் தண்டிக்கும் உமது சட்டம் எத்தனை காலம் நீடித்திருக்க முடியும்?

சந்திர:—(கோபமாக) நாஸ்திகர்கள், ராஜத்துரோகிகள்—இவர்கள் எல்லாம் நிரபராதிகளா?

விமலன்;—(தனக்குள்) பைசாசங்கள்கூட தேவர்களோ......

பிரபா:—சந்திரசேனரே!......யோசித்துப்பாருங்கள்!...உமது மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்!.........குற்றம் யாரிடத்திலிருக்கிறது என்பதை......

சந்திர:—பிரபாகரரே......நாம் பார்க்கும் ரத்தினத்தைதான் குனிந்து எடுக்கிறோம்; பார்க்காததை மிதித்து விட்டுப் போய்விடுகிறோம். அதுபோல, வெளிப்பட்டதைத்தான் சட்டம் தண்டிக்கும்!...குற்றம் எங்கிருப்பினும் அதற்குத் தண்டனை நிச்சயம் உண்டு!...

அரசர்:—பிரபாகரரே!......சந்திரசேனன் கண்டிப்பானவர்; பரிசுத்தமானவர் எனக்கு இதில் சந்தேகமில்லை,

விமலன்:—அரசர் சொல்வதுதான் முக்காலும் உண்மை!......

பிரபா:—அசோகன் நிரபராதி என்று மக்கள் சொல்லுகிறார்களே!...

சந்திர:(ஆத்திரமாக)......மக்கள்!....மக்கள்!!....யாரய்யா மக்கள்!.......மக்களுக்கு என்னய்யா அதிகாரம்?...சோம்பேரிகளும், கலகக்காரர்களுமே மக்கள் பேரைச் சொல்லி ஏய்ப்பார்கள்?......நீருமா?......இல்லை யில்லை!....தாங்கள் நேர்மையானவர் என்று அரசர் அபிப்பிராயப்படுகிறார்!....என்னிடத்தில் சர்வ அதிகாரமும் இருக்கிறது. நான் நினைத்தால் என்னவும் செய்யமுடியும்!....உமது முதுமையை உத்தேசித்து, நான் உம்மை மன்னித்திருக்

கிறேன். இனிமேல் மரியாதையாக காலத்தைத் தள்ளும்!......போய்விடுங்கள்!......

பிரபா:—(துடி துடித்து).அரசே!.....உமக்கும் கண்ணில்லையா? ......எனக்கா இந்த அவமானம்?.......கடவுள்தான் உம்மைக் காப்பாற்றவேண்டும்!......

(பிரபாகரர் தள்ளாடிக்கொண்டே போகிறார்)......

அரசர்:...வயதானாலே மூளை கெட்டுவிடுமோ?......

விமலன்:—அறுபது வயதானாலே அறிவு அழிந்துவிடும்!......

அரசர்!—நேரமாகிறது!......

சந்திர:—சரி!......நாங்கள் போய்வருகிறோம்......நிம்மதியாகத் தூங்குங்கள்!...

(இருவரும் வெளியே வருகிறார்கள்)

(வெளியில்)

சந்திர:—எப்படி என் வேலை?......நாஸ்திகப் பூச்சாண்டி காட்டி அரசனை நம்பவைத்து விட்டேன் அல்லவா?......

விமலன்:—அந்தப் பரம்பரையில்தானே நாமும் தோன்றியுள்ளோம்!......சட்டம்—அமைதி—மதம்—இவைகளைச் சுட்டிக்காட்டித்தானே நாம் 'தர்பார்' நடத்தமுடியும்!......

சந்திர:...அந்த கிழட்டுப்பயலையும் கத்தரித்துவிட்டேன்!...—(சிரிக்கிறான்).

விமலன்;—அவனால் என்ன செய்யமுடியும்?...ஓய்ந்துபோன முண்டம்!......

சந்திர:—விமலா!......அந்த மாலதி என்ன ஆனாள்?......

விமலன்:—அவளைப்பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை!...... ஆனால், அவளுடைய சகோதரன், கருணாளனால் இனி மேல் ஒன்றுமே செய்யமுடியாது. உங்களுக்கு விரோதமாகப் பேச அவன் வெளியில் இல்லை!...

சந்திர;—(ஆச்சரியத்துடன்)...அவன் என்னவானான்?

விமலன்:—அவனையும் சிறைக்கு அனுப்பியாய்விட்டது!

சந்திர:—(விமலனைத் தட்டிக்கொடுத்து)......சபாஷ்...,நல்லது செய்தாய்! நன்றாகச் செய்தாய்!...(சிரிக்கிறான்) .........ஆம்! நம்மை எதிர்ப்பவர்களையெல்லாம் ஒவ்வொருவராய் ஒழித்துக்கட்டவேண்டியது தானே!...

விமலன்;—அதைத்தானே செய்கிறோம்!...

சந்திர:—அதிருக்கட்டும்!...வாஸந்தியின் முத்தம்...

விமலன்:—பொறுமனமே பொறு...! விமலனின் வீரம் இருக்கையில் நீங்கள் ஏன் கவலைப்படவேண்டும்?...

சந்திர:—சபாஷ்!...சபாஷ்!!...என் அதிகாரம் நீடூழி வாழ்க !!!

(போகிருர்கள்)

அங்கம் 3] [காட்சி 1

[பிரபாகருடைய மாளிகை. காலை. பிரபாகரர் கவலை தோய்ந்த முகத்துடன் வீற்றிருக்கிருர்].

(வாஸந்தி வருகிருள்)

பிரபா :—வா ! வாஸந்தி !...

வாஸந்தி :—பிரபாகரரே !......ஏன கவலையுடன் காணப்படுகிறீர்கள் ?......

பிரபா :—நீ கவலையால் துரும்பாக இளைத்து விட்டாயே...... அதே கவலைதான் என்னையும் வாட்டுகிறது ?......

வாஸந்தி :—பிரதமரே !............நீதிக்கு உறைவிடம் என்று உம்மை அழைக்கிருர்களே !...உம்முடைய கண் முன்பு தானே அசோகர் மாளவிருக்கிருர் !......இந்த அநீதியை எதிர்க்க உமக்குத்தைரியமில்லையா?...உமது மனச்சாட்சி செத்துவிட்டதா ?.........அதிகார மமதையுடன் இன்று நடத்தப்படும் கொடூரமான காரியங்களையெல்லாம் நியாயமானவையென்று நீங்கள் நினைத்துவிட்டீர்களா ?

பிரபா :—வாஸந்தி !...பதருதேயம்மா !.......சந்திரசேனனின் கருவியாக விருக்கும் அரசரின் மனதை மாற்றுவது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல......மேலும், எனக்கு இந்த ஆட்சியில் இப்போது செல்வாக்கில்லை. என்னையும் இந்த சந்திரசேனன் அரசர் முன்னிலையில் கூட அவமானப்படுத்தி விட்டான்............நான் என்ன செய்ய முடியும் ?.........பெண்ணே ! உன் கொதிப்பை நான் உணராமலில்லை அசோகரைத் தண்டித்திருப்பதை நான் எப்படி ஒப்புக்கொள்ளமுடியும் ?...சிரேஷ்டரான அசோகரைக் கொன்றுவிட்டால் தனக்கு எதிராக எவருமே இருக்கமாட்டார்கள் என்று சந்திரசேனன் மனப்பால் குடிக்கிருன்.........அநுமனின் வாலிவிட்ட தீ இலங்கையை அழித்ததுபோல, அசோகரின் ஆத்மசக்தி இந்த மனித உருக்கொண்ட பேய்களை அழித்துவிடப் போகிறது என்பதில் எனக்கு நிச்சயமான நம்பிக்கையுண்டு !......இந்த நம்பிக்கையுடன்தான் நான் வாழுகிறேன்......ஒன்று மட்டும் நிச்சயம் !.........கடைசிவரை, நான் நீதியின் பேரால் என் கடமையைச் செய்யப் பின் வாங்கமாட்டேன் !......

வாஸந்தி :—அமைச்சரே !...என் பதட்டத்தில் நான் தங்களை யும் தாக்கிப் பேசிவிட்டேன். அதற்காக என்னை மன் னித்து விடுங்கள் !......சரியான காலத்தில் அரசர், தன் னுடைய தவறை யுணர்ந்து தன்னைச் சுற்றியுள்ள தீயப் பிடிப்பிலிருந்து வெளிவருவார் என்று நான் நம்புகிறேன் .........ஜனசக்திக்கு முன்னுல் அடிமைப்படுத்தும் எந்த சக்தியும் பணியாமலிருக்க முடியாது!...நீங்கள் மட்டும் உமது நியாயமான கடமையைச் செய்துகொண்டிருங்கள் ......நான் போய்வருகிறேன் !......

(வாஸந்தி போகிருள்)

பிரபா :—(கவலையுடன், தனிமையில்)...........அரசர் நெருப் புடன் விளையாடுகிருர் !......இல்லை.........அவரை ஆட்டு விக்கிருன் அந்தப் படுபாவி சந்திரசேனன்......அரசரை மீட்பது.......அசோகரைக் காப்பது...நாட்டை அழிவி லிருந்து பாதுகாப்பது...இவைதான் என்னுடைய தேசப் பக்தியுள்ள கடமைகள்.........இதைச் சாதிக்க, ஆயிரந் தடவைகளேனும் நான் அரசரிடம் சென்று மன்ருடு வேன் !......

(போகிருர்)

**அங்கம் 3] [காட்சி 2.**

[வாஸந்தியின் வீடு. மாலை.

நாடெங்கும் அசோகனின் விடுதலைக்காகக் கட்டுப்பாடான கிளர்ச்சி நடப்பதில் அவளுக்கு ஒருபுறம் மகிழ்ச்சி. ஆனல், அதற்குள் அசோகர் தூக்கிலிடப்பட்டு விட்டால் என்று நினைக்கும் போது ஒரு புறம் துக்கம்— இவ்வாறு மாறிமாறி வரும் உணர்ச்சிகளில் ஆழ்ந்தவளாய் வாஸந்தி உட்கார்ந்திருக்கிருள் அசோகனை நினைத்துப்பாடுகிருள்).

ராகம் .—பிலஹரி

**பல்லவி**

மனமும் நாடிடுதே—மாசிலரவரிடம் மலர்ந்திடும்
பிரேமையில்
தினமும் கணமும் நினைந்து நினைந்து
(மனமும்)

**அ. பல்லவி**

கனவிலும் நனவிலும் கருத்தினிற் தோன்றிக்
களிநடம் புரிந்திடும் கண்ணனுமவரிடம்
(மனமும்)

**சரணம்**

தம்மிரு விழிகளில் எத்துணை வீரம்
தண்ணளி முகமதில் என்ன பிரகாசம்
எம்மான் மார்பினில் எத்தனை விலாசம்
ஏந்தலின் மொழியினில் என்னே தீரம்.
(மனமும்)

பிறகு, ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள் போல அவள் நிமிர்ந்து உட்கார்ந்து கொள்ளுகிருள், ஜன்னல் வழியாக வெளியே பார்க்கிருள், சந்திரசேனன் தன் வீட்டை நோக்கி வருவதைக் கவனிக்கிருள்.

வாஸந்தி, அவன் வரவை எதிர்பார்த்தவளாய் தயாராயிருக்கிருள்.]

(சந்திரசேனன் வருகிறுன்)

வாஸந்தி :—வாருங்கள் !...சந்திரசேனரே...அமருங்கள்!...... ஏது இவ்வளவு தூரம்?...........நானே தங்களுடைய மாளிகைக்கு வருவதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தேன். அதற்குள் நீங்களே வந்துவிட்டீர்கள். ஏதாவது...விசேஷம் உண்டா ?...

சந்திர :—அப்படி விசேஷம் ஒன்றுமில்லை. தங்களைப்பார்த்து விட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்...என்னை நீங்கள் பார்க்க விரும்பியதின் காரணம் என்னவோ ?...

வாஸந்தி :—தங்களுடைய உதவியை நாடியே!...

சந்திர :—(அசட்டுச் சிரிப்புடன்)...என்னிடமா ?...எதைப் பற்றி ?...

வாஸந்தி :—அசோகருடைய விடுதலைக்காக நான் தங்களுடைய உதவியை நாடுகிறேன் !...

சந்திர :—(வெறுப்புடன்)...தேவீ !...நீங்கள் ஏன் சதா காலமும் அந்தக் கலகக்காரனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் ?

வாஸந்தி :—கலா சிரேஷ்டரைக் 'கலகக்காரன்' என்று தயவு செய்து அழைக்காதீர்கள் !...

சந்திர :—அரசரை அவமதித்தவனை வேறு எப்படி அழைக்க முடியும் ?...தேவீ......கலை கலையென்று நீங்கள் அடிக்கடி சொல்லுகிறீர்களே !...அது....பிரபுக்களின் ரஸனைக்குத் தானே இருக்கிறது !...

வாஸந்தி :—தாங்கள் சொல்வது என் ஆத்மாவைத் தொடவில்லையே!...(உறுதியான குரலில்) கலை யென்பது கர்விகளின் களியாட்டக் கருவியல்ல. இதை உறுதிப்படுத்தவே அசோகர் பிராணத் தியாகம் செய்யவும சித்தமாய் விட்டார். அவரே பரிசுத்தவீரர் !

சந்திர :—அப்படியானல் அரசருடைய போஷணையில் இருக்கும் கலைஞர்கள் எல்லாம் அடிமைகள்தானு ?

வாஸந்தி :—அப்படிப்பட்டவர்கள் நினைக்கும் சுதந்திரம் வேறு !

சந்திர :—தேவீ !...யோகவனிதையாகப் பிறந்துள்ள தாங்கள் இந்த ராஜ சபையின் ஆதரவின்கீழ் போகத்துடனிருப்பதை விட்டு,......

வாஸந்தி:—(உறுதியாக)......சந்திரசேனரே!...நான் அசோகரின் பாதையில்தான் சகலபோக பாக்கியங்களையும் பார்க்கிறேன். அவருடைய விடுதலைக்கு......

சந்திர:—(கபடமாக)...தேவீ!...எனக்கு நேரமாய் விட்டது ......அவருடைய விடுதலை விஷயம் மிகவும் சிக்கலானது. ......எதற்கும் நாளை நீங்கள் என் மாளிகைக்கு வாருங்கள், அதைப்பற்றி விவாதிக்கலாம்.

வாஸந்தி :—(ஆனந்த உணர்ச்சியில்)...அசோகருடைய விடுதலை விஷயமாக வானத்தில் பறக்கவும் நான் தயார் !...

(சந்திரசேனன் போகிறான்)

சந்திர :—(வெளியில், தனக்குள்)......அவள் அழகு என்னைப் போதையில் ஆழ்த்துகிறது...இது என்ன ?...அவள் குற்றமா ? அல்லது என் குற்றமா ?...யார் அதிகமாகப் பாவம் செய்கிறார்கள்?...ஆசை காட்டுபவரா ? அல்லது ஆசைப் படுபவரா ?......இல்லை !...அவள் ஆசை காட்டவில்லை, நிர்மலமான அவளிடம் நான்தான் பிணந்தின்னும் மிருகம்போல நடந்துகொள்ளுகிறேன் !......... சீச்சீ !! என்ன செய்கிறாய் ? என்ன செய்கிறாய் ? நீ யார் ? சந்திரசேனனா?......அவளுடைய நற்குணங்களை உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லையா ?......ஆம் ! முடியாது !......நீ அவளைக் கெடுக்கத் துணிந்துவிட்டாயா ?......வேண்டாம் !......அவளுடைய ஆதர்ச நாயகன் அசோகன் உயிர் வாழட்டும் !...—அது முடியவே முடியாது !......அவள் தாஸிதானே!......செல்வர்களைச் சுற்றிச் சுற்றி ஆடிப்பாடி, அவர்களின் காமக் கருவியாயிருப்பதுதானே அவள் தொழில் !......ஆம் ! இவளைக் கட்டித் தழுவி இன்பம் அனுபவிக்கத்தானே நான் பிறந்தேன் !......அசோகன் குறுக்கே நிற்கிறான், அவனை ஒழித்துவிடுகிறேன். பிறகு இவள் எனக்கு உட்பட்டுத் தானே ஆகவேண்டும் !......பாவம் !.........பயந்தவருக் கல்லவா பாவமும் சீவமும்!......மக்கள் கோபம் !...... அது என்ன செய்யமுடியும் ? அவர்கள் வரட்டுக்கத்துக் கத்துவார்கள் !......உரக்கக் கத்தட்டும் !...கத்திக்கத்திச் சாகட்டும் !......அவள் என் வீட்டிற்கு வரட்டும் !...... அவளைப் பார்த்துக் கொள்கிறேன் !...

[சந்திரசேனனின் மாளிகை. காலை. வாஸந்தியின் வரவை எதிர் நோக்கி காமவிகார முகமலர்ச்சியுடன் சந்திரசேனன் உட்கார்ந்திருக் கிருன்.

விசாலமான அவ்வறை நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அவ னுடைய மனேபாவத்தைப் பிரதிபலிக்கும் ரீதியில் கண்ணைக் கவரும் (காதல்) படங்கள் சுவர்களில் மாட்டப்பட்டிருக்கின்றன.

சந்திரசேனன் உட்கார்ந்திருக்க மனங் கொள்ளாதவனுய் அறை யில் இங்குமங்கும் உலாவுகிருன். பூஞ்சோலையில் துஷ்யந்தன் சகுந்தலை யின் சேலைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு கொஞ்சி விளையாடும் காட்சி யைச் சித்தரிக்கும் படத்தின்மீது அவனுடைய திருஷ்டி பாய்கிறது. அப்படத்தின் முன்பு அதையே பார்த்துக் கொண்டு சிறிது நேரம் அசை யாது அவன் நிற்கிருன். குபீரென்று அவனுடைய முகம் காமஉணர்ச்சி யால் சிவந்துவிடுகிறது. பிறகு, சோபா மீது அவன் தொப்பென்று சாய்ந்து விடுகிருன்.]

சந்திர:—டேய்! பஹதூர்......பெண்களைத்தவிர எவரையும் உள்ளே விடாதே! ஜாக்கிரதை!...(வெளியே வேலைக் காரன் முணுமுணுக்கிருன்).

(தனிமையில்)—அழகான நானிருக்க, இந்த வாஸந்தி ஆண்டி ஒருவனை ஏன் சதாகாலம் சிந்தனை செய்துகொண்டிருக்க வேண்டும்?...அதுவும் சாகப்போகிறவனை எண்ணி யெண்ணி ஏன் ஏங்கவேண்டும்?...(பாடுகிருன்)...

ராகம்:—அடாணு

பல்லவி

இப்பொழுதே வந்திடுவாளெந்தன்
இதயத்தின் தாபத்தைத் தீர்த்திடவே
(இப்பொ)

அ. பல்லவி.

இப்புவிமீதினில் இனிமையெழிலுடன்
இன்பத்தை யூட்டிடும் ஏந்திழையாளவள்
(இப்பொ)

சரணம்.

மாலையுந் தென்றலும் கலப்பது போலே
மான்விழி மங்கையும் சேர்ந்திடுவாளோ
நாளை நாளையென்று நம்பிடும் எந்தனை
நட்டாற்றில் விடாது கட்டியணைந்திட
(இப்பொ)

.........(யோசித்தவண்ணமிருக்கிருன்)............ஆம்! அவள் வரும் நேரமாய்விட்டது!......நிச்சயமாய் வந்து விடுவாள்! வராமலிருக்கமுடியாது!...நான்தான் ஆசை காட்டியிருக்கிறேன்! அசோகனை நினைத்து, அவள் வேகமாக வந்து என்வலையில் விழப்போகிருள்...... (ஆனந்தம்மேலிட்டவனுய்)...அப்பா!...அவள் அழகைப்

பார்த்தால் எனக்கு உலகமே சுற்றுகிறது!...அந்தக் கிழட்டுப்பயல்-ஆஷாடபூதி—பிரபாகரனிடம் இவள் போனுளாமே! ஏன் போனுள்?...அவள் ஏன் வீணுக அலையவேண்டும்?...என்னிடம் நேரே வருவது; அன்பான முத்தமொன்றைத் தருவது; பிறகு, அவள் என் சர்வசக்தியையும் அறிந்துகொள்வாள்!.........அசோகனை விடுதலை செய்யும்படி அரசரிடம் சொல்வதாகச்சொல்லித் தான் அவளுடைய காதலை நான் பெறவேண்டும்!... ஆயினும், அசோகன் செத்தொழியத்தான் வேண்டும்... அப்பப்பா! அவளுடைய மொழி எவ்வளவு மதுரமாயிருக்கிறது!

(வாஸந்தி வருகிருள். அவளைக்கண்டதும் சந்திரசேனன் கண்டிப்பாயிருப்பவன் போல பாசாங்கு செய்கிருன்.)

வாஸந்தி :—(உட்கார்ந்துகொண்டு) சந்திரசேனரே! அசோகரின் விடுதலை விஷயம் பற்றி.......

சந்திர :—(மிடுக்காக)......வாஸந்தி! அதுவிஷயமாக யோசித்தேன்! நீங்கள் வேண்டும் வரனைக் கொடுக்க வல்லவர் அரசர்தான்! என்னிடம் ஒரு சக்தியுமில்லை!...

வாஸந்தி :—அரசர் உமது கைப்பிடியில் தானே இருக்கிருர். நீர் நினைப்பது தானே நடக்கும்!...

சந்திர :—(வாஸந்தியைக் கூர்ந்து பார்த்தவண்ணம்) அசோகரை விடுவிக்க நான் எனது செல்வாக்கை உபயோகிக்க வேண்டும் என்று தானே நீங்கள் விரும்புகிறீர்கள்?...

வாஸந்தி :—ஆமாம்!...

சந்திர :—(தயங்குவதுபோல நடித்துவிட்டு)...........ராஜத் துரோகியை விடுவிக்கச் சிபாரிசு செய்வதுகூட ராஜத் துரோகமே!...

வாஸந்தி :—அசோகர் என்ன குற்றம் செய்தார்?...

சந்திர :—அரசாணையை மீறுவது குற்றமில்லையென்று நீங்கள் நினைக்கிறீர்களா?...

வாஸந்தி :—(சற்று நிதானித்து)...பின், அசோகர் இறக்கத்தான் வேண்டுமா?...

சந்திர :—வேறுவழிஇல்லையென்றே நினைக்கிறேன்.

வாஸந்தி :—அரசரைத் திருப்பமுடியாது என்றுதானே நீர் நினைக்கிறீர்?...

சந்திர :—சட்டம் அதற்கு இடங்கொடுக்காது.

வாஸந்தி :—குற்றமற்றவர்களைத் தண்டிப்பதற்கு உங்கள் சட்டம் இடமளிக்கிறது போலும்!...

சந்திர :—தேவி ! நீங்கள் பேசுவது அரசருக்கு விரோத மானது...காலம் மீறிவிட்டது !...

வாஸந்தி :—(வருத்தத்துடன்)...காலம் மீறிவிட்டதா ?...இம் மாதிரியான குற்றத்திற்காக இதற்கு முன்பு எவராவது இறந்திருக்கிறார்களா ?...

சந்திர :—வாஸந்தி! பேசிப் பயனில்லை !...தூங்கினபோதிலும் சட்டம் இறந்துவிடுவதில்லை !...அசோகன் மடியவேண்டியது தான் !...

வாஸந்தி :—(ஆத்திரத்துடன்)...பிரபுவே !....இத்தண்டனை அளிப்பதில் இவ்வரசர் முதலாகவும், பெறுவதில் அசோகர் முதலாகவும் ஏற்படுகிறது !...ராட்சஸபலமிருப்பது நல்லதுதான் ; ஆனால் அவனைப்போல அதை உபயோகிப்பது தவறாகும் ! (மேலேபார்த்தவண்ணம்) கருணைக் கடவுளே! நீர்கூட, உமது கூரியபாணத்தால், கடினமான மரத்தையே பிளக்கிறீர்; மிருதுவான நாணலைப் பிளப்பதில்லை. ஆனால், கர்வம் பிடித்த மனிதனோ, சொற்ப அதிகாரம் கிடைத்த உடனேயே தனது கண்ணாடிபோன்ற தன்மையை மறந்துபல அட்டூழியங்களைச்செய்கிறான்!...

சந்திர :—(தனக்குள்)......அவள் பேசுவது என் அறிவிற்கும் சரியாகவே காண்கிறது !......வாஸந்தி ! அசோகன் விடுதலை யாவதற்கு ஒரேயொரு வழிதானிருக்கிறது !

வாஸந்தி :—(ஆர்வத்துடன்)...அது என்ன ?......சீக்கிரமாய்ச் சொல்லும் !...

(சந்திரசேனன் எழுந்து மௌனமாக உலாவிவிட்டு மறுபடியும் உட்கார்ந்து கொள்ளுகிறான்).

சந்திர ;—அசோகரைக் காப்பாற்றக்கூடிய சக்தியுள்ள ஒருவர் உங்கள் அழகில் மயங்கிக் கிடக்கிறார். அவர் இஷ்டத்திற்கு நீங்கள் இணங்கினால், அசோகர் மன்னிக்கப்படுவார். இதற்கு நீங்கள் சம்மதிப்பீர்களா ?...

வாஸந்தி :—(கோபாவேசத்துடன்)...அப்படியானால் ஒருவரின் விடுதலைக்காக பெண்கள் தங்களது சரீரத்தை உங்கள் இஷ்டத்திற்கு உட்படுத்த வேண்டுமென்பதுதான் உங்களின் சட்டலட்சணமோ ?...அப்படிச் செய்வதை விட நான் என் உயிரையே விடுவேன் !...

சந்திர :—(சிரித்துவிட்டு)......தாஸிகுலத்திற்கும் கற்புக்கும் கொஞ்சங்கூட சம்பந்தமில்லையே !

வாஸந்தி ;—(வெறி பிடித்தவள்மாதிரி)........சீச்சீ ! துன்மார்க்கா!...உன் நாக்கை அடக்கிப் பேசு!...உன் சுபாவம் தெரியாமல் நான் உன்னிடம் வந்ததே தவறாகும் !

உன்னைப்போன்ற காமாந்தகாரர்களின் பிடிப்பில் இந்த அரசர் இருக்கும் வரையில் இந்த நாட்டில் கொடுங்கோன்மையும் விபசாரமுமே தாண்டவமாடும்!......ஏ! பேயே! நீ எத்தகைய மனிதன் என்பதை நான் உலகறிய உரத்தக்குரலில் பறை சாற்றுகிறேன்!...

சந்திர :—(போதைகொண்டவன்போல) கண்ணே! கருமணியே! உன்கோபம் உன் லாவண்யத்தை அதிகப்படுத்துகிறது!...கண்ணாடி அறைக்குள் இருந்துகொண்டு கத்தினால், அந்தக் குரல் வெளியே கேட்காது!...ஆத்திரப் படாதே!...என் மோகத்தைத் தணி!......அந்த அபூர்வ சக்தி உன்னிடம்தான் உள்ளது!...குதிக்காதே! ...உன் சரீரத்தை என் இஷ்டத்திற்களித்து,

வாஸந்தி :—(எழுந்து ஆவேசத்துடன்) பேசாதே! பதரே!... (கண்களில் நீர்பெருக) நான் யாரிடம் முறையிடுவது? அரசரிடமும்,

சந்திர :—யாரும் உன்னை நம்பமாட்டார்கள்...வேசி குலத்தவளின் ஜாலத்தை எவர்தான் அறியார்!...என்னுடைய அதிகாரம் உனது உண்மையைக்கூட அமுக்கிவிடும்!... வா!...துள்ளியோடாதே!...அதோபார்!.....துஷ்யந்தன்—சகுந்தலை போல நாமிருவரும் கட்டிக்கொஞ்சி விளையாடுவோம்!...என்னை ஆட்கொண்டு விட்டால், உலகத்தையே நீ கட்டி ஆளலாம்!...பிறகு நீயே ராணி!... என் இதயராணி!...வா!...பிடிவாதம் செய்யாதே!...

வாஸந்தி :—(ஆவேசத்துடன்)...என் வார்த்தையை எவரும் நம்பமாட்டார்கள்!......தாஸிகுலப்பெண்ணாகிய நானும் வேசி!...இல்லையில்லை!...குலத்திற்கும் ஒழுக்கத்திற்கும் என்ன சம்பந்தம்?...இதை நான் நிரூபிக்கவேண்டும்!... (சரேலென்று வெளியே ஓடி விடுகிறாள்)

[சந்திரசேனன் இதை எதிர் பார்க்கவில்லை. வெளியே இருந்த காவலாளிகளும் இதை எதிர் பார்க்கவில்லை. வாஸந்தி தப்பியோடி விட்டாள் என்று உணர்ந்த சந்திரசேனனுக்குக் கோபம் உச்சந் தலைக்கு ஏறி விட்டது.]

(உரக்க)

சந்திரசேனன் :—டேய்! பஹதூர்!..........அவளை ஏண்டா வெளியே போகவிட்டாய்?...

பஹதூர் :—நீங்கள் விடக்கூடாதுனு....

சந்திர :—உனக்கு மூளை இல்லையா?...

பஹதூர் ;—ஆமாங்கோ!

சந்திர :—(ஆத்திரத்துடன்)...டேய்! அந்த விமலனைக் கூட்டிவா! ஓடு! மூச்சுத்தெறிக்க ஓடு! (வேலைக்காரன் ஓடுகிறான்)

(விமலன் வருகிறான்)

விமலன் :—(வந்துகொண்டே) கூண்டுக்கிளி பறந்தோடி விட்டதாமே!

சந்திர :—அந்தப் பட்டுப்பூச்சி என்காலடியில்தான் விழப் போகிறது:

விமலன் :—என்னை ஏன் அவசரமாக அழைத்தீர்கள்?...

சந்திர :—ஓடிப்போனவள் அரசரிடம் நேரில் சென்று முறையிட்டால்.........அவள் வார்த்தையில் ஒருக்கால் அரசர் மயங்கி விட்டால்...

விமலன் :—அரசருக்கும் காவல் போட்டுவிட்டால்...

சந்திர :—அது கூடாது! அரசரே நம்மீது சந்தேகம் கொண்டு விட இடம் தரக்கூடாது!.........நாமே சென்று முன்னதாகவே அரசரைப் பார்த்துவிடவேண்டும். அரசரைச் சரிக்கட்ட அதுதான் வழி! நீயும்வா!...

(இருவரும் போகிறார்கள்)

**அங்கம் 3] [காட்சி 4**

[அரசருடைய மாளிகை. ஆசனமொன்றில் சாய்ந்து கொண்டு ஏதோ படித்தவண்ணமிருக்கிறார்.]

(சந்திரசேனன் விமலனுடன் வருகிறான்.)

அரசர் :—வாருங்கள்!...உட்காருங்கள்!...

(இருவரும் உட்காருகிறார்கள்)

அரசர் :—ஏதாவது விசேஷச் செய்தியுண்டோ?...கிளர்ச்சிக்காரர்களை யெல்லாம் பிடித்தாய்விட்டதா? எப்படியும் ஆஸ்திகம் காப்பாற்றபடவேண்டும்!...மதத்துக்கு அபாயம் நம் நாட்டில் துளியும் இருக்கக்கூடாது!...

விமலன் :—அதற்காகத்தானே சந்திரசேனன் அல்லும் பகலும் அனவரதமும் விரதம் கொண்டிருக்கிறார்!...

அரசர் :—இல்லாவிட்டால், அதர்மம் ஓங்கும்போது "சம்பவாமியுகே, யுகே" என்று பகவான் கீதோபதேசம் செய்வாரா?......நாஸ்திகர்களை அழிப்பதுதானே நமது கடமை!...

விமலன் :—பகவத் கட்டளையைச் சிரமேற்றாங்கியே சந்திரசேனன் அவர்கள் நடக்கிறார்!.........அதே கவலையால்—அதே வேலையால் அவர் தளர்ந்து கிழவனாகக்கூட மாறி விட்டார்!......

அரசர் :—அதிருக்கட்டும்! சந்திரசேனரே! ஏதாவது விசேஷம் உண்டா?......

சந்திர :—(மெதுவாக)......அந்த வாஸந்தியும், பிரபாகரரும் கூட......

விமலன் :—சொல்லக் கூசுது அவருக்கு......நான் உடைத்துச் சொல்லிவிடுகிறேன், அந்த இருவரும் ராஜத் துரோகிக ளாக மாறிவிட்டார்கள்!...

அரசர் :—(ஆத்திரத்துடன்)...ராஜத்துரோகிகளாக மாறிவிட் டார்களா ?...

சந்திர :—புரட்சிக்காரர்களுக்கு மறைமுகமாக அவர்கள் உதவி செய்கிறார்கள் என்று எனக்கு நமது உளவர்கள்மூலம் செய்தி வந்திருக்கிறது!...

அரசர் :—நான் இதை நம்பமுடியவில்லை !...

சந்திர :—(சமாளித்துக்கொண்டு) அரசே ! இது இன்னும் ஊர்ஜிதமாகவில்லை!...

அரசர் :—அந்த முரளீதரனுக்கு அவ்வளவுசெல்வாக்கு இருக் கிறதா ?...

சந்திர :—(அலட்சியமாக)......அவன் கிடக்கிறான்! வெறும் சோம்பேறிப் பயல்! அவர்களை நாம் அடக்கிவிட முடி யும்!...

அரசர் :—ஜனத் தலைவர்களின் ஆலோசனைப்படியே என் ஆட்சி நடக்கும்படி மாற்றப் போகிறார்களாமே!

சந்திர :—அரசே ! இந்த 'வெத்து வேட்டு'க்களை நீங்கள் ஏன் பொருட்படுத்த வேண்டும் ?...நாஸ்திகர்கள் நினைப்பதை யெல்லாம் நாம் செய்துவிட முடியுமா ?......இவர்களின் பயமுறுத்தலுக்காக நாம் நமது பரம்பரையான ஆட்சி முறையை விட்டு விட முடியுமா ?......

அரசர் :—ஆம் ! ஆம் !...முடியவே முடியாது !...

விமலன் :—ஒருநாளும் முடியாது !

அரசர் :—அசோகனிடம் அந்த வாஸந்திக்குக் காதல் ஏற்பட்டு விட்டதோ ?

சந்திர :—(வெறுப்புடன்)...அரசே ! அவளும் ஒரு பெண்ணா? ...காம வெறி பிடித்த பேய் !...கண்களை உருட்டிவிட்டு ஆடவரை மயக்கவைக்கும் அந்தக் கள்ளிக்கு காதல் வேறா?.........அதுவும் அவளுடைய மாயாஜாலமாயிருக் கும்!...

அரசர் :—(போக எழுந்து)...சந்திரசேனரே ! ஜாக்கிரதையா யிருங்கள்!.........கலகக்காரர்களை யெல்லாம் சீக்கிரமே அடக்கி விடுங்கள் !

சந்திர :—(எழுந்து).........அரசே ! வெடிமருந்து வெடிக்கும் தருவாயிலிருக்கிறது !.........கலகக்காரர்கள் அதன்மீது விழுந்து பூச்சிகளைப் போல மடியப்போகிறார்கள்...(சற்

றுத் தயங்கித் தயங்கி)......பிரபாகரரோ அல்லது வாஸந்தியோ சொல்வதில் தாங்கள் மயங்கிவிடக்கூடாது!...

அரசர் :—(அதிகாரத்துடன்)............ஆளப் பிறந்தவனுக்கு இதெல்லாம் தெரியாதா ?......போய்வாருங்கள்.

(அரசர் உள்ளே, போகிருர்)

சந்திர :—விமலா !...எப்படி என் வேலை ?

விமலன் :—ஆடு ராஜா, ஆடு ராஜா—நாங்கள் சொன்னபடி எல்லாம் நீ ஆடு ராஜா......

(போகிருர்கள்)

## அங்கம் 3] [காட்சி 5

[அரசருடைய மாளிகை, காலை.
அரசரும் வாஸந்தியும் பேசிக்கொண்டிருக்கிருர்கள்]

அரசர் :—வாஸந்தி ! முடியாத விஷயத்தில் நீ ஏன் அதிக ஆர்வம் காட்டுகிருய ?

வாஸந்தி :—அரசே ! பின்பு நானும் அசோகரின் பாதையிலேயே என் பிரயாணத்தை......

அரசர் :—(ஆச்சரியத்துடன்). அவன் ராஜத்துரோகியாயிற்றே !...நாஸ்திகனுயிற்றே !...இது உனக்குத் தெரியாதா?

வாஸந்தி :—அரசே !......அசோகர் உண்மையான கடவுள் பக்தர். அவர் மனித சிருஷ்டியையே பெரிதும் மதிக்கிருர் !

அரசர் :—அரசனை நிந்திப்பதுதான் அவன் பக்தி !......

வாஸந்தி :—கொடூரமான ராஜரீக முறையையும், 'மதத்தைக் காப்பாற்றுகிருேம்' என்று பொய்யாகச் சொல்லிக் கொண்டு பாதகங்களைச் செய்பவர்களையுமே அசோகர் எதிர்க்கிருர் !.........பூமியில் கடவுளின் ராஜ்யம் ஏற்பட வேண்டுமென்பதுதான் அவருடைய ஜீவலட்சியம் ! சோதர மக்களை நேசிப்பது மூலமே அவர் கடவுளை நேசிக்கிருர் !...

அரசர் :—பெண்ணே !......அரசனும் கடவுளின் பிரதிநிதி தானே !...இதைத்தான் அசோகன் ஒப்புக்கொள்ள வில்லையே !...

வாஸந்தி :—தாங்கள் சொல்லுவதை நானும் ஒப்புக்கொள்ள வில்லை. இன்று இந்த ராஜசபை சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை !............கேவலம், கேளிக்கை—சதி—பலாத்காரம்—போகம் — இவைகளையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது !

அரசர் :—(கோபத்துடன்)...வாஸந்தி! என் ராஜ்யத்தில் தர்மமே இல்லையென்று நீ சொல்லுகிறாய் ?

வாஸந்தி :—(உறுதியுடன்) தர்மம்—சத்தியம்—இவைகளின் ஏகப் பிரதிநிதிக்கு மரண தண்டனை அளித்த தங்கள் ராஜ்யத்தின் தர்மம் எப்படியிருக்கமுடியும் ?

அரசர் :—(கோபத்துடன்)......சந்திரசேனன் சொன்னது சரி தான் !......நீயும் ராஜத்துரோகிதான் !......சதிகாரி !... நீ யென்ன அசோகரின் வாரிஸா ?

வாஸந்தி :—(தைரியத்துடன்)......ஆம் ! அரசே !......அசோகர் தான் என்னுடைய ஆதர்ஸ புருஷர் !...நானும் அவருடைய அடிச்சுவடுகளையே பின்பற்றுகிறேன்.

அரசர்: —(ஆத்திரமாக)...அதனால் ஏற்படும் பலாபலன்களை...

வாஸந்தி;—தங்களுடைய இரும்புக்கர ஆட்சியை எதிர்க்கும் மனோபலத்தையும் பெற்றுவிட்டேன்.

அரசர்:—இரும்புக்கர ஆட்சியா?......

வாஸந்தி:—இரும்புக்கரத்தினால்தான் ஒரு தர்மாத்மாவைக் கசக்கியெறியப் பார்க்கிறீர்கள்!...

அரசர்:—சரி சரி!...சந்திரசேனன் கூறியது வாஸ்தவமே!...

வாஸந்தி:—அரசே! அந்தக் காமாந்தகாரனின் யோசனையில் மூழ்கிய தங்களைக் கடவுளே காப்பாற்றவேண்டும்!...

அரசர்:—(கோபத்துடன்)...தூஷணையிலும் இறங்கிவிட்டாயே!...சந்திரசேனன் களங்கமற்றவர்!...

வாஸந்தி:—அசுரனை சுக்கிராச்சாரிதான் புகழமுடியும்!...

அரசர்:—(உரக்க) வாஸந்தி! யார்...அசுரன்?

வாஸந்தி:—(கலங்காதவளாய்)...தங்களுடைய சந்திரசேனனே அந்தக் கொடிய அசுரன்!...அவனைப் பார்க்கச் சென்ற என்னை தன் மிருக இச்சைக்குப் பலியாக்கிவிட முயன்ற மகா அசுரன்!...

அரசர்:—வாஸந்தி...வீணாக நீ அவரைத் தூஷிக்கிறாய்...... உன்னை நான் நம்பமுடியாது!...

வாஸந்தி:—ஆம்!...தாஸி குலத்தவளின் பேச்சை எவரும் நம்பத்தான் மாட்டார்கள்!...பாதகனின் ஒவ்வொரு தகாத செய்கைக்கும் நீங்கள் முத்திரை வைக்க ஆரம்பித்து விட்டீர்கள்!...

அரசர்:—வாஸந்தி!...வீண் வார்த்தையாடாதே!...நீ பெண்ணாயிருப்பதால்தான், நான் உன்னை தண்டிக்காமல் விடுகிறேன்!...சரி!...போய்விடு!...

வாஸந்தி!—அரசே! ஒரு வேண்டுகோள்!...

அரசர்:—(ஆயாசத்துடன்) சரி!...சொல்!...

வாஸந்தி:—அசோகரை, அவர் தூக்கிலிடப்படுவதற்குள் நான் ஒரு முறை சிறையில் சந்திக்க அனுமதியளியுங்கள்!...

அரசர்:—இவ்வளவுதானே!......சரி! அனுமதித்திருக்கிறேன், அவனைச் சந்தித்த பிறகாவது நீ திருந்திவிடுவாய் என்று நம்புகிறேன்.

வாஸந்தி:—(எழுந்து)...திருந்த வேண்டியது நீரா அல்லது நானு என்பது போகப் போகத்தானே தெரியும்!......

(வாஸந்தி போகிருள்)......

அரசர்:—(தனிமையில்)......இந்த லளித கலைவாணியை நான் தண்டிக்க விரும்பவில்லை!

(போகிருர்)

## அங்கம் 4] [காட்சி 1

[மலையுச்சியிலுள்ள கோட்டைச் சிறை. பிற்பகல். சிறை வெளியே ஆயுதந்தாங்கிய வீரர்கள் காவல் புரிகின்றனர்.

உள்ளே ஒரு வெளி. அதன் நடுவே ஒரு மரத்தடியில் இரு கவிராயர்களும், இரு பாடகர்களும் கல்லுடைத்துக் கொண்டிருக்கிருர்கள். வேலை செய்து கொண்டே இருவரும் பேசிக் கொண்டிருக்கிருர்கள். கொஞ்ச தூரத்தில் இரு சிறைக் காவலாளிகள் உட்கார்ந்து கொண்டிருக்கிருங்கள்.]

ஒரு கவிராயர்;—அப்பனே!...ஆண்டவனைப்பாடும் வாயால், அகங்கார மனிதர்களைப் பற்றிப் பாடியதால்தான் எனக்கு இந்தத் தண்டனை!......வேண்டும் எனக்கு இந்தத் தண்டனை!...

மற்ருெரு கவிராயர்:...கவித்வத்தின் மகிமையை உணராது, கேவலம், அதைப் பரிசுக்கும், பெருமைக்கும் விற்ற என்னைச் சித்திரவதைக்குள்ளாக்கினும் எனக்கு அது தகும்!

ஒரு பாடகர்:—பட்டாடைக்கு ஆசைப்பட்டுத் பாதக மனிதனை முகஸ்துதி செய்து பாடிய என்னைத் தூக்கிலிட வேண்டும்!...

மற்ருெரு பாடகர்:—நண்பர்களே!...ஆதிக்க வெறியர்களுக்குப் பணியாமல், வீரத்துடன் மரணத்தையும் வரவேற்கும் அசோகரல்லவோ மனிதர்!...அவரே அதிமனிதர்!...

காவலாளிகளில் ஒருவன்:—என்னடா!...கழுதைகளா!...பிரசங்கம் செய்கிறீர்களே!...வேலையைச் செய்யுங்கடா!...முதுகு பத்திரம்!...

(மற்ருெரு பக்கம்; ஒரு அறையில் அசோகன் பாடிக் கொண்டிருக்கிருன்.)

ராகம் : சாமா

**பல்லவி**

சாந்தி யடைந்திடுவோம்—மனச்
சாந்தி யடைந்திடுவோம்

(சாந்தி)

**அ. பல்லவி**

மாந்த ரெல்லாமினி மமதையை மறந்துமே
மானில முதல்வனை மகிழ்வுடன் பாடியே

**சரணங்கள்**

இன்னல் நினைவுமெல்லாம்
இகழ்ச்சி வீழ்ச்சியுமெல்லாம்
அன்பினுல் அழியுமாம்!
அன்பிற் கழிவேது?

(சாந்தி)

கருமத்தைச் செய்வோரெல்லாம்
கடவுளைக் காண்பரென்னும்
தரும மிக்கோர் வழியைத்
தாரக மாகக்கொண்டு

(சாந்தி)

அவனிருந்த அறைக்குப் பக்கத்திலுள்ள அறையில் கருணாளன் விம்மி விம்மி அழுது கொண்டிருக்கிறுன். அசோகன் இந்த அழுகையைக் கேட்டுப் பாடுவதை நிறுத்தி விடுகிறுன்)

கருணாளன்:—(தன் அறைக்குள் இருந்தபடியே)...என் அழுகை எவருடைய காதிலும் விழப்போவதில்லை...நான் அழுது அழுது சாகத்தான் வேண்டுமா!... ஏ! கடவுளே!...

(அழுகிறுன்)

அசோகர்:—(தன்னுடைய அறையிலிருந்து கொண்டே) அப்பா!...நீ யார்?...என்ன குற்றம் செய்தாய்?...ஏன் அழுகிறுய்?...

கருணாளன்:—ஐயா!...என் பெயர் கருணாளன். நான் ஒரு குற்றமும் செய்யவில்லை...என்னுடைய சகோதரியை மணம் செய்து கொள்வதாக வாக்களித்து, பேதையவளுடைய ஆலிங்கனத்திலும் பல இரவுகள் இருந்து விட்டு, முடிவில் நான் அவளுக்கு அதிகமாக ஸ்ரீதனம் கொடுக்கவில்லையென்ற காரணத்தால் அவளைமணம் செய்துகொள்ளாமல் ஏமாற்றி, அவளுடைய வாழ்க்கையைக் கெடுத்த படுபாவி சந்திரசேனன் என்னை இங்கே அடைத்துவிட்டான். நான் வெளியே இருந்தால், 'கறை படாதவன்' என்று பாசாங்கு செய்யும் அவனுடைய ரகஸ்யம் அம்பலத்திற்கு வந்து விடுமாம்! அதனுல் எனக்கு இந்த கதி நேர்ந்திருக்கிறது.

அசோகன்:—இதற்காகத் தான் அழுகிருயா?

கருணுளன்:—ஆம்!...அவனுக்கெல்லாம் தண்டனை கிடைக்கவில்லையே!

அசோகன்:—பொறுமையாயிரு!......'பயமில்லை' என்ற மந்திரத்தை ஜபித்துக்கொண்டிரு. அப்போது, மரணங்கூட உனக்கு இன்பமாக இருக்கும்!

கருணுளன்:—(நடுக்கத்துடன்)......அப்பாடி!.....இறக்கவோ......எங்கென்று தெரியாத இடத்திற்குச் செல்லவோ......அது மிக பயங்கரம்!......என்னை யார்தான் காப்பாற்றப் போகிருரோ!......

(உரக்க அழுகிருன்)

அசோகன்:—(தனக்குள்).......வாழ்வின் ரகஸ்யத்தை இவன் புரிந்து கொள்ளவில்லை!......(கருணுளனிடம்)......உன் மரணத்திற்காக ஆயிரம் பிரார்த்தனைகள் செய்!...அப்போதுதான் நீ புனர்ஜன்மம் எடுக்க முடியும்!.........நம் பிக்கையற்ற பயங்கொள்ளிகளுக்கு புனர்ஜன்மத்திலாவது தைரியம் பிறக்கட்டும்!......

[சிறை வாயிலில்]

(வாஸந்தி வருகிருள்)

ஒரு காவலாளி:—(வாஸந்தியிடம்)......நீங்கள் யாரம்மா?

வாஸந்தி:—நான் ஒரு பெண்.

மற்ருெரு காவலாளி;—பெண்தானம்மா, தெரிகிறது!...இந்நேரத்தில் இங்கு ஏன் வந்தீர்கள்?......

வாஸந்தி:—அரசரின் அனுமதிபெற்று அசோகரைத் தரிசிக்க வந்திருக்கிறேன்......

(வாஸந்தி அரசருடைய உத்திரவை காவலாளியிடம் காண்பிக்கிருள்)

(ஒரு காவலாளி உள்ளே போகிருன்)

[உள்ளே]

(அசோகன் தன்னை மறந்து பாடிக்கொண்டிருக்கிருன்.)

ராகம்:—கல்யாணி

பல்லவி

சிறை வாழ்க்கை என்ன செய்யும்?
இறை வனருளினை வேண்டி நின்ருரைச்
(சிறை)

அ. பல்லவி

நிறைந்திடும் பேரன்பிற் தெளிந்திடுமுறுதியில்
நிமிர்ந்துமே நடந்திடும் நிர்மல வீரரைச்
(சிறை)

சரணம்

சிந்தைத் துணிவுட னித்தல மீதினிற்
சிரிய பண்பினில் நீதியை நாட்டிட
சிந்தை மகிழ்வுடன் சேவையில் லயித்திடும்
சாவினுக் கஞ்சாத சாகஸ தீரரைச்

(சிறை)

காவலாளி அவர் பாடுவதை நிறுத்தும்வரை காத்திருக்கிருன்).

காவலாளி:—(மரியாதையுடன்)...சுவாமி!...தங்களைப் பார்க்க ஒரு பெண் வெளியே காத்திருக்கிருள். அரசரின் அனுமதியும் பெற்றிருக்கிருள்.

அசோகன்:—(ஆச்சரியத்துடன்)...என்னிடத்தில் பெண்ணுக்கு ஒரு வேலையும் இல்லையே!...மேலும், நானே ஒரு கைதி!...

காவலாளி;—அவள் தங்களுடைய மனைவியாக இருக்கக் கூடும்!...

அசோகன்:—(சிரித்துவிட்டு)...அப்பனே!...எனக்குவிவாகமே ஆகவில்லையப்பா!......

காவலாளி:—வந்திருப்பவள் மிகவும் அழகாக இருக்கிருள்!...

அசோகன்;—(தனக்குள்)......அவளுடைய அழகே அவளுக்கு ஆபத்துப் போலும்!......

(அசோகன் எழுந்து காவலாளியுடன் வெளியே வருகிருன்)

(வெளியே)

(சிறை வாயிலில் வாஸந்தியைக் கண்டதும் அசோகனுக்கு ஆச்சரிய மேற்படுகிறது! அசோகனைக் கண்டதும் வாசந்தி எழுந்து அவரை நமஸ்கரிக்கிருள். இருவரும் உட்காருகிருர்கள். அவ்விருவருக்கும் இடையே பெரிய ஜன்னல்கொண்ட ஒரு சுவர் இருக்கிறது. அந்தச் சுவருக்கு உட்புறம் அசோகனும், வெளிப்புறம் வாசந்தியும் இருக்கிருர்கள். ஜன்னல் வழியாக ஒருவரை யொருவர் சரியாகப் பார்த்துக்கொள்ள முடிகின்றது).

அசோகன்:—வாஸந்தி......என்னை நீங்கள் ஏன் பார்க்கவேண்டும்?

வாஸந்தி:—(குனிந்த வண்ணம்) என்னை நீங்கள் 'நீ' என்று அழைத்தாலே போதும்!......நான் வயதிற் சிறியவள். அப்படி அழைப்பதையே நான் விரும்புகிறேன்.

அசோகன்:—(புன்முறுவலுடன்)......சரி! அப்படியே கூப்பிடுகிறேன்!......அதிருக்கட்டும்!......தனியாக இந்நேரத்தில் நீ ஏனம்மா இங்கு வரவேண்டும்?......

வாஸந்தி:—தங்களுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற என் மனம் துடிப்பதால்தான்!......

கூடாது. வெளியிலிருந்துகொண்டு நீயும் சத்திய மார்க்கத்தில் போய்க் கொண்டிருக்கவேண்டும்!......

வாஸந்தி:—(தயங்கியவளாய்)......ஆனல்,......

அசோகன்;—வாஸந்தி!...நான் செல்லும் பாதை மிகவும் குறுகலானது. அதில். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் திரும்புவதற்குக்கூட இடமில்லை. நேராகவே நிமிர்ந்த வண்ணம் மேலும் மேலும் சென்றுகொண்டே யிருக்க வேண்டும்; சேரவேண்டிய இடத்திற்கு அப்போதுதான் போய்ச் சேரமுடியும்!

வாஸந்தி:—(குனிந்த வண்ணம்)...என்னைப் பொருத்தவரை தாங்கள்தானே அந்த இடம்!...

அசோகர்:—வாஸந்தி!...நீ என்ன சொல்லுகிருய்?...

வாஸந்தி:—பிரபுவே!...தாங்கள்தான் பாதையை அமைப்பவர்; ஆகையால், பாதையையும் தாங்கள் விஸ்தாரப் படுத்த முடியும்!...(தனக்குள்) இது என்ன?...நான் அவரை, எனக்காக சரணுகதியடையச் சொல்லுகிறேனே!...அவர் மீதுள்ள என்னுடைய காதல் அவருடைய லட்சியத்தைச் சிதைக்கப் பார்க்கிறதோ!...

அசோகன்:—(வாஸந்தியின் மனநிலையை உணர்ந்தவராய்)... வாஸந்தி!...உனக்கு என் மீது பிரேமை இருப்பதாக நானும் உணருகிறேன்!...அதற்காக, நான் என்னுடைய ஆத்மாவை விற்றுவிட முடியுமா?......லட்சிய புருஷனுக்கும், மமதை கொண்டு அலைபவனுக்கும் இடையேயுள்ள தூரம் அகண்டு கொண்டேயிருக்கும்! அவர்களிடையே சமரஸம் என்பது கிடையாது!...
(வாஸந்தி மௌனமாக அவனையே பார்த்துக் கொண்டிருக்கிருள்,)

அசோகன்:—(மீண்டும்)...வாஸந்தி!... நீ உடலையே பெரிதாக நினைத்து விட்டாய்!... சத்தியத்தினுல் அமையாத வாழ்க்கையில் எனக்கு நம்பிக்கையில்லை, நீ இதை நன்ருகத் தெரிந்து கொள்ள வேண்டும்...பாவம்!...உன்னுடைய சபலம், இங்குமங்கும் உன்னை இழுத்தடிக்கிறது!...

வாஸந்தி:—நான் தங்களிடம் பிடிவாதம் செய்ய முடியாது,

அசோகன்;—வாஸந்தி!...நமது உயிர், கடவுளின் அடமானப் பொருள்! அதை நாம் எப்போதாயினும் அவரிடம் திருப்பி ஒப்படைக்கச் சித்தமாயிருக்க வேண்டும்!...

வாஸந்தி:—(கண்களில் நீர் பெருக)...சுவாமி நான் பெண்! தாங்கள் எனக்காக எப்படியும் தங்களுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்!...

அசோகன்:—வாஸந்தி...நீ ஏன் அழுகிருய்?...பாவம்!...என் மீதுள்ள பிரேமையினுல் நீ கலையின் லட்சியத்தைக்கூட மறந்து விட்டாய்!...அழிந்து போகும் என்னுடைய சரீரத்திற்காக நீ அழுகிருயே!...ஜனநாயகம் தழைக்க, உண்மையான கலை உயர, சிந்தனையின் சுதந்திரம் ஓங்க, அவசியம் ஏற்படும்போது எந்தக் கலைஞனும் தன் உயிரையும் தியாகம் செய்யவேண்டும்; அவனே உண்மைக் கலைஞன்!...அதுவே அவனுடைய அழியாத சௌகரியமாகும்!...வாஸந்தி!...என்னை நீ நேசிப்பது உண்மையானுல் நான் என்னுடைய ஜீவலட்சியத்திற்காகச் சாவதையும் நீ வரவேற்க வேண்டும்!...சிரித்துக் கொண்டே வரவேற்க வேண்டும்;...ஒன்றை மட்டும் நிச்சயமாக உணர்ந்துகொள்!... என்னைக்காட்டிலும், ஏன் வேறு எந்த மனிதனைக் காட்டிலும், சுதந்திர பிரச்னை மேலானது!...இதை மனதிலிறுத்திக்கொள்!...சதா பாடிக் கொண்டே, ஆடிக்கொண்டே இந்த லட்சியக் கோவிலுக்குப் போவதையே உன்னுடைய கடமையாகக் கொள்!...

வாஸந்தி:—(கண்களைக் துடைத்துக்கொண்டு)...நானும் தங்களுடைய பாதையில்,...

அசோகன்:—அதுதான் நீ எனக்குக் காட்டும் மரியாதையாகும்!...அதுதான் கனிந்த காதல்!...

வாஸந்தி:—தங்களுடைய ஆசிர்வாதம்!...

அசோகன்:—(எழுந்திருந்து)...உனக்குக் கடவுள் தைரியத்தைக் கொடுக்கட்டும்!...

(அசோகன உள்ளே போகிருன், கதவுகளும் மூடப்படுகின்றன. வாஸந்தி சிறிது நேரம் ஸ்தம்பித்தவளாய் நிற்கிருள் பிறகு போகிருள்,)

**அங்கம்-4** **காட்சி-2**

[வாஸந்தியின் வீடு. இரவு நேரம். வாஸந்தி தனது படுக்கையில் புரண்டு கொண்டிருக்கிருள். 'அசோகா' 'அசோகா' என்று தனக்குள்ளே அடிக்கடி பிதற்றிக் கொண்டிருக்கிருள். இவளது அலங்கோலமான நிலைமையைக் கண்டு மனந்தாளாமல் கவலை முகத்துடன் அவளருகே மஞ்சரி உட்கார்ந்து கொண்டிருக்கிருள்]

(இரண்டு வேலைக்காரர்கள் விளக்குகளை வைத்துக்கொண்டு பேசிக் கொண்டிருக்கிருர்கள்.)

ஒருவன்:...டேய்! இந்த நள்ளிரவில் நம்மை இந்தச் சின்னம்மாள் விளக்குடன் வெளியே யாரையோ தேடச் சொல்லுகிருர்களே!...மனிதன், மிருகம், பறவையெல்லாம் அயர்ந்து நித்திரை செய்யும் இந்நேரத்தில் நாம் ஏன் கொலையாளிகளைப் போல அலையவேண்டும்?.........

மற்ருெருவன்:—பாவம்! அவளுடைய மனம் கலங்கியிருக்கிறது "அசோகரே! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" என்று அடிக்கடி வீறிட்டுக் கத்துகிருளே!......(உள்ளே பார்த்த வண்ணம்)......அதோ! அவள் ஓடி வருகிருள்!......

வாஸந்தி;—ஒருவனை பலமாகப் பிடித்து ஆட்டிக்கொண்டே)......ஓடுங்கள்!......அவரைத் தேடுங்கள்,....ஒவ்வொரு சுவரிலும், ஒவ்வொரு மரத்திலும், ஒவ்வொரு புதரிலும் அவரைத் தேடுங்கள்!......பூமியைத் தோண்டிப் பாருங்கள்!......வானத்திலும் பாய்ந்து சென்று அவரைத் தேடிப் பிடித்து வாருங்கள்!......(அவனைப் பலமாக அடிக்கிருள்)... (அழுகிருள்) ...அதோ!......அவர் வருகிருர்!......(கண்களைப் பொத்திக் கொண்டு)...... அவர் இங்கு வருவாரா!......எப்போது வருவார்?...... இல்லை!...வரமாட்டார்!...அவரைப் பைசாசங்கள் மறைத்துக்கொண்டன !

(வீறிட்டுக் கத்துகிருள்)

ஒருவன்:—அம்மணீ,......நாங்கள் உங்கள் வீட்டு வேலைக்காரர்கள்!......

வாஸந்தி:—(பயங்கரமான பார்வையுடன்......நல்ல இருட்டில், இங்கு விளக்குடன் யாரைத் தேடுகிறீர்கள்?......... வாஸந்தி செத்து விட்டாளா?......

(அழுகிருள்)

மற்ருெருவன்:—(வருத்தத்துடன்) ...அம்மணீ......நீங்கள் தானே எங்களை இங்கே போகச் சொன்னீர்கள்?......

வாஸந்தி:—(உரக்கச் சிரிக்கிருள்)......இல்லையில்லை......நீங்கள் ஏமாந்து வீட்டீர்கள்!......விளக்குடன் இந்தப் பகல் நேரத்தில் உங்களை உலாவும்படி நாஞ சொன்னேன்? நான் என்ன அவ்வளவு பைத்தியமா?......சூரிய தேவன் கூட உங்களைப் பார்த்துச் சிரிக்கிருனே!...வெட்கமில்லை; முட்டாள்களே!...

(ஒருவனைப் பலமாக அறைந்துவிட்டு வாய்விட்டு அலறுகிருள்)...

ஒருவன்:—அம்மா நாங்கள் பகல் விளக்கை யல்லவா எரித்துக் கொண்டிருக்கிறேம்!......

வாஸந்தி:—(ஆடிக்கொண்டே)......அப்படியாஞல் நன்ருகக் கொளுத்துங்கள்!......கொலைபாதக இரவு சாகட்டும்!... இல்லையில்லை!...வேண்டாம்!...நிறுத்துங்கள் !...தேவர்களும் வீரர்களும் இரவில்தானே தூங்குகிருர்கள்!......

மற்றொருவன்;—அம்மா! அவர்களையெல்லாம் இந்த நேரத்தில கூப்பிடாதீர்கள்......

வாஸந்தி:—(உரக்க)......அயோக்கியா! நீ பொய் சொல்லு கிருய்!...திருடா! நாளு பைத்தியம்?...நான் பைத்தியம்! ...எப்படி ஆனேன்? (உயரப் பார்த்து)......அந்தச் சூரி யன் அசோகர் கைதியான அன்று எங்கே போயிருந்தான்? ...விஷமம் நடந்தபோது, அவன் உலகத்தையே ஏன் எரித்துவிடவில்லை?......

("அசோகரே" என்று வீறிட்டுக் கத்துகிருள்)

★ ★ ★

**அங்கம் 4]** **[காட்சி 3**

[வாஸந்தியின் வீடு, இரவு. வாஸந்தி படுக்கையில் படுத்திருக்கிருள் மிரண்டவள் போல, அவள் விழித்துக் கொண்டும், பிதற்றிக கொண்டும் இருக்கிருள். மஞ்சரியோ ஒன்றும் புரியாதவளாய் மனச் சோர்வுடன் அருகே உட்கார்ந்திருக்கிருள்.]

(முரளியும், பூர்ணிமாவும் வருகிருர்கள்)

[பூர்ணிமா படுக்கையருகே சென்று வாஸந்தியை உற்று நோக்கு கிருள். வாஸந்திக்கு எவரையுமே புரிந்துகொள்ள முடியவில்லை. அவள் "அசோகர்" "அசோகர்" என்று புலம்பிக் கொண்டேயிருக்கிருள். அவள் நிலைமையைக் கண்ட பூர்ணிமாவுக்கு துக்கம் தாளவில்லை. அவளுடைய கண்களில் நீர் பெருக்கெடுக்கிறது. இந்தக் காட்சியைப் பார்க்கச் சகிக் காதவனுய் முரளியும் கண்ணீர் விடுகிருன். அவனுக்கு ஆத்திரம் பொங் கிப் பொங்கி வருகிறது. அவன் முகம் கோபத்தால் சிவந்து விடுகிறது.]

பூர்ணிமா:—(முரளியிடம்)......முரளீதரரே!......இந்த அர சன் ஒரு குரங்கு!...(வாஸந்தியைத் தொட்டு)...மெல்லிய மலர் போன்ற மிருதுவான வாஸந்தியைக்கூடக் கசக்கி எறிந்து விட்டானே!...அசோகர் இறந்து விடுவார் என்ற எண்ணமே—தன்னுல் அவரைக் காப்பாற்ற முடியாது; தனமுயற்சி யெல்லாம் தோற்று விட்டது என்ற அதிர்ச் சியே இவளுடைய மூளையைக் கலக்கிவிட்டது. அதனுல் இவளும் அங்குலம் அங்குலமாக செத்துக்கொண்டிருக் கிருள். இதற்குக் காரணமான இந்த அரசனையும், இவனை ஆட்டிவைக்கும் இந்த ரத்த வெறிகொண்ட சந் திரசேனனையும் எபபடி மன்னிக்க முடியும்?......

முரளி:—பூர்ணிமா!...மலர்களைக் கசக்கி எறியும் இந்த மாபா விகளின் கைகளைத் துண்டித்து விட்டால்தான் என் மனம் சாந்தியடையும்!......

பூர்ணிமா:—(வருத்தத்துடன்)—அதற்குள் வாஸந்தியும் அசோ கரும் மடிந்து விட்டால்,...............

முரளி:—(படபடப்புடன்) இவர்களை நான் சாகவிடமாட் டேன்!......ஆனுல், இவர்களை இந்நிலைக்கு உள்ளாக்கிய

வர்களேயே நான் துவம்சமாக்கி விடுவேன்!......

பூர்ணிமா:—(அவசரமாக)—நீங்கள் உடனே புறப்படுங்கள்! இன்னும் இரண்டு நாட்களில் அசோகரைத் தூக்கிலிடப் போகிறார்களாம்!......அதற்குள் அரசரையும், மற்ற பேய்களையும் கைது செய்தாலொழிய, அசோகரைக் காப்பாற்ற முடியாது. பிறகு, வாஸந்தியும் உலகத்திலிருந்து மறைந்து விடுவாள்...உம்! நாழிகையாய் விட்டது. அரசரின் ஒற்றர்கள் உலாவும் நேரமிது!...விரைந்து சென்று அரண்மனை முற்றுகைக்கான காரியங்களைத் துரிதப்படுத்துங்கள். நீங்கள் அகப்பட்டுக்கொண்டு விடாதீர்கள்! ஜாக்கிரதை!......

முரளி:—(எழுந்து)...நீயும் ஜாக்கிரதையாகத் திரும்பி விடு. உன் மீதும் அவர்களுக்குக் கண்!......

(முரளி போடுகிறான்)

மஞ்சரி:—பெண்ணே!......நீங்கள். பேசுவதெல்லாம்எனக்குப் பிடிக்கவில்லை......(அழுது கொண்டு) கலகலவென்றிருந்த வீட்டிற்குள் அழுகையைக் கொண்டுவந்து விட்டீர்களே!......

பூர்ணிமா:—தாயே!...ஆத்திரப்படாதீர்கள்! எல்லாக் கஷ்டத்திற்கும் இந்த அரசனே காரணம்!......

மஞ்சரி:—(வருத்துடன்)....போடி போ! அந்தப்பாவி அசோகனே காரணம்!......

பூர்ணிமா:—அம்மா! அந்த உத்தமரைத் தூஷிக்காதீர்கள்!... அவர்தான் எங்களையெல்லாம் வாழ்விக்க வந்த மனித தெய்வம்!......

(அப்போது சந்திரசேனனும் அவனைத்தொடர்ந்து சில வீரர்களும் திடீரென்று உள்ளே பிரவேசிக்கிறார்கள்.மஞ்சரி நடு நடுங்கிப்போய் கல்லாக நின்றுவிடுகிறாள். பூர்ணிமா மட்டும் கலங்காமல் நிற்கிறாள். வாஸந்தியோ பிதற்றிக்கொண்டேயிருக்கிறாள்.)

சந்திர:—(பூர்ணிமாவை பார்த்ததும் ஆச்சரியப்படுகிறான்)... ...வீரர்களே!......இதோ இருக்கிறாள் அந்த முரளிப்பயலின் துணைவியான பலே கள்ளி!கடைசியாக அகப்பட்டுக் கொண்டாள்! இவளைக் கைது செய்து விலங்கிடுங்கள்!...

ஒரு வீரன்:—(தயங்கியவனாய்)...பிரபுவே!......இவள் பெண்ணாயிற்றே!......

சந்திர:—(கோபாவேசத்துடன்)...உஸ்! உன்னையாரடா கேட்டது? கட்டளையை நிறைவேற்று! என் சர்வாதி

சம் தெரியாதடா!...உம்! நடத்து! காரியத்தை!......
(வீரர்கள் பூர்ணிமாவைக் கைது செய்து விலங்கிடு கிறார்கள்.)

(சந்திரசேனன் இங்குமங்கும் வீட்டினுள்ளே உலாவி விட்டு, வாஸந்தியின் படுக்கையறைக்கு வருகிறான். வாஸந்தியின் அபாயமான உடல் நிலையைக் காண் கிறான்)......

சந்திர:—(தனிமையில்) அம்மா! —மேலோகம் போய்க்கொண் டிருக்கிறாளோ!...போ அம்மா போ!...வேகமாய் போய், உனக்குப் பின்னால் வரவிருக்கும் அசோகனுக்கும் இடம் தேடிவை!...

(வெறியன் மாதிரி பலக்க கட்டிடமே அதிரும்படி சிரிக்கிறான்)......

(சந்திரசேனன் வெளியே போகிறான். அவனைத் தொ ர்ந்து வீரர்களும் பூர்ணிமாவை இழுத்துக் கொண்டு போகிறார்கள்)......

பூர்ணிமா:—(கொஞ்சம் தயங்கி நின்று)......(மஞ்சரியிடம்) தாயே!...வாஸந்தியைப் பார்த்துக்கொள்ளுங்கள்! ஜன்னி வெறியில் வெளியே ஓடிவிடப்போகிறாள்!......ஜாக்கிர தையாயிருங்கள்! தைரியமாயிருங்கள்! இந்த தர்பாரெல் லாம் நீடிக்காதம்மா!...இவர்கள் எல்லாம் அழிந்துதான் தீரவேண்டும்! இவர்களின் அழிவின் மத்தியில் தான் நியாயம் பிறக்கப்போகிறது; அசோகரின் சத்தியக்கொடி பறக்கவும் போகிறது!......(சந்திரசேனனைப் பார்த்து)... ஏ! ஆணுருக் கொண்ட அலியே! பெண்களிடத்தில் 'வீர' ங்காட்டும் 'சூரப்'புலியே!...கொஞ்சம் பொறு! மக்கள் உனக்குச் சரியான பாடம் கத்றுக்கொடுப்பார்!......

சந்திர:...(கோபத்துடன் பூர்ணிமாவைப் பார்த்து) அடி போடி! கள்ளி! மக்களாவது மண்ணாங்கட்டியாவது)!... ...வெறும் குலைக்கிற நாய்கள்!...போ!...போ!...உனக்கு நான் நல்ல பாடம் கற்றுக்கொடுக்கிறேன்!......

(சந்திரசேனன் விரைந்து சென்று விடுகிறான், வீரர் களின் காவலுடன் பூர்ணிமாவும் போகிறாள்)......

(வாஸந்தியோ இன்னமும் பிதற்றிக் கொண்டிருக் கிறாள்).

**அங்கம் 4]** **[காட்சி 4**

[அரசருடைய மாளிகை. இரவு]

அரசர் :—(தனிமையில்)...என்னைச்சுற்றி என்ன நடக்கிறது?

லையா ?......சந்திரசேனன் இப்போதெல்லாம் இங்கு ஏன் வராமலிருக்கிறான் ?......வந்தாலும் என்ன சொல்லுகிறான்....ஒன்றுமில்லை !......அவன் மர்மமாக ஏன் நடந்து கொள்ளவேண்டும்.........ஆமாம்! என்னுடைய அதிகாரத்தை அவன் செலுத்துகிறான் !...கஜானாவில் பணமில்லையாமே !.........அவ்வளவு பணமும் எங்கே போய் விட்டது ?......மாயமாய் பறந்தோடி விட்டதா ?...... இல்லையில்லை !......இன்று இரவு வருவதாகச் சொன்ன சந்திரசேனன் ஏன் இன்னும் வரவில்லை......அவன் வர மாட்டான் !.........என்னுடைய அதிகாரத்தை அவன் எடுத்துக்கொண்டுவிட்டான் !......எனக்கு ஒரு அதிகாரமும் இல்லை !......மூளை சுற்றுகிறது !...ஒன்றும் புரியவில்லை ?...அவன் அதிகாரமாடுகிறானா ?.........இது யார் குற்றம் ?......இதற்கெல்லாம் நானே பொறுப்பாளி !...

(அரசருக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரளுகிறார். அவர் மனதில் பெரும் புயல் அடித்துக் கொண்டிருக்கிறது. வெகு நேரங் கழித்து அவர் நித்திரையில் ஆழ்ந்து விடுகிறார். நித்திரையில் அவர் கனவு காண்கிறார்.)

## (கனவில்)

(பனிக்கட்டி உறைந்த பிரதேசத்தில் அரசர் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார். திக்குத் தெரியாது, பயங்கர உணர்ச்சியுடன் அவர் இங்குமங்கும் ஊசலாடிக்கொண்டிருக்கிறார்.)

(கொஞ்சதூரத்தில் இருந்த கரடுமுரடான ஒரு மலையின் அடிவாரத்தை அவர் அடைகிறார். அங்கே ஒரு குகை தென்படுகிறது. அதற்குள்ளே போகவேண்டுமென்று அவர் முடிவு செய்கிறார். ஆனால், அவருக்குத் தைரியம் இல்லை. சமாளித்துக் கொண்டு, உள்ளே ஒரு அடி எடுத்து வைக்கிறார், ஆனால், பயங்கரத்துடன் திரும்பி விடுகிறார். அப்போது திடீரென ஒரு அசரீரியின் குரல் குகையின் உள்ளிருந்து கிளம்புகிறது.)

அசரீரி ;—அரசே !...என்னை விட்டு விட்டுப் போய்விடாதீர்கள் !...நில்லுங்கள் !......இவ்வளவு தூரம் வந்துவிட்டு இப்படிப் போய்விடலாமா ?......

அரசர் :—(கலவரத்துடன்)...நீ யார் ?...என்னை நிற்கும்படி ஏன் சொல்லுகிறாய் ?......

அசரீரி :—நான் மாளிட குலத்தின் ஆவி !...இங்கேதான் தடுமாறிக்கொண்டிருக்கிறேன் !.........என்னுடைய பழங்காலத் தவறுகளுக்காக நான் தாங்க முடியாத வேதனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு

விமோசனம் அளிக்கவல்ல ஒருவரை நான் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன்......ஒருக்கால்...... அவர் நீராக இருக்க முடியுமோ, என்னவோ !......

அரசர் :—(தனக்குள்) இதென்ன ?...உருவமில்லாத ஒருகுரல் என்னென்னவோ சொல்லுகிறதே !...இந்த அதிசயத்தைப் பூராவும் தெரிந்து கொள்வேண்டும் !......(அசரீரியிடம்)......ஆமாம் !...நீ எதிர்பார்க்கும் மனிதன் நானே! உனக்கு விடுதலை கொடுத்துவிட்டேன். இன்று முதல் நீ சுதந்திரமான புருஷன் !......

அசரீரி ;—இது உண்மைதானே ? எவ்வளவு ஆனந்தம் !... இந்த உதவிக்காக உமக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் !......

அரசன் :—நான் கேட்கும் ஒரு கேள்விக்கு நீ சரியான பதில் அளித்தாலே போதும் !...அதுவே நீ எனக்குக் காட்டக் கூடிய நன்றியுள்ள மரியாதையாகும் !......

அசரீரி :—கேளுங்கள் !......

அரசர் :—சர்வவல்லமையுள்ள சாகஸ மனிதன் சுலபமாகவும், பூரணமாகவும் எப்படி அழிகிறான் ?........எவரேனும் அவனைக் குரூரமாகக் கொலை செய்து விடுகிறார்களா ?......

அசரீரி ;—(வருத்தத்தொனியில்)...அந்தோ !......அவன் எவராலும் கொலை செய்யப்படுவதில்லை!......அவனே தற்கொலை செய்து கொள்ளுகிறான் !......ஏழு கடல்களையும் வானத்தையும், பூமண்டலத்தையும் அவன் அடக்கியாள முடிகின்றது என்பது உண்மையே. எவ்வளவு வல்லமைசாலியாக இருந்தும், அவனால் தன்னுள்ளே யிருக்கும் 'அகங்கார'த்தை அடக்கிக்கொள்ள முடிகிறதில்லை. இந்த 'அகங்கார'மே அவனை முடிவில் அழித்து விடுகிறது !...

அரசர் :...அப்பா !: ........

அசரீரி :—இது முற்றிலும் உண்மையே. சகோதரனுக்கெதிராக சகோதரனே கிளம்புகிறான் : மனிதனுக்கு எதிராக மனிதனே போராடுகிறான் ; ஆடுகளை வெட்டிக்குவிப்பது போல இருவரும் பரஸ்பரம் வெட்டிக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள், விருப்பமிருந்தால் நீ இந்த குகைக்குள் வந்துபார். என்னுடைய இறந்த காலச் சரித்திரத்தைப் பற்றியும், அவமானத்தைப் பற்றியும் நானே உனக்கு நேரில் விவரித்துக் காட்டுகிறேன்.

(அரசர் ஆச்சரியத்துடன் அசரீரி வந்த திக்கை நோக்கியே குகைக்குள் போகிறார்.)

உள்ளே ஜகஜ்ஜோதியான வெளிச்சத்துடன் ஒரு அழகியமண்டப மிருக்கிறது. வானவில்லின் ஏழு வர்ணங்களைக்கொண்ட ஒளி அவருடைய கண்களைப் பறிக்கிறது. மண்டபச் சுவர்களிலிருந்து சங்கீதத்தின் நாதங்கள் எழுகின்றன.)

அரசர் :—(பிரமிப்படைந்தவராய்).........சூரியனையே காண வில்லையே !...எங்கிருந்து இந்த வெளிச்சம் வீசுகிறது?...

அசரீரி :—பக்கத்தில் 'பாருங்கள் காரணத்தைத் தெரிந்து கொள்ளுவீர்கள் !...

(அரசர் திரும்பி ஒரு மூலையைப் பார்க்கிருர். அங்கே ஒரு கண்ணுடிப்பெட்டியிருக்கிறது. அதற்குள் விலையில்லா பல வர்ண ரத்தினங்கள் கொட்டிக் கிடக்கின்றன. அவைகளிலிருந்து வீசும் விதவிதமான வர்ண ஒளிக்கிரணங்கள் அந்தப் பெட்டியின் கண்ணுடி வழியாக ஊடுருவிப் பிரதிபலித்து அந்த மண்டபத்திற்கு பிரகாசமான ஒலியைத் தருகிறது.

இன்னெரு மூலையில் ஒரு விசை இயந்திரம் இருக்கிறது. மழையின் முனகலையும், அலைகளின் எக்காளத்தையும், மெத்தென விழும் பனியின் ஒலியையும், நட்சத்திரங்களின் சஞ்சாரத்திலிருந்து எழும் சத்தத்தையும் இணைத்து அம்மண்டபத்தினுள்ளே இனிமையான பின்னணி கீதத்தை எழுப்புகிறது அவ்விசை இயந்திரம்)

அரசர் :—(உணர்ச்சிமேலிட்டவராய்).........ஏ! மனிதா! உன்னுடைய கீர்த்தி எவ்வளவு உயர்ந்திருக்குறது! உன்னுடைய விஞ்ஞான அறிவு எவ்வளவு விசாலமானது! ...பாவம் ! நீயுந்தான் வீழ்ந்து விடுகிருய்......எவ்வளவு பயங்கரமானது உன்னுடைய வீழ்ச்சி!......

அசரீரி:—அரசே! உங்களுடைய மனக்கஷ்டத்தை நானும் உணருகிறேன்!...ஆனுல், மனிதன் பயங்கரமாகத்தான் விழுகிருன்! அதோ! மண்டபத்தின் நடுவேயிருக்கும் அந்தச் சிலைகளைப் பாருங்கள்; அவைகளைச் சுற்றியுள்ள சுவர்களில் தீட்டப்பட்டிருக்கும் வர்ணப் படங்களையும் பாருங்கள்!......உங்களுக்குப் பதில் கிடைக்கும்!.....

(மண்டபத்தின் மத்தியிலே கரிய நிறமுள்ள சலவைக்கல் பீடத்தின் மீது தூய வெண்ணிறமுள்ள மனிதனுடைய சிலையொன்று கம்பீரமாக நிற்கிறது. சுதந்திரம், சமத்வம் என்ற வார்த்தைகள் பொறிக்கப் பட்டிருக்கும் சக்கரச் சின்னக் கொடி அச்சிலையின் மணிக்கரத்திலே இருக்கிறது, அந்தச்சிலைக்கு இடது புறத்தில், ஒரு பெண்ணின் சிலை, கலையழகுடன் நிற்கிறது. அதன் வலது கரத்தில் ஒரு கிண்ணமிருக்கிறது. அக்கிண்ணத்தின் வெளிப்புறத்தில் 'வாழ்வின் அமுதம்' என்ற வாக்கியம் செதுக்கப் பட்டிருக்கிறது, அவ்விரண்டு சிலைகளுக்குமிடையே ஒரு அழகிய குழந்தையின் சிலை இருக்கிறது. "சௌந்தர்யமான எதிர்காலத்தின் சின்னம்" என்ற வாக்கியம் பொறிக்கப்பட்ட ஒரு தங்கமயப்பலகை அக்குழந்தையின் காலடியில் வைக்கப்பட்டிருக்கிறது)

அரசர்:—(அச்சிலைகளைக் கவனமாகப் பார்த்துவிட்டு)...(தனக்குள்)......இச்சிலைகள் பேசுகின்றன! உயிரோட்டத்து

டன், உணர்ச்சியுடன் பேசுகின்றன!......மனிதனுடைய லட்சியந்தான் சுதந்திரமும் சமத்வமும்!....வாழ்வாகிய அமுதத்தைப் பருகுவதுதான் அவனுடைய கடமை... அமுத வாழ்வே அவனுடைய அமர வாழ்வு!....சௌந்தர்ய வாழ்வே அவனுடைய சௌபாக்ய வாழ்வு!....

அசரீரி:—அந்தச் சிலைகளை நன்ருகப்பார்த்தீர்களா?....அவைதான் மனிதனுடைய உண்மையான கம்பீரத்தை எடுத்துக் காட்டுகின்றன!....

அரசர்:—இவ்வளவு கம்பீரமான மனிதன் எப்படி வீழ்ச்சியடைகிருன்?

அசரீரி:—சுவர்களைப் பாருங்கள்!....அங்கே வரையப்பட்டிருக்கும் உயிரோவியங்கள் உமது சந்தேகத்தைப் போக்கும்!...(அரசர் சுவர்களைச்சுற்றிப் பார்க்கிருர். அங்கே பலவர்ணங்களில் தீட்டப்பட்டிருக்கும் சித்திர வரிசைகளைப் பார்க்கிருர்.)

அசரீரி:—மனிதனுடைய சரித்திரத்தையே இந்தப் படங்கள் விவரிக்கின்றன. அவனுடைய வாழ்வின் பிரகாசமான அத்தியாயங்களையும், துக்ககரமான அத்தியாயங்களையுமே அந்தப் படங்கள் எடுத்துக் காட்டுகின்றன! படங்களை நன்ருகப் பாருங்கள்! பின்னர் நீங்களும் வாழ்வின் ரகஸ்யத்தை ஜீவலட்சியத்தைப் புரிந்து கொள்ளுவீர்கள்!....

(பெரிய ராணுவம் புடைசூழ, ஒரு உயரமான அழகிய வாலிபன் ராணுவ உடையில் வெள்ளைப்புரவிமீது அமர்ந்த வண்ணம், தனது உடைவாளை உயரத்தூக்கிப் பிடித்துக்கொண்டு ஏதோ சொல்லுகிருன். அவனுக்கு முன்னுல் பரந்த கடல், அவனுக்குச் சவால் விடுவது போல இருக்கிறது. அந்தப் படத்தை அரசர் உற்றுக் கவனிக்கிருர்)

அசரீரி:—அந்தப் படத்தில் இருப்பவன்தான் **மகா அலெக்ஸாந்தர்** என்ற பேரரசன். அவன்தான் உலகை முதலாவதாக ஜெயித்தவன். மேலும் மேலும் ஜயிக்க அவனுக்கு நாடுகள் கிடைக்காதபோது, அவனுக்கு முன்னுல் பெரிய சமுத்திரம் குறுக்கே நின்ற போது, அவனுக்குக் கோபம் வந்து விட்டது. "என்ன? பூமண்டலமே முடிந்து போய்விட்டதா? ஜெயிப்பதற்கு ராஜ்யங்களே இனி இல்லையா?" என்று அவன் உரக்கக் கத்தினுன்!....

அரசர்:—உலகத்தையே, ஜயிக்க அவனுக்கு ஏன் ஆசை ஏற்பட்டது?......

அசரீரி:—தான் பிறந்த சிறிய நாடு அவனுடைய அகங்காரத்திற்குப் போதவில்லை. அதனுல், அவன் ரத்த வெள்ளத்தைப் பெருக்கியம், தீமூட்டியும், ஒரு சாம்ராஜ்யத்தை

நிர்மாணித்தான். ஆனால், தன்னுடைய கொள்ளை வெற்றியின் பலன்களை அனுபவிப்பதற்கு முன்பே அவன் இறந்துவிட்டான்!....

(தன்னுடைய 32-வது வயதில், அலெக்ஸாந்தர் மரணப் படுக்கையில் கிடக்கிறான். அவனைச் சுற்றி அவனுடைய மகா சாம்ராஜ்யம் அவனை லட்சியம் செய்யாது கிடக்கிறது!...அரசர் அந்தப் படத்தைப் பார்க்கிறார்)

**அரசர்:**—(துக்கத்துடன்)...இவ்வளவு பெரிய ஏகச் சக்ராதிபதிக்கு எவ்வளவு பயங்கரமான முடிவு!......

**அசரீரி:**—பேராசையினால் தூண்டப்படும், மனிதனுடைய பலாத்கார வெற்றி இப்படித்தான் சரிந்து வீழும்!...

**அசரீரியின் பாட்டு**

சாம்ராஜ்ய போதையில் சாதித்த தென்னப்பர?
சகத் சக்தி யுகந்தோறு முனைத்தள்ள வந்தடும் !
தம் ராஜ்ய மதனிலும் தருமமே யில்லையெனில்
தகர்ந்திடு மேயது; சரித்திரம் சொல்லுமே!

(அன்பு-தியாகம், இவைகளைப் பிரதிபலிக்கும் புத்தரின் சாந்தத் தவமும் உருவமும், அவருடைய காலடியில் பிரார்த்தனை செய்யும் மகா அசோகரின் உருவமும் தீட்டப்பட்ட படத்தை அடுத்தாற் போல் அரசர் பார்க்கிறார்).........

**அசரீரி:**—அதோ பாருங்கள்!.........**அசோகரின்** மனம் கசிந்த பிரார்த்தனையை!...சாம்ராஜ்ய ஆசையை உதறித் தள்ளி விட்டு அவர் மனித சமூகத்தை நேசித்தார்!...அன்பு மார்க்கத்தைத் தழுவியதன் மூலம், அவர் ஆண்டவனின் உண்மையான பக்தரானார்!......தன்னுடைய குருநாதன் புத்தபிரானின் அருள் மொழிகளை ஏற்று, அகங்காரத்தை விட்டு, அஹிம்ஸை வழியைப் பின்பற்றியதால், அவருக்குச் சரித்திரத்தில் அழியாத புகழ் ஏற்பட்டிருக்கிறது!... சேவையும்—தியாகமுமே மனிதனின் கடமைகள் என்று அவர் உணர்ந்து, அவ்வாறு நடந்து காட்டியதால்தான் அவர் அமரத்வம் அடைந்தார்!......

(அரசர், இதைக்கேட்டதும், யோசனையில் ஆழ்ந்து விடுகிறார். அப்படியே சிறிது நேரம் நின்றுவிட்டு, அடுத்த படத்தைப் பார்க்கிறார்.)

(ராஜரதமொன்றில் பலம் வாய்ந்த ஒரு மனிதன் மேகமண்டலத்தையும் துளைத்துக்கொண்டு செல்லுகிறான். அவன் கீழேபார்த்துக்கொண்டேயிருக்கிறான். ரோமபுரியிலிருந்து எகிப்துக்கு போகும் கடல் மார்க்கம் கீழே தெரிகிறது. அவனுடைய முகம் திருப்தியால் மலர்ந்திருக்கிறது.)

**அசரீரி:**—என்ன யோசிக்கிறீர்கள்?...அந்த ரதத்தில் செல்லுகிறவன்தான் **ஜூலியஸ் சீஸர்** என்ற ஒரு போர் வெறி கொண்டலைந்த அரசன்!......அவனும் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை நிர்மாணித்தவன்தான்!...அவனுக்கும் அலக்

ஸாந்தரின் கதிதான் ஏற்பட்டது!......அதோ அடுத்த படத்தில் அவனுடைய கடைசிக்காலம் வரையப்பட்டிருக்கிறது!......

(அரசர் அடுத்த படத்தையே கூர்ந்து கவனிக்கிறார்.)

(வீரன் பாம்பேயின் சிலை ரோம் நகரத்தின் பிரதான பாகத்தில் கம்பீரமாக நிற்கிறது. அந்த சிலைக்கடியில் சீஸர் குத்துக்காயங்களுடன் இறந்து கிடக்கிறான். அவனுடைய ராஜரதம் சீஸரில்லாமல் காலியாய் நிற்கிறது. அதில் பூட்டப்பட்டிருந்த குதிரைகள் சீஸரைப்பரிதாபமாகப் பார்த்துக்கொண்டு நிற்கின்றன.)

அசரீரி:—அரசே! பார்த்தீர்களா அந்தப் படத்தை! சீஸரைப் பார்த்த வண்ணம் நிற்கும் அந்தக் குதிரைகள் என்ன சொல்லுகின்றன தெரியுமா?...“உனக்குக்கூட இந்த கேவலமான மரணந்தானே! ஏ! சீஸர்! உன்னுடைய வெற்றிகள்—பொக்கிஷங்கள் எங்கே?” என்று கண்டிப்பாய் சொல்லுகின்றன!

(தன்னையும் அறியாமல் அரசருடைய கண்களில் கண்ணீர் வழிந்தோடுகிறது.)

அசரீரி:—நகருங்கள்!......அடுத்த படத்தைப் பாருங்கள்!......அழுவதில் என்ன பிரயோஜனம்?...அகங்காரத்திற்கு ஆண்டவன் அளிக்கும் “பரிசு”கள் இவையெல்லாம்!......

அசரீரியின் பாட்டு

அகங்கார வெறியாட்ட மனைத்திலும் நீகண்ட
ஆனந்த மென்னப்பா? நீதானும் சொல்லப்பா!
பகற் கொள்ளைக் காரனின் பாதக வழிதன்னில்
பட்டாயோ நீ சுகம்! பள்ளத்திற் சரிந்தாயே!

(அரசர், கண்களைத் துடைத்துக்கொண்டு நகருகிறார். அடுத்த படம் அவரை அப்படியே ஸ்தம்பிக்கச்செய்து விடுகிறது.)

(சிலுவையில் அறையப்பட்டு மாண்டு கிடக்கும் ஏசு நாதரின் உருவம் அந்தச் சிலுவைக்கு இடது புறம் ஒரு பெரிய கூண்டு பசி கொண்ட சிங்கங்களுக்கு இரையாக்கப்பட்ட ஏசுவின் லட்சிய சீடர்களின் எலும்புக் கூடுகள் அந்தக் கூண்டிற்குள் சிதறிக்கிடக்கின்றன.)

அரசர்:—(கண்களை மூடிக்கொண்டு)...எவ்வளவு கோரம்!

அசரீரி:—கோரந்தான்!......அதிகார மமதை கொண்ட வெறியர்களுக்கு முன்னால், உன்னத லட்சியத்திற்காக மகா தியாகம் செய்த புருஷர்தான் ஏசு நாதர்!......

அரசர்:—தானே துன்பமனுபவிப்பதில் என்ன லட்சியம் இருக்க முடியும்?.........

அசரீரி:—மனிதனின் மிருக குணத்தை மாற்றவும், பிறர் துன்பப்படாமலிருக்கவுமே அவர் துன்பமனுபவித்தார்!......

உதடுகளில் புன்னகை தவழ, அவர் மரணத்தையும் தழுவிக்கொண்டார்! பிறகுங்கூட மனிதன் திருந்தவில்லையே!.........

(ஒரு நியாய விசாரனை ஸ்தலம். கலேலியோ, சவனரோலா, ஜோன் ஆப் ஆர்க் முதலியவர்கள் விசாரிக்கப்படுகிறார்கள். பிறகு அவர்கள் கட்டியிழுத்துக்கொண்டு போகப்படுகிறார்கள். "அனுசார மானவர்கள்" என்று அவர்கள் மீது குற்றம் சாட்டப்படுகிறது. பிறகு அவர்கள் உயிருடன் கொளுத்தப்படுகிறார்கள். அந்தப்படம் அரசருடைய கண்களை கலக்கிவிடுகின்றது.)

அரசர்:...(வருத்தத்துடன்)......ஆணுடையில் கையில் கொடியேந்திச் செல்லும் அந்தப் பெண்மணி யார்?......ஒளி படைத்த கண்களுடன் அவள் கலங்காது நிற்கிறாளே!...

அசரீரி:—அவள் ஒரு கிராமப்பெண். பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்தவள். மானிட சாதியின் சுதந்திரத்துக்காக அவள் போராடினாள். அதற்காக, ஆளும் வர்க்கம் அவளைச் "சூனியக்காரி" என்று பொய்யாகச் சொல்லி, உயிருடன் எரித்துவிட்டார்கள்!......

அரசன்:—மற்றவர்கள் ஏன் உயிருடன் கொளுத்தப்பட்டார்கள்?....

அசரீரி;—அகங்காரங்கொண்ட அரசர்கள், கபடமான மத குருக்கள்—இவர்களுடைய ஆதிக்கச் சுரண்டலிலிருந்து மக்களை விடுவிக்கப் பிரசாரம் செய்ததால், இவர்களும் உயிர் துறக்க நேர்ந்தது!......

அரசர்:—(தன்னை மறந்தவராய்)......என்ன மடமை!...... என்ன கொடுமை!......தன்னுடைய அல்லது தன் நாட்டின் சுதந்திரத்தை விரும்புவது ஒரு குற்றமா?......

அசரீரி;—ஒழு புழு, மற்ற எலலாப் புழுக்களையும் தின்றுவிட்டுப் பெரும் புழுவாகக் காட்சி அளிப்பது போல, ஒரு மனிதன் மற்றவர்களின் சுதந்திர உரிமைகளைப் பறித்து யதேச்சாதிகாரியாகிப் பேயாட்டம் ஆடுகிறான்! அவனைச் சுற்றி ஒரு சிலர் தாளம் போடுகிறார்கள்! அந்த மனிதனுக்கோ அல்லது அவனைச் சுற்றியாடும் ஒரு சிலருக்கோ மற்றவர்கள் சுதந்திரம் கோருவது குற்றமாகத்தான் இருக்கிறது!......

### அசரீரியின் பாட்டு

சத்திய வீரரைச் சத்குலப் பெண்டிரை
சடுதியி லொழித்திட்டால் சாந்தியைக் காண்பாயோ?
பைத்தியந் தெளிந்துமே பெருத்திறல் வழியினில்
பெற்றிடு புது உளம்! புது வாழ்விற் களித்திடு!

(பாண்டிய மன்னனின் தர்பார் மண்டபம். பாண்டிய மன்னன் ஒன்றும் புரியாதவனாய் திகைத்து வீற்றிருக்கிறான்.

தலைவிரி கோலமாய் கற்புக்கரசி கண்ணகியாள் தனது கையில் ஒரு சிலம்புடன் நிற்கிறாள். அவளது கண்கள் கோபத்தால் சிவந்திருக்கின்றன.

பாண்டிய மன்னன் தொப்பென்று கீழே சாய்கிறான். அவனுடைய உயிர் போகிறது. அவனுடன், அவனுடைய பத்தினியான ராணியும் உயிர் விடுகிறாள்.

ஆவேசத்துடன் கண்ணகியாள் அரண்மனையை விட்டு வெளியே ஓடுகிறாள். தெருவெல்லாம் அவள் அக்னியை அள்ளி வீசுகிறாள். அவளுடைய கோபம் மதுரை நகரை எரித்துச் சாம்பலாக்குகிறது.

(அந்த வரிசைப் படங்களை ஒவ்வொன்றாய் அரசர் பார்த்துக் கொண்டே நடக்கிறார்,)

அசரீரி:—சற்று நிதானமாக அப்படங்களைப் பாருங்கள்!...... நிரபராதிகளைத் தண்டிப்பவர்களின் கதி இவ்வளவு பயங்கரமாகத் தானிருக்கும்!

அரசர்:—(உணர்ச்சியுடன்)......ஏ! மனிதா!...உன்னுடைய அகங்காரமல்லவா உன்னை பூண்டோடு அழிக்கிறது!......

அசரீரி:—அரசே!......நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன் ......என் வேலை இத்துடன் முடிந்து விட்டது. கடைசியாக, நான் தங்களிடம் ஒரு விஷயத்தை ஞாபகப்படுத்துகிறேன்......மனித சமுதாயத்தின் முடிவே இதுதான் என்று எண்ணி, நீங்கள் சோர்வு கொண்டு விடாதீர்கள்! ......**தங்கள் தவறைத் திருத்திக்கொண்டு அன்புடன் சேவை செய்யும் மனிதர்கள் பெருகிவிட்டால்**, சமுதாயம் புதிய ஒளியுடன் பிரகாசிக்கும்!...பிறகு, அங்கே சாந்தம் தவழ்ந்து விளையாடும்!......

### அசரீரியின் பாட்டு

பயமில்லை; பயமில்லை; பாரினில் உனக்கினி
ஜயமுண்டு; ஜயமுண்டு; சத்தியமே! சென்றிடுவேன்

(திடீரென எல்லாம் மறைந்து விடுகின்றன!.......அரசர் திகைத்துப்போய் ஒரு மரத்தடியில் படுத்து விடுகிறார். பலமான காற்று அடிக்கிறது. மரங்கள் எல்லாம் ஒடிந்து விழுகின்றன. 'சோ' வென்ற சண்டமாருதத்தின் ஒலி அரசரை கலகலக்கச் செய்கிறது......மீண்டும் அமைதி. அரசர் எழுந்து நடக்கிறார்....ஒரு ஆவேசக்கூட்டம் அவர் மீது பாய்கிறது. அரசருக்கு ஒன்றுமே புரியவில்லை......இன்னொரு பக்கம் அரசரின் பேரால் யதேச்சாதிகாரம்ஆடிய சந்திரசேனனின் வெட்டுண்ட தலை துள்ளித்துள்ளி விளையாடுகிறது? அரசரைப்பார்த்துச் சிரிக்கிறது! அரசர் பயந்துபோய் வீறிட்டுக்கத்துகிறார்)

[கொலை, "கொலை" என்று கதறிக்கொண்டே அரசர் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டு கத்தி விடுகிறார். எழுந்து உட்கார்ந்து கொள்ளு

கிருர். சுற்றுமுற்றிலும் பார்க்கிருர். ஒருவரையும் காணேம். ஒரு சப்த மும் கேட்கவில்லை.

[முகத்தைத் துடைத்துக்கொண்டு, அரசர் எழுந்து, யோசனையில் ஆழ்ந்தவராய் அறையில் உலாவுகிருர்.]

அரசர் :—(தனிமையில்)......கனவுதான் கண்டேன் !...ஆயி னும் என்னைத் தட்டியெழுப்பும் ஒரு கனவு அது !... எனக்கு இந்தக் கனவு ஒரு......எச்சரிக்கை போலும் !......ஆம் !...நான் தவறு செய்திருக்கிறேன் ! சந்திரசேனனுக்கு சர்வ அதிகாரத்தையும் கொடுத்தது என்னுடைய குற்றமேயாகும் ; களங்கமற்றவன் என்று நான் அவனை நம்பியதும் குற்றமேயாகும் !...அவன் என் பெயரால் எனக்குப் பின்னுல் வெறியாட்டம் ஆடிவிட் டான். அசோகரைத் தண்டித்த தன் மூலம் அவன் என் நாட்டில் பெருந்தீயை மூட்டிவிட்டான் !...இதோ ! நான் ஓடுகிறேன். அசோகனின் காலடியில் வீழ்ந்து விடுகி றேன். அந்த உத்தமபுருஷர் என்னை மன்னித்து இந்த நாட்டைக் காப்பாற்றட்டும் !......

(பிரபாகரர் வருகிருர்)

அரசர் :— பிரபாகரரைத் தழுவிக்கொண்டு நீர் பெருகும் கண் களுடன்)......பிரதமரே ! நான் அபராதி !...சந்திரசேன னின் மாயையில் மயங்கி, என்னுடைய மக்களின் விரோதியாகிவிட்டேன் ; ஆள அறுகதையற்றவனுகி விட்டேன் !......என்னை மன்னித்துவிடுங்கள் !......

பிரபா :—(துக்கந்தாளாமல்)...அரசே !......உம்மைக்கடவுள் காப்பாற்றி விட்டார் !...உமக்கு ஞானம் உதயமாம் விட் டது !......நாடு பிழைத்தது !......சத்தியம் வென்றது! ......சாந்தி பிறந்தது!!!......

(அரண்மனைக்கு வெளியே பெரிய இரைச்சல் கேட்கிறது. பிரபாகர் ஜன்னல் வழியாக வெளியே பார்க்கிருர். பெரியதொரு ஜனக்கூட்டம் அரண்மனைக்கு வெளியேயுள்ள மைதானத்தில் திரண்டு நிற்கிறது "அர சர் வெளியே வரட்டும். இல்லையாஞல் அரண்மனைக்குள் பலாத்காரமாக நுழைவோம்" என்றும், "அசோகரை விடுதலைசெய்" என்றும் ஜனங்கள் கோஷம் செய்கிருர்கள். இதைப் பிரபாகரர் பார்க்கிருர். அரசரும் இந்தக் கோஷங்களைக் கேட்கிருர். அரசருக்கு துக்கம் மேலிடுகிறது)......

பிரபா :—அரசே !......உப்பரிகைக்குச் சென்று உமது ஜனங்க ளைச் சாந்தப்படுத்துங்கள். காரியம் மிஞ்சிவிடுவதற்குள் நல்லதைச் செய்யுங்கள் !......

அரசர் :—நான் தான் ராஜத்துரோகி !......அசோகர் நிர்மல மான புருஷர் !......

(வெளியே ஜனங்களின் இரைச்சல் அதிகமாகிறது. அரண்மனைக்குள் நுழைவதற்கு ஒரு பெருங்கூட்டம் முயற்சி செய்கிறது. அரண்மனைத் தலைவாயிலில் நின்ற வீரர்கள், அலையலையாய் முன்னேறிவரும் ஜனத்திரளைச் சமாளிக்கமுடியாமல் திணறுகிறார்கள்.)

[அரசர் திக்பிரமை பிடித்தவராய் உட்கார்ந்திருக்கிறார்.]

பிரபா :—(அவசரத்துடன்)......அரசே !..........இனியோசிப்பதற்கே நேரமில்லை. நீரே உமது மக்களிடம் பேசுங்கள். அசோகரை விடுதலை செய்து விடுவதாக பகிரங்கமாய் அறிவித்து விடுங்கள் !...........மக்களிடம் மன்னிப்புக் கேளுங்கள் !......

[அரசர் சரேலென்று எழுந்து உப்பரிகைக்கு ஓடோடியும் வருகிறார். கட்டுக்கடங்காத ஜனக்கூட்டத்தைப் பார்க்கிறார். அப்படியே பிரமித்து நின்றுவிடுகிறார். ஒன்றும் பேசமுடியாதபடி துக்கம் அவருடைய நெஞ்சை அடைத்துக் கொள்ளுகிறது. அவருடைய கண்களில் நீர்பெருகி வழிந்தோடுகிறது........ஜனங்களை கைக்கூப்பி நமஸ்கரிக்கிறார்......பின்பு பேசுகிறார்)......

அரசர் :—மகாஜனங்களே !......என்னை மன்னித்து விடுங்கள்! ...சமாதானமாய் கலைந்து செல்லுங்கள். அசோகரைப் பற்றிய கவலையை விட்டு விடுங்கள், அவரை நான் விடுதலை செய்து விடுகிறேன். அவரை ராஜ மரியாதையுடன் நானே நகருக்குள் அழைத்துவருகிறேன் !.........(தன்னை மறந்தவராய்)......சுதந்திரக்கலைஞர் வாழ்க !,.....அசோகர் நீடூழி வாழ்க!!...

(அரசனின் இந்தத் திடீர் மனமாற்றம் மக்களைப்பரவசப் படுத்திவிடுகிறது. எல்லோரும் ஆனந்தத்தால் குதித்துக் குதித்துக் கோஷிக்கிறார்கள். "அசோகருக்கு ஜே! அரசருக்கு ஜே!!" என்ற கோஷங்கள் வானத்தையும் எட்டுகின்றன !....பிறகு கூட்டம் கலைய ஆரம்பிக்கிறது. எல்லோரும் கலைந்து போகும் வரை, அரசர் அங்கேயே ஆனந்தப்பரவசராய் நிற்கிறார்)......

[அரசர் மீண்டும் தனது அறைக்கு வருகிறார்]

பிரபா :—அரசே ! இது மட்டும் போதாது !...விடியற்காலத்திற்குள் நீங்களே சிறைக்குப் போகவேண்டும். அப்போது தான் அசோகரை நாம் காப்பாற்றமுடியும்........அந்தச் சந்திரசேனனை நம்பமுடியாது. இவ்வளவு அமளிக்கும் காரணமான அவன், ஜனஎழுச்சியைக் கண்டு மிரண்டு, ஓடிவிட்டான் !......ஒருக்கால் அவன் சிறைக்குப் போயிருப்பான்......தாமதிக்கக்கூடாது, நீங்களே ஓடுங்கள் !......அசோகரைக் காப்பாற்றவேண்டும் !...

அரசர் :—ஆம் !......அவரைக்காப்பாற்றவேண்டும் !...இதோ நானே ஓடுகிறேன்.

(அரசர் விரைவாகப் போகிறார்)

பிரபா :—(ஒரு வீரனைக்கூப்பிட்டு) நேற்றிரவு மஞ்சரியாய் வீட்டில் என்ன நடந்தது? உண்மையைச் சொல்!...

வீரன் :—(பயந்தவனாய்) அங்கே, சந்திரசேனன் பெரிய ஆர்ப் பாட்டம் செய்தார். ஒரு இளம் பெண்ணைக் கைது செய்து விலங்கிட்டுப் போனார்கள் சில வீரர்கள்!...அந் தம்மாள்—வாஸந்தியம்மாள் பித்துப் பிடித்துப்போய் பிதற்றிக் கொண்டிருந்தார்கள்!...பாவம்!......பார்க்கப் பரிதாபமாயிருந்தது!...

பிரபா :—(கோபத்துடன்).....அவனே பெரிய குற்றவாளி!... (வீரனிடம்) நீ வேகமாக ஓடி அந்தப்பெண்ணை உடனே விடுதலைசெய்து விடும்படி சேனாதிபதியிடம் சொல்லி விடு!...நாளைக்காலை அசோகரை வரவேற்க எல்லா ஏற் பாடுகளையும் செய்யும்படியும் அவரிடம் சொல்!...

(வீரன் போகிறான்)

பிரபா :—(போய்க் கொண்டே)...அப்பா!...நன்மை பிறந் தது!...புன்மை மாய்ந்தது!!...அசோகரும், அரசரும் நீடூழிவாழட்டும்!...அக்கிரமத்தைக் கண்ட என்னுடை கண்கள் நியாயத்தையும் பார்க்கிறது!......(போகிறார்)...

**அங்கம் 4] [காட்சி 5**

[மலையுச்சியிலுள்ள கோட்டைச்சிறை.

அருணோதயத்திற்கு முன்பு. அசோகனை ஒரு காவலாளி எழுப்பு கிறான்.

அசோகன் எழுந்து உட்கார்ந்துகொண்டு அமைதியாகப்பாட ஆரம் பித்து விடுகிறான்.]

**ராகம்:—தோடி**

**பல்லவி**

மாந்த ரென்றுலகில் வாழ்ந்திட்டாலே போதுமா
மானமும் மாண்புமின்றி

(மாந்த)

**அ. பல்லவி**

சாந்திச் சுடரினிற் தழைத்திடும் பேரெழிற்
சத்திய வாழ்வினிற் சரண்புக மனமின்றி

(மாந்த)

**சரணம்**

இழைந்திடு மின்னிசைக் கீதத்தில் மூழ்கியே
இறவாத புகழுடை யின்பங்கள் படைத்திடும்
பிழையற்ற நெறியினிற் பெருமிதங் கொண்டுமே
புதுயுகங் கண்டும் போதமேயில்லாமல்

(மாந்த)

(சிறைக்கு வெளியே உயரமானதொரு குன்றின்மேல் தூக்குமரம் இருக்கிறது.)

சிறையதிகாரி அசோகனின் தூக்கு தண்டனையை குறித்த காலத்தில் நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்து கொண்டிருக்கிறார்.

தூக்குக்கயிறு, கருப்பு நிறமுள்ள துணியாலான முகமூடி முதலிய சாமன்களுடன் ஒரு காவலாளி தயாராயிருக்கிறான்

சந்திரசேனன் அசோகனின் அறையை நோக்கி வருகிறான். அவனைத் தொடர்ந்து விமலன், சிறையதிகாரி, ஆயுதந்தாங்கிய காவலாளிகள் முதலியோர் வருகிறார்கள்.]

சந்திர :—(அறைக்கு வெளியே)...(தனக்குள்)..........அசோகனுடைய பாட்டெல்லாம் இன்னும் ஒரு மணி நேரத்திற்குத் தான்!......பிறகு, இவன் பிணமாகத் தொங்கிவிடுவான்!...இவனுடைய உடலைக்கூட அந்த நடனக்குயில் பார்க்கமுடியாது!...பிறகு என்ன?...வாஸந்தியும் மாண்டொழிவாள்!......இவனுடைய உயிர் நிலையிலா அவளுடைய உயிரும் இருக்கிறது...(பற்களைக் கடித்துக் கொண்டு)...இந்த உயிர்க்கூட்டை அழித்து விடுகிறேன்! ...கலையாவது கிலையாவது...எல்லாம் வெறும் கபடம்!... இந்த அரசன் ஒரு கோழை!......வெறும் கூச்சலுக்குப் பயந்து விட்டான்!...கிடக்கிறான் அந்தப்பேடி!...ஆளப் பிறக்காதவன்!...(ஆடிக்கொண்டு)......நான் தான் அளப் பிறந்தேன்!...ஆண்டு அனுபவித்தேன்!......பம்பரம் போலே எல்லோரையும் ஆட்டிவைத்தேன்!...இதோ! ......எனக்குப் போட்டியாயிருக்கும் இந்த பாடகனையும் ஒழித்துவிடுகிறேன்!......(அசோகனின் அறை திறக்கப்படுகிறது. பாட்டை நிறுத்திவிட்டு அசோகன் புறப்படத் தயாராய் எழுந்திருக்கிறான்.)

சந்திர :—(வெறுப்புடன்) அசோகரே!...உமது தண்டனைக் காலம் நெருங்கிவிட்டது......அரசருடைய உத்தரவை நிறைவேற்ற வேண்டும்...புறப்படுங்கள்.

அசோகன் :—(புறப்பட்டுக்கொண்டே)......இதோ!...தயாராயிருக்கிறேன்..........மரணத்தை முத்தமிட்டு வரவேற்க எனது கைகள் துடிக்கின்றன!..........கடவுள் என்னை அழைக்கிறார்!...

(எல்லோரும் வெளியே வந்து, வாயிலைக்கடந்து அந்தக் குன்றின்மீது ஏறுகிறார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாக இருள் அகன்று கொண்டிருக்கிறது. அருணனும் தனது அக்கினி கோளத்திலிருந்து ரத்தச்சிவப்பான அடிவானமிட்டுக்கொண்டு கிளம்பத் தயாராயிருக்கிறான்.

விடியற்காலை மலர்ச்சியின் மந்தமாருதம் ஜில்லென்று வீசுகிறது. கோழிகள் கூவுகின்றன. ஆகாயத்தில் பறவைகள் பறக்கத் தொடங்கு

கின்றன. தொலை தூரத்தில் ஆலய மணி 'கணீர் கணீர்' என்று முழங்கு கிறது.

அசோகனே பாடிக்கொண்டே குன்றின் மீது ஏறுகிறன். அந்தப் பாட்டின் மெல்லிய இழைபோன்ற நாதஞ்சாரம் காற்றினிலே மிதந்து வருகிறது.)

ராகம்:—கமாஸ்

பல்லவி

அருளுண்டு மருளில்லை மனமே—இந்த
அகிலத்தை யணைத்திடும் அன்புண்டு; பயமில்லை
(அருளு)

பல்லவி

திருவுண்டு தெய்வத்தினுலே—எண்ணத்
தெளிவான மேன்மையின் திறமுண்டு; திமிரில்லை
(அருளு)

சரணங்கள்

அறமுண்டு அண்டத்தைப்போலே—அகண்ட
அறிவுண்டா மாதாரம்போலே
உறவாகித் துணைநிற்கும் ஒளியின்றி வேறில்லை
உளமுண்டு; வளமுண்டு; உன்னத மணமுண்டு.
(அருளு)

அலமுறும் உலகத்தினிலே—அகண்ட
சக்தியாம் பாதையினிலே
எல்லோரு மொன்ருகி இணைந்துமே யிருந்திடில்
எந்நாளும் சாந்தமே எங்கினும் முழங்கிடும்
(அருளு)

## (மலையடி வாரத்தில்)

[வெண்மையான புரவியொன்றிலிருந்து அரசர் அவசரமாகக் குதிக் கிருர். அசோகனின் மனோரம்மியமான கீதம் அவரைச் சிறிது நேரம் பிரமிக்கச் செய்து விடுகிறது. அந்தக்கீதம் வந்த திக்கைநோக்கி அரசர் அதிவேகமாய் மலைமீது ஏறிப்போகிருர்.

சூரியதேவனும் உதயமாகிவிட்டான். அரசரும் தூக்கு மரத்தண்டை வந்துவிட்டார். அசோகனுடைய முகம் கருப்புநிற முகமூடியால் மறைக் கப்பட்டிருக்கிறது. கழுத்தில் கயிறு மாட்டப் பட்டிருக்கிறது. கயிற்றின் சுருக்கை இழுக்கும் தருவாயிலிருக்கிருர்கள் இரு கொலையாளிகள்.

உத்சாகமாயிருந்த சந்திரசேனனும், விமலனும் தண்டனையை நிறை வேற்றத் தயாராயிருந்த கொலையாளியும், சிறையதிகாரியும் அரசரைக் கண்டதும் திகைத்து நிற்கிருர்கள்.

அசோகனின் வாயிலிலிருந்து வந்து கொண்டிருந்த கீதமோ நின்ற பாடில்லை. அரசரை இந்தக் காட்சி ஒரு உலுக்கு உலுக்கி விடுகிறது. அவ ருடைய கண்களில் நீர் பெருக்கெடுத்து ஒழிய ஆரம்பித்து விடுகிறது.

சந்திரசேனனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவனும் விமலனும் ஒரு வரையொருவர் கலவரத்துடன் பார்த்துக் கொள்கிருர்கள். அரசர் அவர் களைக் கோபாவேசத்துடன் பார்க்கிருர். அவர்கள் தலைகுனிந்து கொள்ளு கிருர்கள்.

அரசர் :—(சிறையதிகாரியிடம்)...நிறுத்துங்கள் இந்தக்கொலை பாதகத்தை !...(வீரர்களைப்பார்த்து).....(கோபத்துடன்) இந்தச் சந்திரசேனனையும், விமலனையும் கைது செய்யுங்கள். அசோகரிருந்த அதே அறையில் இவர்களைத் தள்ளி அடையுங்கள் ! இந்த வஞ்சகர்கள், பாசாங்குக்காரர்கள் காமப்பேய்கள்......அங்கேயே கிடந்து சாகட்டும் !...... (கொலையாளிகளைப்பார்த்து)...அவருடைய முகத்தைத் திறந்துவிடுங்கள் !...அந்த முகமூடியைக் கிழித்தெறியுங்கள !...கயிற்றை அறுத்தெறியுங்கள் !...

(வீரர்கள் சந்திரசேனனையும், விமலனையும் கைது செய்கிறார்கள். அசோகனின் முகத்தை மறைத்திருந்த முகமூடியும், கழுத்திலிருந்த சுருக்குக் கயிறும் அகற்றப்படுகின்றன. அப்போதும், கண்களை மூடிக் கொண்டு தன்னை மறந்து அசோகன் பாடிக்கொண்டிருக்கிறான்.

**ராகமாலிகை.** **விருத்தம்**

மண்ணரசும் விண்ணரசும்
  மதித்துன்னை நான் வேண்டேன்;
எண்ணரிய பிறப்பிறப்பும்
  எனைவிலக நான் வேண்டேன்;
நண்ணிய தீத்துயரமெல்லாம்
  நலிந்தொழிந்தே அனைத்துயிரும்
கண்ணிய நல்வாழ்வு பெறக்
  கடவுளுனை வேண்டுவனே !

களங்கமற்ற லாவண்ய பிம்பமாய்த் திகழும் அசோகனின் முகமும், அதன்மீது நடனமாடும் சாந்த சௌந்தரியமும், அதன் வாயினின்று எழுந்து சகல லோகங்களையும் ஆக்ரஷிக்கும் மோகன கீதத்தின் ரீங்கார நாதமும் அரசரை பிரமிக்கச் செய்கிறது.

அரசர் ஓடிப்போய் அசோகனின் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்கிறார். ஆனால், அசோகனோ அசையாத கற்சிலைபோல நின்று கொண்டு கானமழை பொழிந்து கொண்டிருக்கிறார். பிறகு, அரசர் எழுந்து அசோகனை இறுகக்கட்டித் தழுவிக்கொண்டு விம்மி விம்மி அழுகிறார். இந்தக்காட்சி அங்கேயிருந்த அனைவரையும் உருக்கிவிடுகிறது. அவர்களும் அழ ஆரம்பித்து விடுகிறார்கள்.

இந்த நிலையில் கிழவரான பிரபாகரரும் தள்ளாடிக் கொண்டே அங்கு வந்துவிடுகிறார். அவரும் அந்தக்காட்சியைக் கண்டதும் ஸ்தம்பித்து நின்றுவிடுகிறார்.)

அரசர்;—(அசோகனை வணங்கிய வண்ணம்)...அசோகரே!... என்னை மன்னித்து விடுங்கள்!...உமது பெருமையை அறியாது, தீயவனை நல்லவன் என்று நம்பி, அவனுடைய பேச்சைக்கேட்டுத் தங்களுடைய உயிரை மாய்த்துவிடவிருந்த என்னை மன்னித்து விடுங்கள்!

அசோகன்:—(பாட்டை நிறுத்திவிட்டு கண்களை திறந்து)... என்ன இது?...என்னை எவரோ மீண்டும் இந்தப் பாவ

பூமிக்கே தள்ளிவிட்டார்களே!...(அரசனரைப் பார்க்கிறார்) ...என்னை விட்டு விடுங்கள்!...என்னைத் தூக்கிலிடுங்கள்! ...அதோ சூரியன் அஸ்தமாகிவிட்டான்!...என்னை நதியின் ஸ்படிகத் தண்ணீர் ஆலிங்கனம் செய்து கொள்ளச் சித்தமாயிருக்கிறது!...

அரசர்:—(கைகூப்பிய வண்ணம், கண்களில் நீர் பெருக)...... அசோகரே!...என்னை மேலும் மேலும் சோதிக்காதீர்கள்!...தவறை மன்னிப்பதுதானே தங்களுடைய பவித்திரமான குணம்!...

பிரபா:—அசோகரே! நடந்ததை மறந்து இந்த நாட்டின் கீர்த்தியைஉயர்த்துங்கள்!...(கீழே பார்த்து)..அரசே!...அதோ வாஸந்தியும் ஓடிவருகிறாள்!......

(எல்லோரும் கீழே பார்க்கிறார்கள். "அசோகரே." என்று அலறிக்கொண்டு தட்டுத்தடுமாறி வாஸந்தி மேலே வருகிறாள். பயத்தால் விகாரமடைந்த முகத்துடனும் தலைவிரிக் கோலமாயும் அவள் ஓடிவந்த காட்சி நெஞ்சையள்ளும் பரிதாபமா யிருந்தது. ஓடோடியும் வந்த அவள், வந்தவுடன் நேரே அசோகனின் காலடியில் வீழ்ந்து பிரக்ஞையற்று விடுகிறாள்.)

[அசோகன் உடனே வாஸந்தியை வாரியெடுத்துப் பத்திரமான இடத்தில் படுக்கவைக்கிறான். எல்லோருடைய கண்களும் அவள் மீது பதிந்திருக்கின்றன.

அதே சமயம், முரளியின் தலைமையில் ஒரு சிறு கூட்டமும், பூர்ணிமா கிழவி மஞ்சரியை இழுத்துக்கொண்டும், முகத்தை மறைத்துக்கொண்டு மாலதியும் அங்கே ஓடிவருகிறார்கள்.

வாஸந்தியின் நிலையைக்கண்ட மஞ்சரி கோவென்று அழுகிறாள். அசோகன் அவளுக்கு ஆறுதல் சொல்லுகிறான்.

சிறைவாயிலில் அரசரின் ராணுவம் அணிவகுத்து நின்று வாத்தியங்களை முழக்குகின்றன. மரியாதை குண்டுகள் வெடித்த வண்ணமாயிருக்கின்றன.]

அரசர்:—(அசோகனை வணங்கிய வண்ணம்)...., ...அசோகரே! .........எழுந்திருங்கள்,......

பிரபா:—(அசோகனிடம்)......ஆம்! புறப்படுங்கள்!...ரதங்கள் தயாராயிருக்கின்றன...வாஸந்தியையும் இதர ஸ்திரிகளையும் ஜாக்கிரதையாக அழைத்துச் செல்ல ஏற்பாடாய்விட்டது!...

அரசர்:—ஆமாம்!...அசோகரே! உம்மை ரதத்தில் அமர்த்தி நானே சாரத்யம் செய்யவேண்டும்.........சத்தியமான கலைஞனுக்கு முன்பு மன்னனின் மடமையும், கர்வமும் பணிந்து விட்டன என்பதை மக்களுக்குப் பகிரங்கப் படுத்த வேண்டும்!......அப்படித்தான் நான் பிராயச்சித்தம் செய்து கொள்ளவேண்டும்!...

(அசோகன் எழுந்திருக்கிறன். வாஸந்தி பிரத்தியேகமான ரதத்திற்கு தூக்கிச் செல்லப்படுகிறள். அவளுடன் பூர்ணிமாவும், மஞ்சரியும் செல்கிறார்கள். அரசர் அசோகனுடன் புறப்பட ஒரு அடி எடுத்து வைக்கிறர்.).........

அரசர்:—(சிறையதிகாரியிடம்)......இன்னும் சிறையில் எத்தனை பேர் இருக்கிறர்கள்?......

சிறையதிகாரி:—சில கவிராயர்களும், பாடகர்களும்!...

அரசர்:—(கோபத்துடன்)...அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்?

அசோகன்:—என்மேலுள்ள ஆத்திரத்தில், அவர்களையும் இங்கே சந்திரசேனன் அடைத்து விட்டார்!......

அரசர்:—(ஆத்திரத்துடன்)......எல்லாம் என்பேரால் அவன் நடத்திவிட்டான்!...(சிறையதிகாரியிடம்) அவர்களையும் விடுதலை செய்துவிடும்!......இந்தப் பெரிய சிறையில் அந்தப் பாவிகளைத் தனிமையில் அடைத்துவிடும்!...... அவர்கள் அங்கேயே சாகட்டும்!......

அசோகன்:—அவர்களையும் மன்னித்து விடுங்கள்!

அரசர்:—(பிரமித்தவராய்)......யாரை மன்னிப்பது?...... அசோகரே!......உமது வார்த்தையை......

அசோகன்:—அரசே!...எனது வார்த்தையைக் கேட்டு நடக்குமாறு நான் தங்களுக்கு கட்டளையிடத் தயாராயில்லை!... ...சந்திரசேனரிடம நாம் பகைகொள்ள வேண்டியதில்லை; அவரை இந்நிலைக்கு மாற்றிய அதிகார அமைப்பைத்தான் நாம் வெறுக்கவேண்டும். அதுதான் அவரைக் கெடுத்தது. இன்னொருவன் அவர் பதவியில் இருந்தாலும் அவரும் இப்படித்தான் நடந்துகொண்டிருப்பார்!......

(அப்போது முகத்தை மறைத்துக் கொண்டிருந்த மாலதி அரசரின் காலடியில் விழுந்து விடுகிறள்.)......

அரசர்:—(திடுக்கிட்டவராய்)......நீ யாரம்மா?...எழுந்திரு!... உனக்கு என்ன வேண்டும்!......

மாலதி:—எனக்கு என் நாயகன் வேண்டும்!......

அரசர்:—(ஆச்சரியத்துடன்)...பெண்மணியே!......உன் முகமூடியை எடுத்துவிடு!...உன் முகத்தைக் காட்டு!......... உன் நாயகன் யார்?......

மாலதி;—அரசே! என்னை மன்னிக்கவும்! என் நாயகன் உத்திரவிடும்வரை நான் என் முகத்தை எவருக்கும் காட்ட முடியாது!......

அரசர்;—என்ன? உனக்கு விவாகம் ஆயிருக்கிறதா?......

மாலதி;—பிரபுவே!...எனக்கு மணமாகவில்லை!......

அரசர்:—(ஆச்சரியத்துடன்)......ஆனால், நீயென்ன விதவையா?......

மாலதி:—இல்லையில்லை!......

அரசர்:—பெண்ணே! உனக்கு நாயகனிருப்பதாகச் சொல்லுகிறாய்; ஆனால். விவாகமாகாதவள் என்றும் கூறுகிறாய்; நீ விதவையுமல்லள்!...நீ என்ன உளருகிறாயா?......

மாலதி:—அரசே!...எனக்கு எப்போதும் விவாகம் ஆகவில்லை; நான் கன்னிகையுமில்லை...ஆனால், என் நாயகனை நான் தெரிந்து கொண்டு விட்டேன். அவர் உத்திரவிடுவாரானால், நான் என் முகமூடியை எடுத்துவிடுகிறேன்.

(இதைக்கேட்ட சந்திரசேனனுக்கு பயம் ஏற்படுகிறது, அவனுடைய முகம் கலவரத்தால் வெளுத்துவிடுகிறது. இதை அரசர் கவனிக்கிறார்:)

அரசர்;—(கோபத்துடன்)...பெண்ணே!...உன் நாயகன் யாரென்று சீக்கிரம் சொல்லிவிடு!......

மாலதி:—அரசே! இத்தனை நாளாக உம்முடைய ஆதரவில் யதேச்சாதிகாரம் நடத்திய சந்திரசேனரே என்னுடைய ஆசை நாயகன்!...என் பெயர் மாலதி!...

(சந்திரசேனன் வெட்கத்தால் தலைகுனிந்து கொள்ளுகிறான்)

அசோகன்:—இது உண்மையே!...இந்த விவரத்தை நான் சிறையிலிருக்கும் போது என்னுடன் சிறைவைக்கப்பட்டிருந்த கருணாளன் மூலம் தெரிந்துகொண்டேன்!......

அரசர்:—(மிகக் கோபத்துடன் சந்திரசேனனைப் பார்க்கிறார்) ...எவ்வளவு பெரிய குற்றம் செய்திருக்கிறான்!...மாதரை இழிவு செய்யும் இந்தப் பாதகத்துக்குக் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும்!......

அசோகன்:—அவரை மன்னித்து, விடுதலை செய்து, மாலதியை மணந்து கொண்டு கௌரமாக வாழும் ஒரு சந்தர்ப்பத்தைச் சந்திரசேனருக்கு அளித்து விடுங்கள், அது தான் அவருக்கு நீங்கள் விதிக்க வேண்டிய தண்டனையாகும்!......

அரசர்:—(ஆச்சரியத்துடன்)...அசோகரே !...நீரே மகாத்மா !...அவனுடைய சகல ஆர்பாட்டத்திற்கும் காரணமாயிருந்த எனக்கு என்ன தண்டனையை நான் விதித்துக் கொள்வது ?......

அசோகன்:—(முக மலர்ச்சியுடன்) மக்களை உமது அதிதிபயாக மதித்து, நீர் முடி துறந்து விடவேண்டு ம்

அறிவு, திறமை, ஒழுக்கம்—இவைகள் நிறைந்த ஒரு குழுவிடம் நீதி—நிர்வாகப் பொறுப்பை விட்டு விட வேண்டும். அந்தப் **பஞ்சாயத்து ராஜ்யத்தில்** நீரும் ஒரு சாதாரணப் பிரஜையாக விருந்து நாட்டின் பொதுவான நன்மைக்காக உழைக்க வேண்டும், அரண்மனை வாழ்வு, அரச போகம்—இவைகளை மறந்து விட்டு, எளிய வாழ்க்கை நடத்துவதின் மூலமும், மக்களுக்குத் தொண்டு செய்வதின் மூலமும் நீர் உலகிற்கு வழிகாட்டியாகவிருந்து உன்னதமடைய வேண்டும்...... இது தான் நீர் உமக்கு விதித்துக்கொள்ளும் சரியான தண்டனையாகும் !

அரசர்:—(அசோகனைக் கட்டித் தழுவிக்கொண்டு)...என் ஞான குருவே !...நீர் எனக்கு ஒளி வீசும் ராஜ பாதையைக் காட்டி விட்டீர்......நான் அவ்வழியே சென்று ஆண்டவனை அடைய வேண்டும் ......(சிறையதிகாரியிடம்) சந்திரசேனனையும், விமலனையும் விடுதலை செய்யுங்கள் !......

(சந்திரசேனனும், விமலனும் விடுதலை செய்யப்படுகிறார்கள். இருவரும் அரசரை வணங்குகிறார்கள்.)

அரசர்:—நீங்கள் அசோகரை வணங்குங்கள் !......என்னையும் உங்களையும் மன்னித்தவர் அவரே !......

(சந்திரசேனனும், விமலனும் அசோகனை வணங்குகிறார்கள்,)

அசோகன்:—கடவுளை வணங்குங்கள் !......நமது தவறுகளையெல்லாம் மன்னித்து நம்மை ஆட்கொள்ளுகிறவர் அவரெ !......

(சந்திரசேனன் மாலதியுடனும், விமலன் தனியாகவும் போகிறார்கள்.)

*(அரசர், அசோகர், பிரபாகரர், முரளி முதலியொர்—வீரர்கள் புடைசூழ கீழே இறங்குகிறார்கள்.*

*சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட கருணாளன், கவிராயர்கள் பாடகர்கள் முதலியோரும் கீழே இறங்கி விடுகிறார்கள்.*

*அலங்காரமான ரதமொன்றில் அசோகர் உட்காருகிறார். அரசரே சாரதியாக அமர்ந்து கொண்டு ரதத்தை ஓட்டுகிறார். ராணுவம் அணி வகுத்துச் செல்ல, வாத்தியங்கள் முழங்க, மரியாதை குண்டுகள் வெடிக்க, 'அசோகர் வாழ்க', 'அசோகர் வாழ்க' என்ற கோஷங்கள் வானைப் பிளக்க ரதம் நகர்ப் பிரவேசம் செய்கிறது.*

*திரளான மக்கள் வீதிகளின் இரண்டு பக்கங்களிலும் நின்றுகொண் மலர்மாரி பொழிகின்றனர். அவர்களின் ஆனந்த ஆர்ப்பாட்டங்களை*

பார்த்துக்கொண்டே அரசர் ரதத்தை மெதுவாக ஓட்டிச் செல்கிறார். அசோகன், மக்களை கைகூப்பி வணங்கிக் கொண்டே போகிறார்.

ரதம் ராஜ வீதிகளில் எல்லாம் பவனி வந்த பிறகு அசோகனின் குடிசைக்கு வருகிறது.

ரதத்தை விட்டு அசோகன் இறங்குகிறார். அவனுடைய குடிசையில் கலை புத்தொளிக் கலை வீசியது.

முரளியின் முகம் ஆனந்தத்தால் பலர்ந்து பிரகாசிக்கிறது. அரசரும் பிரபாகரும் விடைபெற்றுக் கொள்ளுகிறார்கள்.)

அரசர்:—அசோகரே நான் போய் வருகிறேன்!...உமது தியாகத்தால் நான் புனர்ஜென்மம் மெடுத்திருக்கிறேன்!......

அசோகன்:—(வணங்கியபடி)......போய் வாருங்கள்!...... உம்மால் எம்முடைய தவமும் பலித்தது!......

(அரசரும் பிரபாகரரும் போகிறார்கள்).

முரளி:—குருஜீ! வாஸந்திக்கு மயக்கம் தீர்ந்துவிட்டது!...... அவள் மனமும் தெளிந்து விட்டது. ரதம் நகரில் வரும் போது, அவள் தன் வீட்டின் மாடியிலிருந்து கொண்டு பார்த்தாள்!

அசோகன்:—கடவுள் அவளைக் காப்பாற்றி விட்டார்!... கலைக்காக மட்டுமல்ல: எனக்காகவும் அவள் பிழைத்து விட்டாள்!......முரளி! வா! நாம் வாஸந்தியைப் போய்ப் பார்த்து வருவோம்!

(போகிறார்கள்)

★ ★ ★

அங்கம்-4] [காட்சி-6

[வாஸந்தியின் இல்லம். நிலவு வீசும் இரவு. வீடு முழுவதிலும் ஆனந்த நர்த்தனம். வாஸந்தியும் அசோகனும் தனிமையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

அசோகன்:—கலைவாணியே! கலையின் கரமல்லவா நம்மிருவரையும் சேர்த்து வைத்தது!...சகல கலைகளுக்கும் காதல் உணர்ச்சி தானே ஆதாரம்!......

வாஸந்தி:—(நாணத்துடன்)......ஆம்! தாஸி குலத்தவள் என்ற என் அவமானத்தையுங்கூட அது போக்கி விட்டது! தங்களுடைய ஜோதி விலாசமல்லவா இதற்குக் காரணம்!......

அசோகன்:—(வாஸந்தியைத் தழுவிக் கொண்டு)......அழகின் ஒளியே! என் வசந்தமே!......நீ களங்கமற்றவள்: கொடுமையான் காலம், ஒழுக்கங்கெட்ட சமூகம், இரக்க

மற்ற மனிதர்கள்—உன்னுடைய ஈடில்லா உறுதியைக் கண்டு பொறுமைப்பட்டே உனக்கும் இந்தப் பட்டத்தைச் சூட்டினார்கள், மதம் பிடித்த ஒரு சிலரின் குரூரமான சிருஷ்டியே இந்த தாஸி குலம் என்பது...! பிறந்ததிலிருந்து ஒழுக்கமாய் வாழும் உனக்கும் இந்தப் பட்டமா?...கடலின் அலை அலையான அழகு போல, உறுதியைப் போல நீயுமிருக்கிறாய்!...மலர்ந்த மலரும் கனிந்த பழமும் நீயும் ஒன்றுதான்!...

...(வாஸந்தியை முத்தமிடுகிறான்)...

வாஸந்தி:—(அசோகனின் கைகளைப் பற்றிக்கொண்டு)... ஆழக்கடல், அழகிய மலர், கனிந்த பழம்...இவைகளுக்கெல்லாம் ஆதாரம் கடவுள்தானே!...அதுபோல, எனக்கு ஜீவாதாரம் நீங்களே!...(கலகலவென்று சிரித்துக் கொண்டு முரளியும் பூர்ணிமாவும் வருகிறார்கள்)...

அசோகன்:—முரளி! வா!...பூர்ணிமாவின் ஜோதியில் கலந்து விட்டாயே!...

பூர்ணிமா:—(வெட்கத்துடன்)...அவரும் தன் குருவின் வழியையே பின்பற்றியிருக்கிறார்!...

முரளி:—இனம் இனத்தோடுதானே சேரும்!...

(அவர்களும் உட்காருகிறார்கள்)

[அசோகன் வீணையை மீட்டிப் பாடுகிறான். வாஸந்தி ஆனந்த நடனமாடுகிறாள். பூர்ணிமா ஜாலரா போடுகிறாள். முரளி மிருதங்கம் வாசிக்கிறான்.]

**ராகம்:—சுருட்டி**

**பல்லவி**

மங்களமே பொங்கும்—எங்கும்
மங்கள நாதனை மனத்திலிருத்திவிட்டால்
(மங்களமே)

**அ. பல்லவி**

அங்குமிங்கு மறிவை யலையவிடாது
அன்புடனவன் பாதம் அனுதின மருச்சித்தால்
(மங்களமே)

**சரணங்கள்**

நம்மொளி யிதயத்தே—சதமும்
நின்றாடும் பிரான்—அவன்
நம்முயிர்த் திருமகளைப்—பக்திபுடன்
நல்லிசை பாடிப் பணிந்து பூசித்தால் (மங்களமே)
சத்திய வெளியிலே—நின்று
சகமாடும் பிரான்—அவன்
நித்திய மானவனை—நித்தம்
நிம்மதியுடனினைத்துப் பண்பாடினால் (மங்களமே)

**சுபம்!**

# ஆடல் பாடல்

## பிழைத் திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 21 | நன்றிகேட்ட | நன்றி கெட்ட |
| 5 | 12 | வீற்றிருக்கிறார்கள் | வீற்றிருக்கிறார்கள். |
| ,, | 26 | வாஸ்ந்தி | வாஸந்தி. |
| 8 | 9 | வாஸ்ந்தி | வாஸந்தி |
| 9 | 18 | பயன் படுகினறன | பயன்படுகின்றன. |
| 10 | 18 | எனனைப் | என்னைப் |
| 39 | 32 | சேந்திடுவாளோ | சேர்ந்திடுவாளோ |
| 45. | 22 | பக்கி | பக்தி |
| 49 | 28 | பொகிறான் | போகிறான். |
| 50 | 27 | வாசந்தியும் | வாஸந்தியும். |
| ,, | 37 | ஏனம்ம்ா | ஏனம்மா. |
| 51 | 1 | ம்ார்க் | மார்க் |
| ,, | 16 | சொல்னு | சொல்லு. |
| 52 | 8 | சௌகரிய | சௌந்தரிய |
| ,, | 26 | அசோகன | அசோகன் |
| 55 | 14 | போடுகிறான் | போகிறான் |
| 56 | 27 | கத்றுக் கொடுப்பார் ! | கற்றுக் கொடுப்பர் ! |
| 59 | 3-4 | வர்ங்ண | வர்ண |
| ,, | 21 | உயர்ந்திருக்குறது | உயர்ந்திருக்கிறது. |
| ,, | 29 | தீட்ட படடிருக்கும் | தீட்டப் பட்டிருக்கும் |
| 60 | 21-22 | கொள்ளுவிர்கள் | கொள்ளுவீர்கள் |
| ,, | 40 | பெருக்கியம் | பெருக்கியும் |
| 61 | 12 | தென்னப்பர | தென்னப்பா |
| ,, | 36 | ரோமபுரியிலிருந்து | ரோமாபுரியிலிருந்து |
| 63 | 38 | பெருத்திறல் | பெருந் திறல் |
| 64 | 15 | தண்டிப்பவிர்களின் | தண்டிப்பவர்களின் |
| ,, | 38 | அரசரைப் பார்த்துச் | அரசரைப் பார்த்துச் |
| 65 | 19-20 | கணகளுடன் | கண்களுடன் |
| 67 | 36 | கண்டும் | கண்டிடும் |
| 68 | 22-23 | அளப் பிறந்தேன் | ஆளப்பிறந்தேன் |
| ,, | 41 | மலர்ச்தியின் | மலர்ச்சியின் |

| | | | |
|---|---|---|---|
| 69 | 4 | நாதஞ்சாரம் | நாத சஞ்சாரம் |
| ,, | 34 | வாயிலிலிருந்து | வாயிலிருந்து |
| ,, | 36 | பெருக்கெடுத்து ஒழிய | பெருக்கெடுத்து வழிய |
| 70 | 25 | ஆக்ரஷிக்கும் | ஆகர்ஷிக்கும் |
| 71 | 7 | சோதிக காதீர்கள் | சோதிக்காதீர்கள் |
| ,, | 33-34 | ஸ்திரிகளையும் | ஸ்திரீகளையும் |
| 72 | 17 | விடுங்அ | விடுங்கள் |
| 73 | 20 | கொன்ளுகிறான் | கொள்ளுகிறான். |
| ,, | 29 | கௌரமாக | கௌரவமாக |
| ,, | 37 | அதிதிபயாக | அதிபதியாக |
| 74 | 22-23 | வணகுங்கிறார்கள் | வணங்குகிறார்கள். |
| ,, | 26 | அவரெ | அவரே |
| ,, | 29 | முதலியொர் | முதலியோர் |
| ,, | 38 | நின்று கொண | நின்று கொண்டு. |
| 75 | 6 | களை புத்தோளிக் | புத்தொளிக் |
| ,, | 7 | பலர்ந்து | மலர்ந்து |
| ,, | 10 | புனர் ஜென்மம் | புனர் ஜென்ம |
| ,, | 25 | முழிவதிலும் | முழுவதிலும் |
| ,, | 37 | கொடுமையான் | கொடுமையான |
| 76 | 10 | கைகளைகப் | கைகளைப் |
| ,, | 15 | பூரளி | முரளி |
| ,, | 34 | திருமகளை | திருமகனை |